REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

THINAKARAN தினகரன்

2022 ஏப்ரல் 8 வெள்ளிக்கிழமை

வரு. 90 இல. 84 | Friday 08, April, 2022 | 24 பக்கங்கள் | 30/-




நெருக்கடியிலிருந்து மீள அனைவரும் ஒன்றிணைவதும் அவசியம்

# அரசியலமைப்புக்கு வெளியில் சென்று தீர்வை பெற முடியாது

## அது மேலும் பிரச்சினைகளுக்கே வழிவகுக்கும் என்கிறார் அலி சப்ரி



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அரசியலமைப்புக்கு வெளியே சென்று மேற்கொள்ளப்படும் எந்த தீர்வும் நிரந்தரமாகாது. அது தொடர் பிரச்சினைக்கே வழி வகுக்குமென முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை கவனத்தில் கொண்டு அதிலிருந்து மீள்வதற்கு எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம் என்பதே இத்தருணத்தில் ஆராய வேண்டியுள்ளது. அதற்கான வாய்ப்பையே ஜனாதிபதி தற்போது அனைவருக்கும் வழங்கியுள்ளாரென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. அவை அமைதியான போராட்டங்களாக அமைய வேண்டுமே தவிர வன்முறைக்கு வழி வகுக்கக்

06

**சம்பளம் குறைக்கப்படும் என்பதில் உண்மையில்லை**

**அரச ஊழியருக்கான ஏப்ரல் மாத சம்பளம், பண்டிகைக்கால கொடுப்பனவுக்கு அரசு ஏற்கனவே ரூ.125 பில். நிதி ஒதுக்கியுள்ளது**

சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு

# பாராளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி

## ஆளும் தரப்பு கரகோஷமெழுப்பி வரவேற்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று, (07) பாராளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டார். பாராளுமன்ற வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை, ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கரகோஷமெழுப்பி வரவேற்றனர்.

'கூடுதல் வரி சட்டமூலம்' (Surcharge Tax Bill) இரண்டாம் வாசிப்பின் போது, பாராளுமன்ற அவைக்கு பிரவேசித்த ஜனாதிபதியை, பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதட்டி அமோக வரவேற்பளித்தனர்.

சிறிது நேரம் சபையில் இருந்த ஜனாதிபதி, மக்கள் பிரதிநிதிகளின் உரைகளுக்கு தமது கவனத்தைச் செலுத்தினார்.

# எரிபொருள், Gas நெருக்கடிக்கு இவ்வாரத்துக்குள் தீர்வு காணவும்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் ஆலோசனை



எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளில் நிலவும் நெருக்கடி நிலைமைக்கு இவ்வாரத்துக்குள் தீர்வு காணுமாறு பிரதமர் உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

எரிபொருள் இறக்குமதிக்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என நிதி மற்றும் நுண்கடன் முன்னாள் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம்(06) இரவு அலரி மாளிகையில் இடம்பெற்ற ஆளும் தரப்பு குழு கூட்டம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# உலக ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் மறைவு

## புனித மக்கா மாநகரில் நல்லடக்கம்

**பேருவளை விசேட நிருபர்**



பிரபல இஸ்லாமிய அறிஞரும் அகில உலக ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவருமான சங்கைக்குரிய நஜ்முல் உலமா அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) நேற்று முன்தினம் (06) சவுதி அரேபியாவின் புனித மக்காவிலுள்ள

06


நிதி, பொருளாதார விடயங்களில் ஆலோசனை பெற

# திறமை வாய்ந்த பொருளாதார நிபுணர் குழுவொன்று நியமனம்

## ஜனாதிபதி கோட்டாபய மூவரை நியமித்தார்

பலதரப்பு விவகாரங்கள் மற்றும் கடன் நிலைபேற்றுத்தன்மை தொடர்பான ஜனாதிபதி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக புகழ்பெற்ற நிதி மற்றும் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

06


Dr. இந்திரஜித் குமாரசுவாமி


Dr. திருமதி ஷார்மினி குரே


Prof. சாந்தா தேவராஜன்

# பண்டிகைக் காலத்தில் மின்வெட்டு குறைப்பு

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மின்வெட்டு காலத்தை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ( PUCSL) தெரிவித்துள்ளது.

வார இறுதியிலும் மின்வெட்டு காலத்தை குறைக்க முடியும் என PUCSL தலைவரான ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ் விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒரு

06

# போராட்டங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டாம்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை வலியுறுத்து




போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்கள் பங்கேற்பதை தடுக்குமாறு பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களிடம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) வலியுறுத்தியுள்ளது.

அண்மைக் காலமாக இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்கள்

06

இந்திய கடனுதவி மூலமாக

# 270,000 மெ.தொன் எரிபொருள் இதுவரை இலங்கை வந்தடைவு



எரிபொருளுக்கான இந்திய கடனுதவி தொடர்ந்தும் செயற்பாட்டில் இருந்து வருவதாக தெரிவித்துள்ள இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம், இந்திய உதவியின் கீழ் மொத்தமாக 270,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகளவான பல்வேறு வகை எரிபொருட்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் 36,000 மெற்றிக் தொன் பெட்ரோல், 40,000 மெற்றிக் தொன் டீசல் அடங்கிய ஒருதொகுதி எரிபொருள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.




# அரசுடன் SLFP புரிந்துணர்வுடன்

## செயற்பட தீர்மானம்



தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு அமைவாக பாராளுமன்றத்தில் ஏற்படும் பிரச்சினைகளின் போது அரசாங்கத்துடன் புரிந்துணர்வுடன்

06



தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஆர்ப்பாட்டம் நேற்று தலவாக்கலை நகரில் நடைபெற்ற து. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான திகாம்பரம், மனோ கணேசன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டபோது....
(கிருஷாந்தன், கே.. சுந்தரலிங்கம்)



# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தால் மட்டுமே நெருக்கடிக்கு தீர்வு

## சபையில் எதிர்க்கட்சி பிரதம கொறடா உரை

05



பல வருடங்களாக சிறைகளில் வாடும்

# தமிழ் இளைஞர்களுக்காகவும் போராட முன்வாருங்கள்

05

தனமல்வில கோர விபத்தில்

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலி



தனமல்வில – உடவளவ வீதியில் 3ஆம் கட்டை பிரதேசத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக

06

# கோதுமை மா விலை மேலும் அதிகரிக்கும்

## 50 ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கை!



ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை மேலும் 50 ரூபாவால் அதிகரிப்பதற்கு கோதுமை மா நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ள அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள்

06

# மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நந்தலால் வீரசிங்க

## நாடு திரும்பியதும் கடமையேற்பார்



மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் நாடு திரும்பியதும் கடமைகளை பொறுப்பேற்பார் என்றும் அலி சப்ரி தெரிவித்தார்.

நந்தலால் வீரசிங்க முன்னர் 2011 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநராக பணியாற்றியுள்ளார்.

அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச நாணய

06

# Gas நிர்ணய விலையை காட்சிப்படுத்த வேண்டும்

## விற்பனை நிலையங்களுக்கு பணிப்பு




சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக எரிவாயுவை விற்பனை செய்வதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை, எரிவாயுவின் நிர்ணய விலையை பொதுமக்கள் அறியும் படி அதன் சகல விற்பனை நிலையங்களிலும் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் அறிவித்துள்ளது.

அதிக விலைக்கு எரிவாயு விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

# நாடளாவிய ரீதியில் அரச எதிர்ப்பு போராட்டம்

## ஐ.ம.சக்தியினால் முன்னெடுக்க முடிவு



ஐக்கிய மக்கள் சக்தி நாடளாவிய ரீதியில் அரசாங்க எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுக்கவுள்ளது.

மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகாணத் தவறியதற்கும், எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும் அரசாங்கம் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

06

# அஜித் கப்ரால் வெளிநாடு செல்ல தடை விதிப்பு



அஜித் நிவாட் கப்ரால் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வெளிநாடு செல்ல தடை விதித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

## நிறைவேற்று ஜனாதிபதி முறை மாற்றப்பட்டு

# பாராளுமன்றத்திற்கு அதிகாரம் கிடைக்கும் முறைமை வேண்டும்



நிறைவேற்று ஜனாதிபதி முறை மாற்றப்பட்டு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் கிடைக்கும் வகையிலான முறைமை உருவாக வேண்டும் என முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை தொடர்பான இரண்டாம் நாள் ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும்குறிப்பிட்டதாவது,

நாட்டில் மக்கள் போராட்டம் ஒருபக்கமிருக்க பொருளாதார நெருக்கடி நிலை மறுபக்கம் நீடிக்கிறது.இந்த நிலையில் நாம் அரசியல் லாபம் பெற முயலக் கூடாது, அரசிற்கோ எதிரணிக்கோ குற்றஞ் சாட்டிக் கொண்டிருக்காது நெருக்கடியில் இருந்து மீள முழு பாராளுமன்றத்திற்கும் பொறுப்பு உள்ளது. அனைவருக்கும் மக்கள் வாக்களித்துள்ளனர். இந்தப் பிரச்சினையை தீர்க்க தேர்தல் வரை காத்திருக்க தேவையில்லை. எதிரணி பொறுப்பாக செயற்படாவிட்டால் சஜித் வீட்டில் இருங்கள் என்ற கோசம் நீடிக்கும். யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரும். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லுமாறு 6 மாதத்திற்கு முன்னர் கோரினோம். சேதனப் பசளை திட்டம் சிறந்தது.

**முன்னாள் அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க**

பால்மா, எரிபொருள் மற்றும் மின்சாரம் என்பன தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். தற்பொழுது ஏப்ரல் மாதத்திற்கு தேவையான எரிபொருள் , கேஸ் என்பவற்றை தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் எரிபொருள், கேஸ் வரிசை நிறைவடையும். மின்வெட்டை நிறுத்தலாம். அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். 8 வீத வருமானத்துடன் முன்னேக்கி செல்ல முடியாது. கோட்டாபயவை வீட்டுக்கு செல்லக் கோருவோர் ஜேஆருக்கு என்ன சொன்னார்கள்.

**முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்**

ஆளும் தரப்பிற்கு 69 இலட்சம் கிடைத்தது போன்று எதிரணிக்கும் 55 இலட்சம் வாக்கு கிடைத்தது. அவர்கள் தொடர்பிலும் எமக்கு பொறுப்பு உள்ளது. முன்பு காபந்து அரசு குறித்தும் தேசிய அரசு பற்றியும் இடைக்கால அரசு பற்றியும் பேசப்படுகிறது. இதற்கு முன்னர் அனைவரும் இணைந்து பொறிமுறைஒன்றை உருவாக்குவோம்.

எமக்கு பாராளுமன்றத்திற்குள் உடன்பாட்டுடன் பலமான அரசை உருவாக்க முடியாவிட்டால் கல்விமான்கள்,அறிஞர்களை உள்ளடக்கிய சபையொன்றை தற்காலிகமாக அமைப்போம்.அதற்கு தேவையான திருத்தங்களை செய்வோம். புத்துஜீவிகள் கல்விமான்கள் உள்ளடக்கிய காபந்து அரசு ஒன்றை உருவாக்குவோம். நிரந்தரமான வழி ஒன்றை தயாரித்து இன்றுள்ள நிலைமையை சீராக்குவோம். இங்கு



சபை நிருபர்கள்:
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

ஒருநாடு ஒரு சட்ட ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து குழுக்களையும் அரசு வாபஸ் பெற வேண்டும்.

**மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன்**

நாடு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பல ஜனாதிபதிகள் வந்து சென்றுள்ளனர். ஆனால் ஜனாதிபதியை விலகுமாறு கோருகின்றனர். ஆனால் அவர் விலக மாட்டார்கள் என சில அமைச்சர்கள் அடம்பிடிக்கின்றனர்.

அவருக்கு வாக்களித்த மக்கள் தான் எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். மக்களின் கோசத்தை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும். தொடர்ந்து அமைச்சராக இருக்க நினைத்தால் பாரிய அழிவுக்கு





முகங்கொடுக்க வேண்டும். முஸ்லிம் மக்கள் வேண்டாம் என்று முஸ்லிம் எம்.பிகள் 7 பேரின் ஆதரவை பெற்று 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றினீர்கள். 20 திருத்தம் தான் இந்தப் பிரச்சினைக்கான ஆரம்பமாகும்.இன்றேல் பாராளுமன்றம் தான் இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுத்திருக்கும்.

ஏனைய நாடுகளும் கொவிட்டுக்கு முகங்கொடுத்தாலும் அங்கு வரிசைகள் கிடையாது.முஸ்லிங்களிடம் இருந்து மத ஸ்தலங்களை பெற்றதால் பொருளாதாரம் மீண்டதா? கோட்டாபய ராஜபக்ஷ செல்வாரா எம்.பிகள் இருப்பார்களாக என்பதல்ல பிரச்சினை. இந்த நாடு இருக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் முஸ்லிங்கள் பாதிக்கப்பட்டார்கள் எதிர்க்கட்சியிடம் திட்டம் இருக்கிறது. அனைவரும் இணைந்து நாட்டுக்கு பொறுத்தமான நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் திட்டத்தை கொண்டு வர வேண்டும்.அதற்கு எதிரணி ஒத்துழைக்க தயாராக உள்ளது.

**ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வடிவேல் சுரேஷ்**

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் மலையக மக்கள் சார்பாக பேச முன்னர் ஒரு பாடலை பாட விரும்புவதாக கூறிய அவர் " எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே..இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே,,,சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார் ..சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார்.... என்று பாடினார்.

அதன் பின்னர் உரையாற்றிய அவர், மலையக மகளைப்பொறுத்தவரையில் இரட்டிப்பு ஏமாற்றம். தேர்தல் மேடைகளில் மலையகத்துக்கு பல்கலைக்கழகம் தருகின்றோம்,நாளொன்றுக்கு 1000 ரூபா சம்பளம் தருகின்றோம் என்று சொல்லி விட்டு ஒன்றைக் கூடக் கொடுக்கவில்லை. மக்களை ஒட்டு மொத்தமாக வீதிக்கிறக்கிய கேவலமான நிலை ஏற்பட்டுள்ளது.

மாற்றம் தேவை என மக்கள் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதுதான் தீர்ப்பு. நாட்டின் அரசியல் சின்னங்கள், வண்ணங்கள் வேறு வேறாக இருந்தாலும் மக்களின் எண்ணங்கள் ஒன்றாகவே விருக்கினறன. அதற்கு கௌரவமளிக்க வேண்டும். அரசியல்வாதிகள் மக்களின் தலைவர்கள் என்றால் இந்த மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

என்றுமில்லாதவாறு பசி, பட்டினி, வறுமை ஏற்பட்டுள்ளது. மலையக மக்களை இந்த அரசு மிக மோசமாக ஏமாற்றியுள்ளது. இந்த நாட்டில் தொழில் அமைச்சர் இல்லை. நிதி அமைச்சர் இல்லை. நீதி அமைச்சர் இல்லை. இங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது?

**ராஜித சேனாரத்ன ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர்**

மக்களுக்கு உணவு இல்லை, பிள்ளைகளுக்கு பால் மா இல்லை, ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் இல்லை. மின்சாரம் இல்லாமல் தொழிற்சாலைகள் நிறுத்தப்பட்டுள்ளன நாட்டில் நெருக்கடி நிலை உக்கிரமடைந்துள்ளது. நாடு தற்போதுள்ள சூழ்நிலையில் உறுதியான அரசியல் தலைமைத்துவம் ஒன்று வழங்கப்படாவிட்டால் நாடு வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது.

---

### ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல்:

# அனைவரும் இணைந்து நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும்

### சபையில் ஜீவன் தொண்டமான்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பாராளுமன்றத்துக்குள்ளும் கோஷங்களை எழுப்பி பதாதைகளை ஏந்துவதால் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது என்றும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு காண வேண்டுமானால் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்று பார்க்காமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தீர்வு காண்பது அவசியம் அவ்வாறில்லாவிட்டால் நாம் பாராளுமன்றத்தில் இருப்பதே பயனற்றது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை தமது இராஜினாமா தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு காலம் வரும்போது பதில் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கு தேவையான யோசனைகளை இதுவரை எவரும் முன்வைக்கவில்லை.

மக்கள் பாராளுமன்றத்துக்கு வருகைதந்து தமது கருத்துக்களை தெரிவிக்க முடியாத நிலையிலேயே அவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் கோஷத்தை சபைக்குள் எழுப்புவதும் பதாதைகளை காட்சிப்படுத்துவதும் அர்த்தமில்லை. மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான விடயங்களைப் பேசுவதற்குப் பதிலாக வேறு விடயங்களையே அவர்கள் சபையில் பேசுகின்றார்கள்.

நாடு பாரிய கடன் சுமையை எதிர்கொண்டுள்ளது. அதனை மீள செலுத்துவது எவ்வாறு? பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பது எவ்வாறு என்பது தொடர்பிலேயே சபையில் காத்திரமாக உரையாட வேண்டும்.

நாட்டில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஏனைய அரச எதிர்ப்பு நடவடிக்கைகளால் எமது நாட்டின் நன்மதிப்பு உலக மட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளது. கடன் செலுத்துவதற்காக மீண்டும் கடன் பெற்றுக் கொள்ளும் நிலையே காணப்படுகிறது.

# அனைவரும் இணைந்து பொறிமுறை ஒன்றை உருவாக்கி நிலைமையை சீராக்க வேண்டும்

### ஒரே நாடு ஒரே சட்டம் வாபஸ் பெறப்படவேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடிக்கு அனைவரும் இணைந்து பொறிமுறைஒன்றை உருவாக்கி நிலைமையை சீராக்க வேண்டும். புத்திஜீவிகள், கல்விமான்கள் உள்ளடக்கிய காபந்து அரசு ஒன்றை உருவாக்க வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஒருநாடு ஒரு சட்ட ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து குழுக்களையும் அரசு வாபஸ் பெற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் அங்கு தெடார்ந்து தெரிவிக்கையில்,

இங்கு ஒவ்வொருவரும் தங்களது இயலாமையின் வாக்குமூலத்தினை பதிவு செய்கின்றனர். சபைக்கு வெளியில் நடப்பதை யாரும் யதார்த்தபூர்வமாக நோக்குவதில்லை. பொறுப்பை ஏற்கமுடியாவிடின் ஜனாதிபதி பதவி விலக வேண்டும். சிறுபான்மையினரை நோகடிக்கும் முடிவுகள் கடந்த காலத்தில் இடம்பெற்றன. ஒவ்வொருவர் மீதும் அநுர குமார மீதும் குற்றம் சுமத்துவதில் பயனில்லை. பொறுப்பை மீறி செயற்பட்டவாறு பெரும்பான்மையை காட்டுமாறு கோருகின்றனர்.

ஆளும் தரப்பிற்கு 69 இலட்சம் கிடைத்தது போன்று எதிரணிக்கும் 55 இலட்சம் வாக்கு கிடைத்தது. அவர்கள் தொடர்பிலும் எமக்கு பொறுப்புள்ளது. முன்பு காபந்து அரசு குறித்தும் தேசிய அரசு பற்றியும் இடைக்கால அரசு பற்றியும் பேசப்படுகிறது. இதற்கு முன்னர் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

40 பேர் சுயாதீனமாகியுள்ளனர். அனைவரும் இணைந்து பொறிமுறை ஒன்றை உருவாக்குவோம்.

ஆர்பாட்டங்களில் எமது பிள்ளைகளும் கூட நாம் தடுத்தும் வீதியில் இறங்குகின்றனர். எனது மகளும் மருமகனும் கூட இறங்கினார்கள். அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலை அவர்களுக்கு உள்ளது. இளைஞர்கள் மத்தியில் எதிர்காலம் பற்றி அச்சம் உள்ளது. ஜனாதிபதி தனது பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். எமக்கு பாராளுமன்றத்திற்குள் உடன்பாட்டுடன் பலமான அரசை உருவாக்க முடியாவிட்டால் கல்விமான்கள், அறிஞர்களை உள்ளடக்கிய சபையொன்றை தற்காலிகமாக அமைப்போம். அதற்குத் தேவையான திருத்தங்களை செய்வோம். புத்துஜீவிகள், கல்விமான்கள் உள்ளடக்கிய காபந்து அரசு ஒன்றை உருவாக்குவோம். நிரந்தரமான வழி ஒன்றை தயாரித்து இன்றுள்ள நிலைமையை சீராக்குவோம். ஒரே நாடு ஒரே சட்ட ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து குழுக்களையும் அரசு வாபஸ் பெற வேண்டும்.

# அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகம் அமைக்க வேண்டும்

### முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பிரதமர் உட்பட்ட அனைத்து அமைச்சர்களும் பதவி விலகி இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில் அனைத்து கட்சியையும் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்க வேண்டும். அத்துடன், நட்பு நாடுகளுடன் இணைந்து நடைமுறை பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

இதனை தவிர பொதுமக்களின் எதிர்ப்புகளை சமாளிக்க வேறு வழி இல்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் அங்கு தெடார்ந்து தெரிவிக்கையில்,

முன்கூட்டியே எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து நாம் அமைச்சர்களாக இருந்த போது எச்சரித்தோம். இந்த நெருக்கடி நிலை தொடர்வதை சில அமைச்சர்கள் விரும்பினார்கள். நாடு ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது.

தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. மூலப்பொருட்கள் கொண்டுவரப்படுவதில்லை.

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்ற பிரேரணை வேண்டும்



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை நீக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை, ஆசிய அபிவிருத்தி வங்கி சமீபத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையை அல் ஜசீராவில் பார்தரத்தாகவும்,அதன் பிரதான தலைப்பு" ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி எதிர்பாராத வகையில் முன்னேறியுள்ளது" என்று அமைந்திருந்ததாகவும், 2022 ஆம் ஆண்டுக்குள், ஆசியாவில் முன்னோக்கி வரும் பொருளாதாரங்கள் 5.2% வளர்ச்சி இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கை கூறுவதாக சுட்டிக் காட்டினார். அந்த அறிக்கையின் பிரகாரம், நமது நாடு உள்ளடங்களாக தெற்காசியாவும், கிழக்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய மூன்று பிராந்தியங்களும் கொவிட் நிலமைகளுக்கு முன்பு இருந்த வளர்ச்சி விகிதத்திற்கு திரும்பியுள்ளதாக கூறப்படுகிறது என சுட்டிக்காட்டிய அவர் அப்படியானால், நமது நாட்டை இந்நிலைக்கும், இந்த பேரழிவிற்கும் இட்டுச் சென்ற காரணிகள் என்ன? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும், குறுகிய அரசியல் கோணங்களில் பார்க்காமல் யதார்த்தத்தை புரிந்து கொள்ள முன் வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# நாடு முகம் கொடுத்துள்ள பிரச்சினைக்கு தீர்வுகாண கலந்துரையாட எதிரணி தயார்

### இடைக்கால நிர்வாக யோசனையிலிருந்து நழுவவில்லை என்கிறார் ஹர்ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைத்து செயற்படுமாறு அரசாங்கம் தெரிவிக்கும் சவாலிலிருந்து நாங்கள் நழுவிச்செல்ல மாட்டோம். நாடு முகம்கொடுத்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கலந்துரையாடல் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ் டி சில்வா தெரிவித்தார்.

கோரிக்கைக்குத் தீர்வொன்றை அரசாங்கம் முன்வைத்த பின்னர் இடைக்கால அரசாங்கம் அமைத்து பிரச்சினைக்கு தீர்வுகாண கலந்துரையாட முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். பாராளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் அங்கு தெடார்ந்து தெரிவிக்கையில்,

2020 வரவு செலவு திட்ட விவாத்தில் பேசிய போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லவேண்டும் என கோரினோம். அதனை அரசாங்கம் செய்யவில்லை.




# குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சரவை வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



ஜனாதிபதியை மாற்றுவதன்றி அமைச்சரவையிலும் அரசின் போக்கிலும் தான் மாற்றம் செய்ப்பட வேண்டும். 'குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாத்தில் உரையாற்றிய அவர்,

ஆட்சி அதிகாரம் அமைக்க ஆர்ப்பாட்டம் செய்வோர் கருதுகிறார்களா. மக்கள் வீதிக்கு இறங்குவதை நாம் எதிர்க்கவில்லை. தமது எதிர்ப்பை வெளியிட மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர்.அதனை அர்த்தமுள்ள முற்போக்கான திட்டத்தின் பக்கம் திருப்ப வேண்டும். செல்லும் விதம் தவறானது.

ஒன்றாக பணியாற்றிய பின்னர் ஏன் அது பற்றி தவறாக கூறுகிறீர்கள் என அலி சப்ரி சொன்னார் . நாம் உள்ளே இருக்கும் போதும் தவறுகளை சொன்னோம். வெளியில் இருந்தும் சொல்கிறோம். மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வர போராடி அவரை விலக்க முயல்வதாக விமர்சனம் முன்வைக்கப்பட்டது. அவரை விலக்குவதல்ல விடயம். இந்த அரசியல் முறையில் உள்ள குறைபாடு பற்றி பேசினோம். தற்போதைய நிலையில் ஜனாதிபதியை மாற்ற முடியாது. அரசின் பார்வை, போக்கு, உள்ளடக்கம் மாற வேண்டும். மக்களுக்கு புதிய நம்பிக்கை ஏற்படும் வகையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 ஏப்ரல் 8 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் பங்குனி 25
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி





தொழிலதிபர் S. தர்மராஜாவினால் கமு/திகோ/திருப்பதி. அ.த.க. பாடசாலையில் நான்கு மாணவர்களுக்கு இலவசமாக துவிச்சக்கர வண்டிகள் வழங்கிவைக்கப்பட்ட போது. நிகழ்வில் பாடசாலை அதிபர் V. உதயகுமார் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் T. நிதிவாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரமழான் சிந்தனை

## நோன்பின் பெறுமதி

அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் வழி காட்டல்களுக்கும் ஏற்ப ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று இறை வணக்கங்களில் ஈடுபவது முஸ்லிம்கள் மீது கட்டாயக் கடமையாகும். அதிகாலை பஜ்ர் முதல் மாலை மஃரிப் வரையும் உணவையும் பானங்களையும் தவிர்த்து இச்சைகளையும் கட்டுப் படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்படும் கடமையே இது. இதனை சாதாரண ஒரு செயற்பாடாக நோக்க முடியாது.

இந் நோன்பானது மனிதனுக்கு உடல், உள ரீதியாக மாத்திர மல்லாமல் பௌதீக ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் பெரிதும் நன்மை பயக்கவடியதாக உள்ளது. அதிலும் மனிதனை உடல், உள ரீதியாகப் புடம் போட்டு பக்குவப்படுத்துவதற்குரிய சிறந்த ஏற் பாடாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

என்றாலும் உணவையும், பானங்களையும் இச்சைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்படும் இக்கிரியையானது, அல்லாஹ்விடம் அளப்பரிய வெகுமதிக்குரியது. இதற்கு நபி (ஸல்) அவர்களின் பொன்மொழி நல்ல சான்றாக உள்ளது.

'ஆதமின் மகனின் அனைத்து செயல்களும் அவனுக்குரி யவை. நோன்பைத் தவிர, அது எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்' என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்ககள். *(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)*

அல்லாஹ்விடம் நோன்பு பெற்றுள்ள மகத்துவத்தை இந்நபி மொழி தெளிவுபடுத்துகின்றது. அதேநேரம் அல்லாஹ்தஆலா இறைவிசுவாசிகளுக்கென பல கடமைகளை விதியாக்கியுள் ளான். அவற்றில் நோன்பும் ஒன்றாகும். இருப்பினும் அவன் விதியாக்கியுள்ள கடமைகளில் நோன்பை அவன், 'தனக்குரிய தென்றும் அதற்கு நானே கூலி கொடுப்பேன்' என்றும் குறிப்பிட்டி ருக்கின்றான். இது நோன்பின் மகத்துவத்தையும் முக்கியத்துவத் தையும் இலகுவாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கின்றது.

ஆகவே ரமழான் நோன்பின் மகத்துவத்தையும் பெறுமதி யையும் ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்துகொள்வதோடு, நோன்பை அதற்கேயுரிய ஒழுங்கில் நோற்று, இறை வணக்கங் களில் ஈடுபட்டு இக்கடமையை நிறைவேற்ற வேண்டும். அது அல் லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்ள வழிவ குக்கும்.

மர்லின் மரிக்கார் ...

## துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த 2 சடலங்கள் வைத்தியசாலையில்

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*

அங்குனுகொலபெலஸ்ஸ வைத்தியசாலை யில் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலைசெய் யப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் இரண்டு நபர் களின் சடலங்கள் உள்ளதாக அங்குனுகொல பெலஸ்ஸ பொலிஸார் (06) தெரிவித்தனர்.

சூரியவெள பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 40 வயது ஜயந்தரோஹன, அம்ப லாந்தோட்டை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 37 வயது டப்ளியூ. பீ. தினேஸ் ஆகிய இருவருமே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள் ளதாக இனங் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் சிகிச்சைக்காக அங்கு னுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டிருந்த நிலையிலேயே இனங் காணப் பட்டுள்ளனர். பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சிறுவயது கர்ப்பம்; விழிப்புணர்வு வீதி நாடகம்

*திறப்பனை தினகரன் நிருபர்*

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு சமூக, பொருளாதார, கலாசார மற்றும் தவறான புரிதல்களே பிரதான காரணமாகும். இளம் தம்பதிகளாக வாழும் குழந்தைகளின் நிலை உட்பட பல்வேறு காரணங்களுக்காக வயதுக் குட்பட்ட கர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்து சிறுவர்களுக்கான சுமுகமான சமூகச் சூழலை உருவாக்கும் நோக்கில் அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணிய கம் கடந்த மாதம் வீதி நாடகத் தொடர் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.பத்து நாட்களில் 75க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவின் வழிகாட்டலின் கீழ், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்ட மைப்பு மற்றும் கல்வி சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. எம். தி. டி. ஜயசேகரவின் மேற் பார்வையில் இந்த வேலைத்திட்டம் நடைமு றைப்படுத்தப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக் கிய வீதி நாடக நிகழ்ச்சி ஹொரவ்பத்தானை பிரதேச செயலக வளாகத்தில் இருந்து ஆரம்ப மாகி கெப்பித்திகொல்லேவ மகா வித்தியாலயத் தில் நிறைவடைந்தது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் மூன்று முக்கிய நோக்கங்கள் இருந்தன. இளவயது திரு மணம் மற்றும் முன்கூட்டிய கர்ப்பத்தைத் தடுப் பது பற்றிய அறிவையும் புரிதலையும் மேம் படுத்தி அதன் மூலம் குழந்தைகளை இந்தப் பேரழிவிலிருந்து காப்பாற்றுதல், குழந்தைக ளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திற்கு ஏற் படும் அச்சுறுத்தலை நீக்குதல் மற்றும் இளமைக் காலக் கருவுறுதல்கள் மற்றும் வாழ்க்கையின் அழகியலைப் புரிந்துகொள்வது ஆகும்.

## வட்டுக்கோட்டை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

*யாழ். விசேட நிருபர்*

யாழில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையில் மற்றுமொரு இளைஞன் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராலி செட்டியார் மேடம் பகுதியை சேர்ந்த புலோஷாந்த் (வயது 22) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை துணைவி பகுதியில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதா வது,

நவாலி பகுதியில் உறவினர் வீடொன்றில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவில் கலந்து கொண்ட பின்னர் இரு இளைஞர் களும் தமது வீடு நோக்கி சென்ற போது , மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 06

## குறள் தரும் சிந்தனை



ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்

ஊக்கத்தை உறுதியாகக் கொண்டிருப்பவர்கள், ஆக்கம் இழக்க நேர்ந்தாலும் அப்போது கூட ஊக்கத்தை இழந்து கலங்க மாட்டார்கள்.

## நாட்டை வீழ்ச்சிக்குள் தள்ளிவிட திட்டமிடும் அரச விரோத சக்திகள்!

மக்களை தவறான பாதைக்குத் திசைதிருப்புவதன் ஊடாக, நாட்டில் பதற்றமான சூழலொன்றை தோற்றுவிப்பதற்கு அரசாங்கத்துக்கு விரோதமான சில அரசியல் சக்திகள் முற்படுவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. கடந்த காலத் தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது.

நாட்டில் ஆங்காங்கே இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டங்களின் பின்னணியை நோக்குகின்ற போது, அரசவிரோத சக்திகளின் மறைமுகத் திட்டம் நன்றாகவே தெரிகின்றது. கொழும்புக்கு அருகேயுள்ள நுகேகொடையில் கடந்த மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவம் மாத்திரமன்றி, நாட்டின் சில இடங்களில் நடந்துள்ள அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் அரசுக்கு எதிரான அரசியல் சக்திகளின் பின்னணிச் செல்வாக்கு உள்ளமை நன்றாகத் தெரிகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்ட போது பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் அவர் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலும் பொதுஜன பெரமுன கட்சியானது அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. எனவே மக்களின் ஏகோபித்த ஆதரவுடனேயே இன்றைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்துள்ளதென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

மக்கள் ஆதரவு கொண்ட அரசாங்கமொன்றை வீழ்த்துவதென்ற எதிரணியின் கனவு சாத்தியப்படப் போகின்ற காரியமல்ல. எமது நாட்டில் அரசியலமைப்பு ரீதியிலான ஜனநாயக சம்பிரதாயங்களும், விதிமுறைகளும் உள்ளன. தேர்தலொன்றின் மூலமே மக்களின் தீர்ப்பைப் பெற முடியும். அதற்கு மாறாக மக்களை வன்முறைக்குத் தூண்டி விடுவதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அரசியல் சக்திகள் ஏதேனும் முற்படுமானால் நாட்டின் சட்டம் அதன் கடமையைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமென்பதை மறந்து விடலாகாது.

உலகம் கொவிட் பெருந்தொற்றில் இருந்து கடந்த இரு வருட காலத்துக்குப் பின்னர் இப்போதுதான் மீண்டெழுந்து கொண்டு வருகின்றது. கடந்த இரு வருட காலமாக உலக நாடுகள் அத்தனையுமே முடங்கிப் போயிருந்தன. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து உலகம் தற்போது படிப்படியாக மீட்சி பெற்று வருகின்றது. இலங்கையின் நிலைமையும் அவ்வாறானதாகவே உள்ளது. இரு வருட காலமாக ஒட்டுமொத்த நாடுமே முடங்கிப் போயிருந்த வேளையில், மக்கள் பாதுகாப்பையும் நலனையும் தவிர அரசாங்கம் வேறு விடயங்களில் அதிகம் கவனம் செலுத்தியதில்லை. கொவிட் தொற்றுக்கு உள்ளானோரைக் காப்பாற்றுவதிலும், அத்தொற்று மேலும் பரவாமல் தடுப்பதிலும் அரசாங்கம் முன்னுரிமையளித்து செயற்பட்டதை உலகமே நன்கறியும். கொவிட் தொற்று பாதுகாப்பு விடயத்திலும், தடுப்பூசி வழங்குவதிலும் உலக நாடுகளுக்கே முன்னுதாரணமாக இலங்கை அரசாங்கம் செயற்பட்டதென்று சர்வதேச அமைப்புகள் பாராட்டியிருந்தன.

இவற்றுக்கெல்லாம் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட நிதி ஏராளம். அரசாங்கம் அவ்வாறு முன்னுரிமையளித்து செயற்பட்டதன் விளைவாகவே கொவிட் தொற்று எமது நாட்டில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எமது நாடு மூன்று அலைகளைத் தாண்டியுள்ளது. இனிமேல் பாரதூரமான அலையெதுவும் உருவெடுக்காதென்ற நம்பிக்கையும் தோன்றியுள்ளது. இந்த வெற்றிக்குக் காரணம் இன்றைய அரசாங்கத்தின் வினைத்திறனான செயற்பாடுகள் என்பதை நாம் மறந்து விடலாகாது.

இவ்வாறெல்லாம் கடந்த இரு வருட காலத்தில் மக்கள் நலனுக்காக பெருந்தொகை நிதியைச் செலவிட்டதன் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி நிலைமைக்குச் சென்றுள்ளதென்பதை மறந்து விடலாகாது. இரு வருட காலமாக நாடு ஒருவித முடக்க நிலைமையில் இருந்த வேளையில் நாட்டின் தேசிய வருமானத்துக்கான அத்தனை வழிகளும் தடைப்பட்டிருந்தன. அரசுக்கு வருமானம் கிடைக்காத போதிலும், மக்கள் நலன் வேலைத்திட்டங்களை அரசு இடைவிடாமல் தொடர்ந்தது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை பாதிக்கப்பட்டமைதான் அரசுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு ஆகும். இதனால் அந்நிய செலாவணியை அரசு இழக்க நேரிட்டது. நாட்டின் பிரதான வருமானம் ஸ்தம்பிதமடைந்து போனது. அதன் பாதகமான விளைவுகளாலேயே இன்றைய பொருளாதார நெருக்கடியை எமது நாடு சந்திக்க நேரிட்டது. மக்கள் நலனுக்கு முன்னுரிமையளித்து செயற்பட்டதன் காரணமாக பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கையில், இன்றைய நெருக்கடியை அரசவிரோத சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முற்படுகின்றன.

நாட்டு மக்களை வன்முறைக்குத் தூண்டி விடும் வகையில் அரசவிரோத சக்திகள் முற்படுவது தொடர்பாக அனைவரும் மிகவும் விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது அவசியம். நாட்டை அதலபாதாளத்துக்குத் தள்ளி விடுவதன் மூலம் மக்கள் செல்வாக்கை தமது பக்கம் பெருக்கிக் கொள்வதற்கு எதிரணி முற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது!

editor.tkn@lakehouse.lk

# எமது வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேண்டுமென கூறுவோருக்கு இதுதான் எமது பதில்!

எமது வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்! சத்தம் போட வேண்டும்! எங்களுக்கு கல் எறிய வேண்டும் என்று இம்மாவட்ட அரசியல்வாதிகள் சிலரும், அவர்களைச் சார்ந்தவர்களும் சொல்கிறார்கள். இந்த வேளையில் நாங்கள் கடந்த ஒன்றரை வருடமாக அரசாங்கத்தோடு இணைந்து எமது மாவட்ட மக்களுக்கு செய்த பணிகளை சொல்ல வேண்டிய தேவை உள்ளது.

01. 350 க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு அரச துறையில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுத்துள்ளோம். இவர்களில் முன்னால் ஆண், பெண் போராளிகளின் பிள்ளைகளும் அடங்குவர்.

02. 16,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொடுத்துள்ளோம்.

03. விவசாயத்துறையில் கடந்த காலங்களில் 88 குளங்களைப் புனரமைத்து, அணைக் கட்டுக்களை அமைத்து விவசாயத்திற்கு உதவி உள்ளோம்.

04. மீன்பிடித்துறையில் அபகரிக்கப்பட்டு வந்த கடற்கரை வளத்தை முடிந்தவரை, தடுத்து நிறுத்தி நம்மவர்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளோம்.

05. குறுகிய காலத்துக்குள் 15 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தி கொடுத்துள்ளோம்.

06. குறுகிய காலத்தில் விளையாட்டுத் துறையில் 12 கிராமிய மைதானங்களை புனரமைத்து கொடுத்துள்ளோம்.

07. குறுகிய காலத்தில் இரண்டு நகரங்களை அபிவிருத்தி செய்துள்ளோம்.

08. தற்போதைய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டதாரிகளில் எமது மாவட்ட பிள்ளைகள் 2147 பேர் வேலைவாய்ப்பு பெற்றார்கள்.

09. கடந்த 30 வருடத்திற்கு மேல் விடுவிக்கப்படாமல் இருந்த கும்புறுமலை இராணுவ முகாம் காணியை பாதுகாப்பு தரப்புடன் பேசி விடுவித்தோம்.

10. தொடர்ச்சியாக ஆளும் கட்சி தமிழ் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் உட்பட பலருடன் பேசி ஒரே தடவையில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட காரணமாயிருந்தோம்.

11. வாகரைப் பிரதேச மக்களது பிள்ளைகளின் தொழினுட்ப கல்வியை விருத்தி செய்யும் பொருட்டு முதலாவது தொழினுட்ப பீடத்தை பெற்றுக் கொடுத்தோம்.

12. சில பாடசாலைகளை தர முயர்த்தினோம். சுரவணயடியூற்று கிராமத்திற்கு முதலாவது பாடசாலையை பெற்றுக் கொடுத்தோம்.

13. படுவான்கரை மக்களுக்கு இதுவரை 300 மில்லியன் நிதிக்கு மேல் பெற்றுக் கொடுத்து குடிநீரை பெற்றுக் கொடுத்துள்ளோம்.

14. குறுகிய காலத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட சிறு , நடுத்தர பாலங்களை அமைத்து கிராம மக்களின் போக்குவரத்துக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தோம்.

15. கிராம மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக சுமார் 2500 மில்லியனுக்கு மேற்பட்ட நிதியை வீதிக் கட்டமைப்புக்கு பெற்றுக் கொடுத்தோம்.

16. பண்பாட்டு மீட்பு பாசறை மூலம் மாகாண மட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஈழத்தமிழரின் தனித்துவமான கலையான நாட்டுக் கூத்தை மீண்டும் பாடசாலை மட்ட போட்டிகளில் கொண்டு வந்தோம்.

17. இலங்கையில் பஸ் நூலகத் திட்டத்தில் முதலாவது திட்டத்தை பெற்றுக் கொடுத்தோம்.

18. குறுகிய காலத்தில் 03 சிறுவர் பூங்காக்களை சிறுவர்களுக்காக அமைத்துக் கொடுத்தோம்.

19. குறுகிய காலத்தில் காணியற்ற குடும்பங்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுத்தோம். பல காணி அபகரிப்புக்களை தடுத்து நிறுத்தினோம். அபிவிருத்தி குழுவில் தமிழர்கள் நாம் இருப்பதால் சாத்தியமாகியது.

20. குறுகிய காலத்தில் வாகரை புணானை கிழக்கினை ஓட்டமாவடியுடன் இணைக்கும் திட்டத்தினை தடுத்து நிறுத்தினோம்.

21. முடிந்தளவு குறுகிய காலத்தில் வீடற்றவர்களுக்கு வீடுகள், வீட்டுத் திருத்தம், மலசலகூடம் ஆகிய பல வசதிகளை பெற்றுக் கொடுத்துள்ளோம்.



22. நீண்ட காலமாக இழப்பீட்டிற்கான நிவாரணங்களை பெறாத 450 க்கு மேற்பட்டவர்களுக்கு இழப்பீட்டுக்கான நஷ்டஈட்டு தொகைகளை பெற்றுக் கொடுத்தோம்.

இவ்வளவு பணிகளையும் எம் சமூகத்துக்காக களரீதியாக ஆற்றிய, ஆற்றிக் கொண்டு இருக்கின்ற எம்மை நோக்கி கல் எறிய வேண்டும், முற்றுகை இடவேண்டும் என்றால் இவ்வளவு காலமும் எதுவுமே செய்யாமல் வெறுமனே தமிழர்களின் பிரச்சினைகளையும், அவர்களின் கண்ணீரையும் மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்யும் பிழைப்புவாத அரசியவாதிகளுக்கு என்ன செய்ய வேண்டும்? அது மக்களுக்குப் புரியும்.

நாம் அரசாங்கத்துடன் இணைந்து இருப்பது சரணாகதி அரசியல் செய்யவதற்காக அல்ல. எம்மால் முடிந்த சேவையை கடந்த ஒன்றரை வருட காலத்தில் எம் மக்களுக்கு பெற்றுக் கொடுத்து இருக்கிறோம். அது எமது பயணத்தில் இணைந்திருப்பவர்களுக்கு நன்கு புரியும்.

225 பேரையும்தான் மக்கள் வீட்டுக்கு போகச் சொல்லுகிறார்கள். அதையும் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது யார் போவது? யார் வருவது? என்பது முக்கியமல்ல. சாதாரண மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்கு எல்லோரும் கட்சி பேதம் மறந்து கைகோர்க்க வேண்டும். குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கும் முயற்சிக்கக் கூடாது. அதாவது அரசியல் இலாபம் தேடக் கூடாது.

எம்மைப் பொறுத்தவரை உரிமையோடு கூடிய அபிவிருத்திசார் அரசியல் என்ற நோக்கில் நாம் பயணிப்பவர்கள். அதுதான் இந்நாட்டில் எம் தமிழினத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் என்ற ஆழமான நம்பிக்கை எமக்குண்டு.


**தமிழர்களின் பிரச்சினைகளையும், அவர்களின் கண்ணீரையும் மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்யும் பிழைப்புவாத அரசியவாதிகளுக்கு என்ன செய்ய வேண்டும்? அதனையும் கூறி விடுங்கள்!**

பாராளுமன்ற உறுப்பினர்
**சதாசிவம் வியாழேந்திரன்**
*(முன்னாள் இராஜாங்க அமைச்சர்)*

# கற்பித்தலை தனது வாழ்வின் முதற்பணியாக கடைப்பிடித்து வாழ்ந்த பேராசிரியர் சந்திரசேகரம்

## யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை அஞ்சலி

இலங்கைக் கல்வி முறைமையிலும், பல்கலைக்கழகங்களின் கல்வியியல்துறை வரலாற்றிலும் கனதியான இடத்தை தனதாக்கிய மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களின் பிரிவு இலங்கை கல்வித் துறையில் மீள்நிரப்ப முடியாத இழப்பாகும். அவரது வெற்றிடம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியல் துறைக்கும் பேரிழப்பாகும். யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறையுடன் நீண்டகால தொடர்பினை அறிவார்ந்த ரீதியில் கொண்டிருந்த அவர் வருகைதரு விரிவுரையாளர், இரண்டாம் பரீட்சகர், பட்டப்பின் கற்கைளின் ஆய்வுச் செயற்பாடுகளின் மேற்பார்வையாளர், பரீட்சகர் எனப் பல வகிபாகங்களை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடனும் குறிப்பாக உயர்பட்டப்படிப்புக்கள் பீடம் மற்றும் அதனூடாக கல்வியியல் துறையுடனும் கொண்டிருந்தவர்.



கல்வியியல் சார்ந்த அறிவைப் பரவலாக்குவதில் கனதியான பங்களிப்பை நல்கிய பேராசிரியராவார். அவர்களின் ஆக்கங்கள் இன்றும் கல்வித்துறைசார் கற்கைகளில் அதிக தாக்கத்தைச் செலுத்துகின்றன. மலையக புலத்தில் பிறந்து இலங்கையின் வடக்குப் புலத்தால் தத்தெடுக்கப்பட்டு மாண்புற்றவர்களாகத் திகழ்ந்த ஒரு தலைமுறையின் முன்னோடி உதாரணபுருஷராகத் திகழ்ந்தவர். பழகுவதற்கு இனிய பண்பாளரான அவர் நேர்சிந்தனையுடன் மாணவர்களை வழிப்படுத்துவதில் தனித்தன்மை மிக்கவர்.

இலங்கை மற்றும் சர்வதேச கற்றல் அனுபவம் உள்ள அவர், இலங்கையில் கல்வித் துறைசார்ந்து பல மட்டங்களில் தனது பங்களிப்பை நல்கியுள்ளார். கல்விக் கொள்கை வகுப்பாக்கம், கலைத்திட்ட விருத்தி, பாடநூலாக்க ஆலோசனை, ஆசிரியர் கல்வியில் புதிய கற்கைகளின் அறிமுகம் என அவரது காத்திரமான பங்களிப்பினால் வளம்பெற்ற துறைகள் பலவாகும்.

அமரத்துவம் அடைவதற்கு சில நாள்களுக்கு முன்பாகவும் யாழ் பல்கலைக்கழக கல்வித் துறைசார் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு இணையவழியில் தனது விரிவுரைகளை ஆற்றியவர். கற்பித்தலே தனது முதற்பணி எனக் கொண்ட அவர் அதற்கான தொடர் தேடலையும் கற்றல் அனுபவத்தையும் தனது வாழ்வின் இறுதிக் கணம் வரை கொண்டிருந்தவர். அரசாங்கம் சார்ந்த கல்விக்கான பல நியமனக் குழுக்களில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக அவர் பல தக்க இடங்களை தனது அறிவு மற்றும் ஆற்றலால் அலங்கரித்தவர். இத்தகைய உயர் விழுமியங்களைக் கொண்ட பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களின் இழப்பு இலங்கைக் கல்விச் சமூகத்துக்கு குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்துக்கு பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் தமிழ்க் கல்விச் சமூகத்தின் சார்பில் எமது அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ.சர்வேஸ்வரா...**
விரிவுரையாளர் (தகுதிகாண்)
கல்வியியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்

# சாய்ந்தமருது தென்பகுதி பிரதேச மக்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்ச்சியை விதைத்த பெருந்தகை

## சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலய ஸ்தாபக அதிபர் மர்ஹூம் ஏ.ஸி.எம்.இப்ஹாஹிம் மறைந்து 31 ஆண்டுகள் நிறைவு

மர்ஹூம் அப்துல்காதர் லெப்பை மரைக்காயர் தம்பதிகளின் ஐந்தாவது புதல்வனாக 1926. 09 .25 இல் மர்ஹூம் ஏ.ஸி.எம்.இப்ஹாஹிம் அவர்கள் பிறந்தார். பாடசாலைக் கல்வியை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் பெற்று, 1944 ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்து 1945 ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையில் பிரவேசப் பரீட்சையில் தேறி, இரு வருட பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

1953ஆம் ஆண்டு சின்னமீராலெவ்வை யாசின்வாவா தம்பதிகளின் புதல்வி கதீஜாவை கரம்பிடித்தார். இவர் ஆறு பிள்ளைகளின் தந்தையாவார். முதலில் தனது ஆசிரிய சேவையை திருகோணமலை குறிஞ்சாக்கேணி அ.மு.க. வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். அடுத்து கல்முனைக்குடி அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றினார் .

கல்விவளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் இன்றும் கல்முனைக்குடி மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

தான் பிறந்த மண்ணிலேயே கல்விச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றியது. 1952 ஆம் ஆண்டு சாய்ந்தமருது மழ் ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்தை ஆரம்பித்து அதன் முதல்அதிபராகக் கடமையாற்றினார். சாய்ந்தமருது தென்பகுதி மக்களின் கல்விக்கு வித்திட்டதோடு, கல்வி வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். சாய்ந்தமருது மழ் ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்தில் அவர் அதிபராக இருந்த காலம் வித்தியாலயத்தின் பொற்காலம் ஆகும். தனது சேவையின் நீண்ட காலத்தை பாடசாலையின் வளர்ச்சிக்காகவே செலவிட்டிருந்தார். ஓய்வு பெறும் போதும் இவ்வித்தியாலயத்தின் அதிபராகவே அவர் பணியில் இருந்தார்.

13 ஆம் கொலணிஅ.மு.க. வித்தியாலயம், குருநாகல் பக்மிகொல்ல அல் – மினா மகாவித்தியாலயம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று அல்ஹிதாயா வித்தியாலயம், சாய்ந்தமருது அ.மு.க. வித்தியாவயம், கல்முனை ஸாஹிராக் கல்லூரி, அக்கரைப்பற்று ஆயிஷா மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளிலும் இவர் சேவையாற்றியுள்ளார்.



1953 ஆம்ஆண்டில் இலங்கை இஸ்லாமிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் நிர்வாக சபைஉறுப்பினராகவும், கிழக்கு மாகாணக் கிளை, கல்முனை மாவட்டக் கிளை என்பவற்றின் செயலாளராகவும், தாய்ச் சங்கத்தின் பொருளாளராகவும் இருந்து அவர் ஆற்றிய மகத்தான சேவையை மறக்க முடியாது. மூன்றுமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர், நாட்டின் நாலாபுறமும் முஸ்லிம் ஆசிரியர்களை ஒன்றுதிரட்டுவதில் பெரிதும் பாடுபட்டார். இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதில் இவர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியே காரணமாகும்.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்மா பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுள் ஒருவராகவும், அதன் உபசெயலாளராகவும் இருந்து திறம்பட செயல்பட்டார். புதிய கட்டட நிதி பராமரிப்பு முறைகள் பற்றியும் இவர் சொன்ன காத்திரமான கருத்துக்கள் இன்னும் மீட்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

நெறிப்படுத்தப்பட்டகுர்ஆன் பாடசாலைகள் அமைப்பு, இஸ்லாமிய பழக்க வழக்கங்களுடனான பாலர் பாடசாலை அமைப்புக்கள் என்பவற்றை உருவாக்குவதற்காக அறிஞர் பெருமக்களுடன் ஆலோசனை நடத்தி வந்தார். அவர் 04.04.1991 அன்று காலமானார். அவரது 31 ஆம் வருட நினைவுதினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தில் சமகாலத்தில் வாழ்ந்து மறைந்தவர்களுள் மர்ஹூம் ஏ.ஸி.எம்.இப்ஹாஹிம் காத்திரமான பாத்திரமாகவே திகழ்ந்தார்.

**எம்.எம்.ஜெஸ்மின்...**

# அரசியலமைப்பை மீறி செயல்பட நாம் ஒருபோதும் தயாரில்லை

## சபையில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

அரசியலமைப்பை மீறி செயற்படுவதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை. நாட்டின் இறைமையையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் தியாகங்களை மேற்கொள்ளவும் தயாராகவுள்ளோமென ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் இறைமையையும் ஜனாதிபதியையும் பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகம் செய்வதற்கும் தயாராக உள்ளதாக தெரிவித்த அவர் 'கோத்தா கோ' என்று நடத்தப்படும் போராட்டங்களின் பின்னால் 88/89 காலத்தில் நடந்த கொலைகளுடன் தொடர்புடைய ஜே.வி.பி யினர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார் .

ஜே.வி.பியின் கடந்தகால வன்முறைக் கலாசாரத்தை கவனத்திற் கொண்டு அதில் அகப்பட்டு விட வேண்டாமென தாம் நாட்டின் இளைஞர்களை கேட்டுக்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி சூழ்நிலை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்று சபையில் உரையாற்றிய பின்னர் அவருக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பதில் அமைந்திருந்தது.

### புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற இடமளிக்க முடியாது

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

ஜே.வி.பி தலைவர் இங்கு பேசும் போது, முதலில் கோட்டா வீட்டுக்கு போக வேண்டும் என்று கூறிய பின்னரே பால் மா தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

நாட்டில் கிளர்ச்சியாளர்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. 60,000 இளைஞர்களை கொன்றவர்கள் அவர்கள். அதனை நாம் மறந்து செயற்பட முடியாது.

உலகளாவிய நெருக்கடி நிலை காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு அனைவரும் ஒன்றிணைந்து தீர்வு காண்பது அவசியம்.

நாம் உரிய தீர்வுகளை முன்வைக்க நடவடிக்கை எடுப்போம்.

எதிர்க்கட்சியின் கோரிக்கைகளுக்கமையவே நாம் அமைச்சரவையை கலைத்தோம்.69 இலட்சம் மக்கள் நாட்டின் ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளதுடன் நிலையில் அரசியலமைப்பை மீறி அவரை பதவியிலிருந்து நீக்க முடியாது. அரசியலமைப்பை பாதுகாப்பதாக நாம் உறுதிமொழி வழங்கியுள்ளோம். அதனை நாம் பாதுகாப்போம்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கமையவே அமைச்சர்கள் பதவி விலகினர்.

ஆனால் ஜே.வி.பியினருக்கு அரசாங்கத்தின் பிரச்சினைகளும், இரத்தக் களரியுமே விருப்பமாக உள்ளதை அறிய முடிகிறது. பல்கலைக்கழகங்களை மூடி, 88/89 காலத்தில் செய்ததை போன்றே நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜே.வி.பியினர் முயற்சிக்கின்றனர். புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு சிலர் திட்டங்களை தீட்டுகின்றனர். அதற்கு இடமளிக்க முடியாது. படுகொலை கலாசாரத்துக்கு நாட்டை கொண்டு செல்ல வேண்டாம். இத்தகைய செயற்பாடுகளுக்கு அகப்படவேண்டமென்று இளைஞர்களை நாம் கேட்கின்றோம். வெளியில் ஜனநாயகத்தை காட்டிக்கொண்டு உள்ளே வேறு நோக்கத்தில் செயற்பட வேண்டாமென்றும் அனுரகுமார திஸாநாயக்கவிடம் மீண்டும் கேட்டுக் கொள்கின்றோம். நாம் அனைவரும் இணைந்தே நெருக்கடிகளுக்கு தீர்வு காண வேண்டும். அதற்காக தேர்தலுக்கு செல்ல வேண்டுமானாலும் நாம் தயாரென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# சுகாதார தொழிற்சங்கம் இன்று வேலைநிறுத்தம்

### இரு மணிநேரம் முன்னெடுக்க முடிவு



அரசாங்கத்திற்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை அடையாள வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைநிறுத்தம் பொதுமக்களின் போராட்டங்களுக்கு ஆதரவாகவும், பொதுமக்களின் துயரங்களுக்கு தொழிற்சங்கங்களின் ஒற்றுமையைக் காட்டுவதாக இருக்கும் என மையத்தின் ஒருங்கிணைப்பாளரான ரவி குமுதேஷ் தெரிவித்தார். ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு எவ்வித அசௌகரியமும் ஏற்படாது.

சுகாதார சேவைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இரண்டு மணி நேர போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். தற்போதைய நிர்வாகத்திற்கு எதிராக நாடு முழுவதும் உள்ள அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்கள் ஒன்றிணைந்து இன்று எதிர்ப்பு தெரிவிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தால் மட்டுமே நெருக்கடிக்கு தீர்வு

### சபையில் எதிர்க்கட்சி பிரதம கொரடா உரை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழித்தால் மாத்திரமே நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் சட்ட மூலம் ஒன்றை சபையில் சமர்ப்பிக்க முடியமென்றும் அவர் சபையில் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது நாள் விவாதத்தில் 06

# புத்தாண்டுக் காலத்தில் விஷேட பஸ் சேவைகள்

### இன்று முதல் ஆரம்பமாகிறது

புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு வெளிமாவட்டங்களுக்கு செல்லும் மக்களுக்காக இன்று முதல் 15 ஆம் திகதி வரை விசேட பஸ் சேவைகள் இடம்பெறும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இரண்டு கட்டங்களாகச் செயல்படும் இந்த விஷேட பஸ் சேவையை, பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு கட்டங்களில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு பஸ்டியன் மாவத்தை பிரதான பஸ் நிலையத்துக்கு மேலதிகமாக கடவத்தை, கடுவெல மற்றும் மாகும்புர பஸ் நிலையங்களிலும் இந்த விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் பஸ்களுக்கு டீசல் கிடைக்காவிட்டால் புத்தாண்டு போக்குவரத்து சேவைகளை அமுல்படுத்துவதில் சிக்கல் ஏற்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி கோட்டாபய பதவியிலிருந்து கொண்டு:

# முன்வைக்கும் எந்த தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ள மக்கள் தயாரில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு முன்வைக்கும் எந்த யோசனையையும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லையென ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எம். பி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதே தற்போது மக்களின் முக்கியமான கோரிக்கையாக உள்ளது. அந்தக் கோரிக்கைக்கு கவனம் செலுத்தி தீர்வுகள் தொடர்பில் அரசாங்கம் கலந்துரையாட முன்வருமானால் அந்த கலந்துரையாடலில் பங்கேற்ற நாம் தயாரென்றும் அனுர குமார திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அவற்றுக்கு இதுவரை தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பாராளுமன்றத்தில் நாம் எத்தகைய கலந்துரையாடல்களை மேற்கொண்டாலும் வெளியே காணப்படுகின்ற 06

# அவசரகாலச் சட்டம் நீக்கம்; UN வரவேற்பு

இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுள்ளது. இவ்விடயம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் – ஹம்டி, ஐ.நா. சட்டத்தின் ஆட்சி மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைக்கு ஆதரவாக நிற்கிறது மற்றும் இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

UNITED NATIONS

# ஏப்ரல் 11 மற்றும் 12 பொது விடுமுறை; அரசாங்கம் அறிவிப்பு

திங்கள் மற்றும் செவ்வாய்கிழமையை பொது விடுமுறையாக அரசாங்கம் அறிவித்துள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை (ஏப்ரல் 11ஆம் திகதி) மற்றும் செவ்வாய்கிழமை (ஏப்ரல் 12ஆம் திகதி) பொது விடுமுறை தினங்களாகவே அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் புதிய சுற்றறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

### பல வருடங்களாக சிறைகளில் வாடும்

# தமிழ் இளைஞர்களுக்காகவும் போராட முன்வாருங்கள்



தமிழ் இளைஞர்கள் பலர் அநியாகங்களுக்கு உட்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை பற்றியும் சிந்தித்து அதற்காகவும் போராடுங்கள் என சிறீதரன் எம்பி பாராளுமன்றில் நேற்று கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

### சிங்கள இளைஞர், யுவதிகளிடம் சிறீதரன் MP கோரிக்கை

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் கூறியதாவது,

பொருளாதார தடைகளை இன்றைய காலத்தில் தான் சிங்கள மக்கள் சந்திக்கின்றார்கள். ஆனால், யுத்த காலத்தில் 20 வருடங்களாக அரசாங்கத்தால் திட்டமிட்டு பொருட்கள் அனுப்பப்படாமல் தமிழ் மக்கள் அனுபவித்துள்ளார்கள்.

சிங்கள தலைவர்கள், சிங்கள இளைஞர் யுவதிகள் தார்மீக அடிப்படையில் சிந்திக்க வேண்டும். ஏனெனில், ஒரு நாள் பிறந்த குழந்தை கூட போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளது.

சிங்கள இளைஞர்கள் சிங்கக் கொடிகளுடன் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள். தமிழர்கள் கொல்லப்பட்ட சமயத்தில் சிங்கக் கொடி, பாற்சோறுகளை வழங்கிய சிங்கள தலைவர்களை இன்று வீட்டுக்குத் துரத்தும் அளவிற்கு காலம் மாறிவிட்டது.

2009 ஆம் ஆண்டு தமிழ் சிறுவர்கள் கொல்லப்பட்டார்கள். வவுனியாவில் ஒப்படைக்கப்பட்ட பல குழந்தைகளை இன்றும் காணவில்லை. அதனை விட, ஆனந்த சுதாகரின் இரு பிள்ளைகள் உட்பட பலர் தமது தாய் தந்தைகளின் வருகைகளுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசுக்கு நல்லெண்ணம் கிடையாது என்றார்.


சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

இலங்கை சுற்றுலாத்துறையில்

முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம்



**ஓய்வு இல்லங்களை குத்தகைக்கு வழங்கல்**

**ஆணமடுவ, பத்தலுஓய, நாலந்த மற்றும் வீரகெட்டிய**

உயர்ந்த தர சேவை தர நிலைகளுடன் செயற்பாடு மற்றும் பராமரிப்பிற்காக மேலேயுள்ள ஓய்வு இல்லங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக விண்ணப்பங்களுடனான பொதுக் கருத்துக்கள் சார்ந்த முன்மொழிவுகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது இத்தால் அழைக்கின்றது. குத்தகைக்காரர் இவ்வாறான ஓய்வு இல்லங்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் செயற்படுத்துதல் வேண்டும்.

2022 ஏப்ரல் 7 ஆம் திகதியிலிருந்து 2022 மே 11 ஆம் திகதியன்று வரையும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விண்ணப்பங்களின் முழுமையான தொகுதியொன்று https://sltda.gov.lk/tender என்ற SLTDA இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். ஒவ்வொரு ஆதனத்தின் மாதாந்த குத்தகை வாடகை விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான 1000 இலங்கை ரூபாவானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் இலங்கை வங்கி கூட்டுரு கிளையிலுள்ள 7119413 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். (குறிப்பு: ‘‘மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமென’’ ரொக்கப் பண வரவு துண்டில் வரைவு வைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைப்பதன் நோக்கம் என குறிப்பிடப்படுவதுடன்,முன்மொழிவுடன் மேற்கூறப்பட்டுள்ள ரொக்கப்பண வரவுத் துண்டான சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயமானதாகும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டுமென்பதுடன் ஏனைய பணக்கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

விண்ணப்பங்களுடனான அனைத்து விண்ணப்பங்களும் நகல் பிரதியுடன் பெறுகைப் பிரிவு, (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80 காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு 2022 மே 12 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

எளிதில் பார்வையிடக்கூடிய வகையில் தபாலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுள்ள ஓய்வு இல்லத்தின் பெயரை தயவு செய்து குறிந்துரை செய்யவும்.

முதலீட்டாளர் அல்லது பிரதிநிதியின் முன்னிலையில் விண்ணப்பங்கள் அவைகளை மூடிய பின்னரும் விரைவாகவே திறக்கப்படும்.

மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு தயவு செய்து 011-2440006 என்ற இலக்கத்தினூடாக இசுஅஅ இன் சுற்றுலா இல்லங்களின் முகாமைத்துவ பணிப்பாளருடன் அல்லது 011-2426800 (நீடிப்பு: 305) என்ற இலக்கத்தினூடாக பெறுகைக்கான உதவிப் பணிப்பாளருடன் மற்றும் sltdaproc@srilanka.travel என்ற மின்னஞ்சலூடாகவும் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு-03.**

# மிகைக் கட்டண வரி சட்ட மூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மிகைக் கட்டண வரி சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

2000 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீத மிகைக் கட்டண வரியை அறவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25 சதவீத மிகைக் கட்டண வரி தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது.

அதனையடுத்து இதற்கான சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது என உத்தரவிடக்கோரி எதிர்க்கட்சிகள் உயர் நீதிமன்றதில் மனுக்களை தாக்கல் செய்தன.

இந்நிலையில் மிகைக் கட்டண வரிச் சட்டமூலத்தில் ஈ.பி.எப் , ஈ.ரி.எப். உட்பட 13 நிதியங்கள் உள்ளடக்கப்படாத வகையில் திருத்தம் செய்யப்படும் என சட்டமா அதிபர் உறுதியளித்திருந்தார்.

அதனையடுத்து மிகைக் கட்டண வரிச் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் கடந்த மாத இறுதியில் அறிவித்திருந்தது. அந்நிலையில் நேற்று மிகைக்கட்டண வரி சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக அதனை வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற ஆதரவளிப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ஷ டி சில்வா சபைக்கு அறிவித்தார்.

இதனையடுத்து எழுந்த எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல , வாக்கெடுப்பு தேவையில்லை எனினும் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றார்.

இதற்கு சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன பதிலளிக்கையில், விவாதம் பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என்றார். சரி பரவாயில்லை இன்றைய விவாதத்தில் நாம் இது தொடர்பிலும் கருத்துக்களை முன்வைப்போம் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அதனையடுத்து மிகைக்கட்டண வரி சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது சபையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

ஒஸ்லோ, பாக்தாத், சிட்னி தூதரகங்கள்,

# தற்காலிகமாக மூடப்படுவதால் இராஜதந்திர உறவில் பாதிப்பில்லை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

அமைச்சரவையின் தீர்மானத்தையடுத்து, நோர்வேயின் ஒஸ்லோ, ஈராக்கின் பாக்தாத் ஆகியவற்றிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் அவுஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகங்கள் கடந்த 30 ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடுவதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இரண்டு தூதரகங்கள் மற்றும் பணிமனைகளை தற்காலிகமாக மூடுவது தொடர்பான தீர்மானம், மிகவும் கவனமாக ஆலோசிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது. இது தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் நாடு எதிர்நோக்கும் வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகளின் பின்னணியில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் இராஜதந்திரப் பிரதிநிதித்துவத்தின் பொது மறுசீரமைப்பின் ஒரு பகுதியாகுமென்றும் வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டு வதிவிடத் தூதரகங்கள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, சுவீடனின் ஸ்டொக்ஹோமில் உள்ள இலங்கைத் தூதுவருக்கு நோர்வேக்கும், ஐக்கிய அரபு இராச்சியம், அபுதாபியிலுள்ள இலங்கைத் தூதுவருக்கு ஈராக்குக்கும் ஒரே நேரத்தில் அங்கீகாரம் அளிக்கப்படும். சிட்னியிலுள்ள துணைத் தூதரகத்தின் தூதரக அதிகார வரம்பு அவுஸ்திரேலியாவின் கன்பெராவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு இணைக்கப்படும்.

நோர்வே, ஈராக் மற்றும் சிட்னியின் தூதரக அதிகார வரம்புக்குள் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் தூதரகம் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் நிவர்த்தி செய்வதற்கும், மேலே விவரிக்கப்பட்டுள்ள புதிய அங்கீகாரம் / ஏற்பாட்டின் மூலமாகவும் அத்துடன் நோர்வே, ஒஸ்லோ மற்றும் அவுஸ்திரேலியாவிலமைந்துள்ள இலங்கையின் அந்தந்த துணைத் தூதரகங்களின் மூலமாகவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மாற்று செயன்முறையை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கவனமாகக் கண்காணிக்கும். தற்போதைய சூழலில் தற்காலிக நடவடிக்கையாக எடுக்கப்பட்ட நோர்வே மற்றும் ஈராக்கிலுள்ள வதிவிடத் தூதரகங்களை மூடும் தீர்மானம், உகந்த அளவில் நட்புறவு மற்றும் நல்லுறவில் பேணப்படும் இரு நாடுகளுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகளை எந்த வகையிலும் பாதிக்காது எனவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

# தவக்கால சிந்தனை



## இறை வார்த்தையும் நமது வாழ்வும்

கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள் என்பதையும் மறைநூல் வாக்கு என்றும் அழியாது என்ற உண்மையையும் இன்றைய யோவான் நற்செய்தி நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

இறைவார்த்தையை படித்து, தியானித்து சிந்தனைக்கு உட்படுத்தி தமக்கும் மற்றவர்க்கும் வாழ்வாக்கிக் காட்டுவதே அவசியம் என்பதை இயேசு நமக்கு சுட்டிக்காட்டுகின்றார்.

இறைவன் நமக்கு விட்டுச்சென்ற சொத்தாகிய இறைவார்த்தையை நாம் பெற்றுக் கொண்டு நாமும் சிறந்த மனிதர்களாய் வாழ்வதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். அதுவே இறைவனின் விருப்பமும் கூட. இயேசுவின் மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து "தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்திருக்கின்றேன். அவற்றில் எந்த செயலுக்காக என்மேல் கல்லெறிய பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார். யூதர்களில் மறுமொழியாக "நற்செயல்களுக்காக அல்ல இறைவனை பழித்துரைப்பதற்காகவே உன் மேல் கல் லெறிகிறோம். ஏனெனில் மனிதனாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய்" என்றார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து "நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன் என்று உங்கள் மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா. கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை இறைமகன் என்று சொல்லிக்கொண்ட தற்காக இறைவனைப் பழித்துரைக்கிறாய் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம். ஆனால் நான் அவற்றைச் செய்தால் என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள் என்றார்.

இந்த நிகழ்வின் பின்னர் மக்கள் யோவான் இவரைப் பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாயிற்று என பேசிக்கொண்டனர். பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். என்ற செய்தியையும் இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு தருகின்றது. நான் எந்தளவு இறைவார்த்தையை தியானித்து அதன் படி வாழ முயற்சிக்கின்றேன்? எனது வாழ்க்கையில் அதற்கு ஏதுவான செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா? என்பதை இந்த தவக்காலத்தில் நாம் சிந்தித்து அதனை வாழ்வாக்கி கொள்வோம்.

எல்.செல்வா...

## நிறைவேற்று ஜனாதிபதி ... (05 ஆம் பக்கத் தொடர்)

உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பாராளுமன்றத்தின் இணக்கப்பாடு இல்லாமல் ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தீர்மானங்களே நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு காரணமாகும். அதனால் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு ஜனாதிபதி மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும். அதன் மூலமே மக்களை இச்சந்தர்ப்பத்தில் அமைதிப்படுத்த முடியும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி பாராளுமன்றத்தினால் ஏற்பட்டதல்ல. நிறைவேற்று ஜனாதிபதி இரசாயன உரத்தை தடைசெய்தார்.

அதுதொடர்பில் பாராளுமன்றத்தின் யோசனைகள் அவர் பெற்றுக்கொள்ளவில்லை. தனிச்சையாக எடுத்த தீர்மானம் காரணமாக விவசாய உற்பத்திகள் 50 வீதம் வீழ்ச்சியடைந்தன.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதுவும் முக்கிய காரணமாகும்.

அரசியலமைப்பின் 27ஆவது சரத்தில் ஜனாதிபதியின் பொறுப்பு தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனூடாக மக்களுக்கு போதுமான உணவு, உடை, வீடு போன்ற அடிப்படை தேவைகளை வழங்குவது ஜனாதிபதியின் பொறுப்பாகமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி அவற்றை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க தவறியுள்ளார். மக்களுக்கு போதுமான உணவு காணப்படவில்லை.

உடைகளின் விலை பல மடங்கு அதிகரித்திருக்கின்றது. வீடு கட்டமுடியாத அளவுக்கு சீமெந்து விலை அதிகரித்துள்ளது.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர். இதன் மூலம் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறியுள்ளார். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து பிரதமர், பாராளுமன்றம் சபாநாயகருக்கென மூன்று தரப்பினருக்கும் அதிகாரத்தை பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் அந்த அதிகாரங்கள் அனைத்தையும் 20ஆம் திருத்தம் மூலம் தமக்கு பெற்றுக்கொண்டார்.

இதன் மூலம் பாராளுமன்றம் பலவீனமடைந்தது. தற்போது பாராளுமன்றம் செல்லாக்காசாகவே காணப்படுகிறது.

தற்போதைய நாட்டின் பிரச்சினைக்கு பாராளுமன்றத்தின் மூலம் ஏதாவது தீர்மானம் எடுத்தாலும் அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவும் முடியும் நிராகரிக்கவும் முடியும்.

அந்த நிலையிலேயே பாராளுமன்றம் தற்போதுள்ளது.

அதேபோன்று 20ஆவது திருத்தத்துக்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது அதுதொடர்பில் ஆராய்ந்து பார்க்க பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அதற்கு சபாநாயகரும் பொறுப்புக்கூறவேண்டும்.

துறைசார் மேற்பார்வை குழு இருந்திருந்தால் சட்டமூலத்தின் ஒவ்வொரு சரத்தையும் ஆராய்ந்து பார்க்க முடிந்திருக்கும்.

அதனை சபாநாயகர் மேற்கொள்ளவில்லை, அதனால் பாராளுமன்றத்தை பலவீனப்படுத்தியதற்கு சபாநாயகரும் பங்காளி.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியொன்று இருக்கின்றதா? என்று கூட கண்டுகொள்ளாமல் இரண்டு வருடங்கள் செயற்பட்டு விட்டு தற்போது நாட்டில் நெருக்கடி ஏற்பட்ட பின்னர் எதிர்க்கட்சியிடம் தீர்வு கேட்பது விந்தையாக உள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்வைக்கும் எந்த ... (05 ஆம் பக்கத் தொடர்)

பிரச்சினைகளுக்கு தீர்வுகள் இன்னும் முன்வைக்கப்படவில்லயென்பதை முதலில் நாம் உணர வேண்டும்.

எதிர்கொள்ள நேர்ந்துள்ள பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளை முன்வைக்குமாறே மக்கள் கேட்கின்றனர்.

அதற்காகவே வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை செய்து வருகின்றனர்.

பிரச்சினைகள் அதிகரிக்கும் போது சுயமாகவே மக்கள் பொறுமை இழக்கும் நிலைமைக்குக் தள்ளப்பட்டுள்ளனர்.

அதன் காரணமாகவே வீதிக்கு இறங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால் இவை எதற்கும் அரசாங்கம் தீர்வை முன்வைக்கத் தவறிவிட்டது.

மக்களின் எதிர்பார்ப்புகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதற்கு பதிலாக மக்களை ஏமாற்றும் வகையிலேயே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை காணமுடிகின்றது.

அமைச்சர்களும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றினர். இத்தகைய பின்னணியில் நெருக்கடி நிலைமைக்கு பொறுப்பாளி தாம் அல்ல என ஜனாதிபதி கூறியுள்ளார்.

இவ்வாறான நிலைமையிலேயே நாட்டின் ஆட்சியாளர்கள் வீட்டுக்கு போக வேண்டும் என்று மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர்.

நெருக்கடி அதிகரிக்கையில் 'கோட்டா வீட்டுக்கு போ' என்று போராட்டம் நடத்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் இப்போது பொருளாதார நெருக்கடியோடு அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை அரசாங்கத்திலுள்ளவர்கள் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்ததால் அரசியல் நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தை பயன்படுத்தி அவசரகால சட்டத்தை அமுல்படுத்த நேர்ந்தது. ஆனால் அதனை மூன்று நாட்களில் வாபஸ் பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளது.

பின்னர் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தினாலும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. இப்போது பாராளுமன்றம் நடக்கின்றது அதன் மூலமும் தீர்வு காணப்படவில்லை.

இந்நிலையில் மக்களின் போராட்டங்கள் ஜனாதிபதி வீட்டுக்கு போக வேண்டும் என்பதாக உள்ளது.

இவை எதிர்க்கட்சிகளின் கோரிக்கை அல்ல. மக்களின் எழுச்சியின் மூலம் உருவாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## போராட்டங்களுக்கு குழந்தைகளை...

கலந்துகொண்டதை அவதானித்த பின்னரே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கோதுமை மா விலை...

சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன, தற்போது ஒரு கிலோகிராம் கோதுமை மா 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதன் விலை மேலும் 50 ரூபாவினால் அதிகரிக்கப்படுமாயின் தமது தொழிற்துறையினர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## மத்திய வங்கியின்...

நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் உதவியை எதிர் பார்த்திருக்கும் சூழலில் இந்த நியமனம் இடம்பெறவுள்ளது.

## நாடளாவிய ரீதியில்...

அரசாங்கம் பொறுப்பை ஏற்கத் தவறியுள்ள அதேவேளை தீர்வுகளையும் வழங்கத் தவறியுள்ள நிலையில் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பாராளுமன்ற உறுப்பினரான ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார். பொதுமக்களை ஒடுக்க அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக தமிழ்,சிங்கள புத்தாண்டு நெருங்கி வரும் நிலையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், நிலைமையை தாங்க முடியாத பொதுமக்கள் வீதிக்கு இறங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## அரசுடன் SLFP...

செயற்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலைமை தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் ஸ்ரீ பால டி சில்வா இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்கவும் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஏதேனும் பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் , அது தொடர்பில் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ளுமாறும், சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது என்று அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கேட்டுக்காண்டனர்.

## ஒரே குடும்பத்தை...

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கெப்ரக வாகனமொன்றும் முச்சக்கரவண்டியொன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளனர். பதுளை பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் கெப் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள அதேவேளை, தனமல்வில பொலஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## உலக ஷாதுலிய்யா தரீக்காவின்...

பைதுல் பாஸியில் காலமானார். அன்னாரின் ஜனாஸா அன்றைய தினம் இரவு புனித மக்காவில் உள்ள ஜன்னதுல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவராக இருந்த மர்ஹூம் அஷ் ஷெய்ஹ் அப்துல் காதர் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) இறையடி சேர்ந்த பின்னர் ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவராக நஜ்முல் உலமா அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி ரஹ்மதுல்லாஹி அலைஹி நியமனம் பெற்றதோடு உலகளாவிய ரீதியில் ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீக வழிமுறையை பரப்புவதில் அளப்பெரிய பங்காற்றினார்.

இலங்கையின் சாந்தி, சமாதானம், அபிவிருத்தி, இனங்களுக்குமிடையிலான நல்லிணக்கத்துக்காக அடிக்கடி புனித மக்காவிலிருந்து துஆப் பிராத்தனை செய்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னார் இலங்கைக்கு பல முறை விஜயம் செய்து நாட்டில் பல பாகங்களிலுமுள்ள ஷாதுலிய்யா தரீக்கா இஹ்வான்களை சந்தித்தித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## திறமை வாய்ந்த பொருளாதார...

முதலாவதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும், பொதுநலவாய செயலகத்தின் பொருளாதார விவகாரப் பிரிவின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி.

இரண்டாவதாக ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திப் பயிற்சி தொடர்பான பேராசிரியர் மற்றும் உலக வங்கியின் முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணர், பேராசிரியர் சாந்தா தேவராஜன்.

மூன்றாவதாக நிறுவனத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் சர்தேச நாணய நிதியத்தின் ஆபிரிக்க திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி திருமதி ஷார்மினி குரே ஆகியோர் இந்த ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக செயற்படுவர்.

ஜனாதிபதியைச் சந்தித்த ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல் மற்றும் உரிய தேவைகளுக்காக தொடர்ந்தும் தொடர்பாடல்களைப் பேணுதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புபட்டுள்ள இலங்கையின் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தல், தற்போதைய கடன் நெருக்கடிக்குத் தீர்வுகாணல் மற்றும் இலங்கையின் நிலையான மீட்சிக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல், ஜனாதிபதி ஆலோசனைக் குழுவின் பொறுப்புக்களாகும்.

## பண்டிகைக் காலத்தில்...

வாரமாக துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த டீசல் கப்பலுக்கு ஒரு தொகையை செலுத்துவதற்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை வரை திட்டமிடப்பட்டுள்ள ஆறரை மணி நேரம் மின்வெட்டு அமலில் இருக்கும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே PUCSL இன் முக்கிய நோக்கமாகும் என்றார்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஒருவர் இல்லாதது பெரும் கவலையளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். தற்போதைய மின்சார நெருக்கடியிலிருந்து மீள பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருப்பதால், அப்பதவிக்கான நியமனத்தின் முக்கியத்தும் தொடர்பிலும் அவர் வலியுறுத்தினார்.

அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியலமைப்புக்கு வெளியில்...

கூடாது. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியதென்றும் அவர் தெரிவித்தார்.

மக்களுக்கு வழங்கப்படும் சம்பளம் குறைக்கப்படுமென்று தவறான விமர்சனங்கள் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது முற்றாக உண்மைக்குப் புறம்பானது. மக்களுக்கான சம்பளம் மற்றும் பண்டிகைக்கால கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அரசாங்கம் 125 பில்லியன் ரூபா நிதியை ஏற்கனவே ஒதுக்கியுள்ளது. ஏப்ரல் மாத சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மேலும் 13 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலையில் எதிர்க்கட்சிகளுக்கு பொறுப்புள்ளது என அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாம் நாள் விவாதத்தின் போதே முன்னாள் நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மக்கள் எதிர்ப்பு அரசாங்கத்திற்கு மட்டுமானதல்ல. பாராளுமன்றத்திலுள்ள 225 பேருக்குமானதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாகவே மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். நாம் மக்களின் வேண்டுகோளுக்கு செவிமடுத்துள்ளோம். அதன்படியே அவசரகாலச் சட்டம் மீளப் பெறப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்கள் கட்டுப்படுத்தப்பட்டது. அமைச்சரவையும் கலைக்கப்பட்டது. இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அழைப்பும் விடுக்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிர்க்கட்சியினருக்கு நாம் மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம். அமைச்சுப் பதவிகளை ஏற்று இணைந்து செயற்படுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பதை அனைவரும் உணர வேண்டும். நாம் பிரச்சினைகளை நன்றாக அறிந்தே எதிர்க்கட்சியினருக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.

நெருக்கடிகள் நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை நாம் முன்னோக்கி முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலேயே இப்போது சிந்திக்க வேண்டும். அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க இணைந்து செயற்பட வேண்டிய அவசியமுள்ளது. மக்கள் தம் உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்தும் போது அதனை வன்முறையாக மாற்ற சிலர் முனைகின்றனர். வீடுகளுக்கு கற்களை எரிவதும் அச்சுறுத்துவதும் நடைபெறுகிறது. நிலைமையே வேறு விதமாக முன்னெடுப்பதற்கு சில சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எவரேனும் நாட்டை ஆளுவதானாலும் முதலில் நாடு பாதுகாக்கப்பட வேண்டும். இடைக்கால அரசாங்கத்தை அமைத்து சிறந்த ஆலோசனைகளையும் ஹர்ஷ போன்றோரின் திறமைகளை பயன்படுத்துவதற்கும் இது சிறந்த சந்தர்ப்பமாகும். அதற்காக நாம் மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம்.

மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பெற்றுக்கொடுப்பதோடு வெளிநாட்டில் பெற்றுக் கொண்ட கடன்களை செலுத்த வேண்டியுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் நாம் ஒரு பில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டியுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமோ உலக வங்கியிடமோ செல்ல வேண்டியுள்ளது.

நாட்டில் நிலையான தன்மை இல்லாவிட்டால் அமைச்சர்கள் இல்லாவிட்டால் எவ்வாறு அங்கு செல்ல முடியும்? யார் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த முடியுமென்பதை சிந்திக்க வேண்டும்.

அரசியலமைப்பை மீறி அரசியல் ரீதியாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. அது நிரந்தரமான தீர்வாக முடியாது. நூற்றுக்கு 80 வீதம் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாக அந்த தீர்வு அமையவேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள ஆலோசனையின்படி நாம் எமது நட்பு நாடுகளுடன் ஒரு கழகம் அமைத்து நிதி தொடர்பான உதவிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியா,சீனா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளடங்கியதாக அது அமைய வேண்டும்.

நாடு நெருக்கடி நிலையை எதிர் கொண்டுள்ளதுடன் கட்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்காமல் நாடு என்ற வகையில் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதற்காக அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி

BOC

BANK OF CEYLON இலங்கை வங்கி

தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

# ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

## 1) கடன் தொடர்பு இலக்கங்கள் 83417244, 83417279 2) நடைமுறைக் கணக்கு இலக்கம் 79496909

**இல. 09, வில்லா சண்டல்வூட், பள்ளேகலை, குண்டசாலை என்ற முகவரியில் அமைந்துள்ள "வரையறுக்கப்பட்ட மானுக் இன்ரனஷனல் (தனியார்) நிறுவனத்தாரின்" கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட மெனிக்வெல்லி வத்தை, தெல்கொட, கலவான என்ற இடத்தில் அமைந்துள்ள ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2021.04.16ஆம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2224ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2021.03.31ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ். தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் கட்டடங்களையும் இல. 50/5 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். ரி கருணாரத்ன அவர்கள் 2021.09.15ஆம் திகதி பிற்பகல் 02.00மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

### ஆதனத்தின் விவரம்

1. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தவ்கலகம கிராம சேவகர் பிரிவிலுள்ள தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள "மெனிக்வெல்லி எஸ்டேட்" (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆந் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 8 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது வடக்கில் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பஸ்கல் தயாரித்த 1992 டிசெம்பர் 22ஆந் திகதிய 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 7, 6ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் காணித்துண்டு Z காணித்துண்டு 05 என்பவற்றையும் கிழக்கில் 5, 9ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் தெற்கில் 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 11, 04ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் மேற்கில் 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 4, 7ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் (காணித்துண்டு 2 எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) காணித்துண்டு Z ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 6923 இன்படி இரண்டு ஏக்கர்கள் மூன்று றூட்கள், முப்பத்தொன்பது தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ2.றூ.3.பே.39.50) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P91/06 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இரண்டாவதாக.

மேற்குறித்த முதலாவது அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணி. கட்டடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்துப் பொறிகளும் இயந்திரங்களும்,

**இயந்திரங்களின் பட்டியல்**

| இல | விபரம் | வகை இல. | தொடர் இல. | உற்பத்தி நாடு |
|---|---|---|---|---|
| 01. | Single action stranded model Tea roller with 20hp motors and starters. | CCC47 | - | Local |
| 02. | Single action stranded model Tea roller with 20hp motors and starters | Gamini47 | - | Local |
| 03. | Single action Tea roller with 20hp motors and starters | Gamini47 | - | Local |
| 04. | Reciprocating roll breaker 12x4' stranded model with 20hp motors and starters | - | - | China |
| 05. | Automation of pressure application safety device for the 3 set of rollers including conveyors | - | - | China |
| 06. | 6 feet 3 stage Tea drier with fire wood furnace, 20hp hot air fan, capacity 325 Kg per hour | CCC | - | Local |
| 07. | 6 feet 3 stage Tea drier with fire wood furnace,20hp hot air fan, capacity 350 Kg per hour | Conquest | - | India |
| 08. | Electronic Stalk Extractor with motors and starters | PPJ 3T | - | Local |
| 09. | Middleton sifter complete with motors and starters | - | - | Local |
| 10. | Michie Sifter complete with motors and starters | - | - | Local |
| 11. | Suction winnower with conveyors, motors and starter | - | - | Local |
| 12. | Chota Sifter with motor and starters | - | - | Local |
| 13. | Rotavan for CTC machine "TIVANE' | BO-215/1000 | 2RF92020 | Local |
| 14. | CTC machine with 5 rollers and conveyor belt "GEARBOX" | TK-SNA<br>TK-SNA<br>TK-SNA<br>TK-SNA<br>TK-SNA | 1<br>2<br>3<br>4<br>5 | China |
| 15. | Continuous Fermenting machine fitted with conveyors | BLG-02/2005 | - | India |
| 16. | Humidifier line | - | - | China |
| 17. | GEM Tea drier for CTC section with fire wood furnace, motors and starter | Stand dard/333 | GTH/9/151 | India |
| 18. | Fiber met with motors and starter | - | - | China |
| 19. | Tool room equipment with 01 No. milling machine, roller chasing lathe machine 01 No. stranded grinder | - | - | Local |
| 20. | Senvec Tea Colour Separator with accessories including air compressor | R8300W | 7300 | Japan |
| 21. | Colour separator tea clearing machine complete with air compressor and other standard accessories Capacity - 350kg per hour | Nanta 8000,9000 | - | Korea |
| 22. | Colour separator tea clearing machine complete with air compressor and other standard accessories Capacity - 350kg per hour | BTR1000 | - | Local |
| 23. | Colour separator tea clearing machine complete with air compressor and other standard accessories Capacity — 350kg per hour | Shizuoka S600W | - | Japan |
| 24. | 20 No. Withering Trough 72'x6'& 2Nos.81'x6' complete with 2"2"GI welded mesh and air input unit complete with motors | - | - | Local |
| 25. | Withering Trough, size 52'x6' complete with 2"2"Gl welded mesh and air input unit complete with motors | - | - | Local |
| 26. | Firewood splitter with motors | - | - | Local |
| 27. | Dust fan | - | - | Local |
| 28. | Generator (Green Power Technology) | 500KVA | - | Local |
| 29. | Weigh bridge | - | - | Local |
| 30. | Generator (Green power technology) | 450DFED | D960603023 | USA |
| 31. | Weigh Bridge | - | - | Local |
| 32. | Mayer Auto Intelligent remote mode Tea Colour separator | 6CSX/300TD | 6040301201 491 | China |
| 33. | Colour separator Tea clearing machine complete with air compressor and other standard accessories capacity- 350 kg per hour | BTR1000 | - | Local |
| 34. | Meyer Tea Colour separator with accessories including air compressor | 4009-002690 | 6040301201 554 | China |
| 35. | Hydraulic wooden cutter with 50hp mortar | - | - | Local |
| 36. | Automated conveners including installation & resetting | - | - | - |

### மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

1. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தவ்கலகம கிராம சேவகர் பிரிவிலுள்ள தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள "மெனிக்வெல்லி எஸ்டேட்" (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆந் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 9 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 8, 5, 4ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 14ஆம் இலக்கக் காணித்துண்டையும் கிழக்கில்: 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 14, 11ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் தெற்கில் 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 11, 04ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் 11ஆம் இலக்கக் காணித்துண்டையும் மேற்கில் 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 4ஆம் இலக்கக் காணித்துண்டையும் 11, 8, (காணித்துண்டு 9 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) 5, 4 என்ற இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு ஒரு ஏக்கர் இரண்டு றூட்கள் இரண்டு தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ1றூ.2.பே.2.70) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பக்கம் P 91/07 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இயந்திரங்களின் பட்டியல்**

| இல | விபரம் | வகை இல. | தொடர் இல. | உற்பத்தி நாடு |
|---|---|---|---|---|
| 01. | Single action standed model Tea roller with 20HP motors and starters | Gamini 47" | - | Local |
| 02. | Single Action Tea roller with motors and starters | Walker 31 | - | Local |
| 03. | Single Action Tea roller with motors and starters (Used Machine) | Marshal 31 | - | Local |
| 04. | Single Action Tea roller with motors and starters | CCC 46 | - | Local |
| 05. | Reciprocating roll breakers 12x4 standard machine with motors and starters | - | - | China |
| 06. | Humidifiers complete with motor and starters one under repair | - | - | China |
| 07. | 6ft stage Tea drier, complete with fire wood furnace 20 hp hot air fan, ID fan & other motors and starters and other necessary accessories Capacity - 350Kg per hour | Andre Yule | - | India |
| 08. | Electronic Stalk Extractor with Motor and starter | PPPJ 3T | - | Local |
| 09. | Fiber Met with motor and starter | | | China |
| 10. | Suction winnower complete with conveyer, motors, starters | | | Local |
| 11. | Middleton sifter with motor and starter | - | - | Local |
| 12. | Michie sifter with motor and starter | - | - | Local |
| 13. | Chota Sifter with motor and starter | - | | Local |
| 14. | Tea Cutter | - | - | Local |
| 15. | Senvec Tea Colour Separator with air compressor and other accessories | C8300W | 132806HA9JORI | Japan |
| 16. | Colour separator Tea clearing machine with CD Camera with air compressor and other standard accessories capacity -350Kg per hour | Nanta7000 | OT052020257 | Korea |
| 17. | Colour separator Tea clearing machine with air compressor and other standard accessories capacity -350Kg per hour | BTR1000 | - | Local |
| 18. | Withering Trough 90'x6' with 2"x2" GI welded mesh and air input unit complete with motors | - | - | Local |
| 19. | Withering Trough 60x6 complete with 2"x2" GI welded I mesh and air input unit complete with motors | - | - | Local |
| 20. | Firewood splitter 60,x6 complete with 2"x2" GI welded mesh with air input unit complete with motors | | - | Local |
| 21. | Dust fan | | - | Local |
| 22. | Generator Genset) | 200KVA | - | Local |
| 23. | Compressor and other standard accessories capacity -350Kg Nanta 9,000 | 80,009,000 | OTA 044525286 | Korea |
| 24. | Auto intelligent/ remote mode tea colour separator machine | 6CSX-300TD | 6040301201472 | China |
| 25. | Hydraulic wooden cutter | - | - | Local |

என்பவற்றை உள்ளடக்கிய கடன் பெற்றவரின் அனைத்து மற்றும் தனித்த அசையா இயந்திரங்களும் உடமைகளும் மேற்குறித்த இரண்டாவது அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணி, கட்டடங்களுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ள அனைத்து வகை இதர பொறிகளும்.

### மேற்குறிப்பிடப்பட்ட மூன்றாவது அட்டவணை

1. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள **"மெனிக்வெல்லி எஸ்டேட்"** (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆந் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 2** (எஸ்ரேற் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** 1ஆம் இலக்கக் காணித்துண்டையும் **கிழக்கில்** 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 14ஆம் இலக்கக் காணித்துண்டையும் **தெற்கில்** 03ஆம் இலக்கக் காணித்துண்டையும் **மேற்கில்** எஸ்ரேற் பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 6923 இன்படி பத்தொன்பது தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0றூ.0.பே.19.70) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P91/08இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குகுலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள **"மெனிக்வெல்லி எஸ்டேட்"** (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆந் திகதிய 6923 இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 5** (எஸ்ரேற் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வறையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** 4ஆம் இலக்கக் காணித்துண்டையும் **கிழக்கில்** 9ஆம் இலக்கக் காணித்துண்டையும் **தெற்கில்** 8ஆம் இலக்கக் காணித்துண்டையும் **மேற்கில்** காணித்துண்டு Q ஐயும் எல்லைகளாக கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைப்பட இல 6923 இன்படி பன்னிரண்டு தசம் மூன்று பூச்சியம் மாம் பேர்ச்சுகள் (ஏ0.றூ.0.பே. 12.30) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P 91/09 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம். பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள **"மெனிக்வெல்லி எஸ்டேட்ட"** (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆந் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 6** (எஸ்ரேற் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** 3ஆம் இலக்கக் காணித்துண்டையும் **கிழக்கில்** காணித்துண்டு Q ஐயும் **தெற்கில்** 7ஆம் இலக்கக் காணித்துண்டையும் **மேற்கில்** எஸ்ரேற் பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு நான்கு தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ.0.பே.4.20) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P 91/10இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
4. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குறு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள **"மெனிக்வெல்லி எஸ்ரேற்"** (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆந் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு** Q (எஸ்ரேற் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** காணித்துண்டு X ஐயும் **கிழக்கில்** 5ஆம் இலக்கக் காணித்துண்டையும் (ஆனால் காணித்துண்டு S எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) **தெற்கில்** காணித்துண்டு Zஐயும் **மேற்கில்** 6ஆம் இலக்கக் காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைபட இல 6923 இன்படி பூச்சியம் தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ.0.பே.0.90) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P 91/11 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
5. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ள **"மெனிக்வெல்லி எஸ்டேட"** (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனம் பதிவுசெய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08ஆம் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு** R (எஸ்ரேற் பாதைக்கான ஒதுக்கம்) என் அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** காணித்துண்டு ஐயும் **கிழக்கில்** ஆம் இலக்கக் காணத்துண்டையும் **தெற்கில்** காணித்துண்டு Z ஐயும் **மேற்கில்** காணித்துண்டு Sஐயும் (ஆனால் காணித்துண்டு 5 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 6923 இன் படி பூச்சியம் தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.0.95) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P 91/12 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
6. சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குக்குலு கோரளையின் மெத பற்றில் கலவான பிரதேச செயலகம், பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட தெல்கொட கிராமத்தல் அமைந்துள்ள **"மெனிக்வெல்லி எஸ்டேட்"** (ஆனால் மெனிக்வெல்லி வத்தை எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) எனப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. விமலசேன தயாரித்த 2008 யூன் 08 ஆந் திகதிய 6923ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு S.** (எஸ்ரேற் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது **வடக்கில்** எஸ்ரேற் பாதையையும் 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 6ஆம் இலக்கக் காணித்துண்டையும் (ஆனால் எஸ்ரேற் பாதை, காணித்துண்டு Y, காணித்துண்டு 3 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) **கிழக்கில்** காணித்துண்டு Rஐயும் (ஆனால் காணித்துண்டு 3 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) **தெற்கில்** 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 6ஆம் இலக்கக் காணித்துண்டையும் **மேற்கில்** 1240ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 6 ஆம் இலக்கக் காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைபட இல 6923 இன்படி ஆறு தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ.0.பே.6.80) பரப்பளவையும் கொண்டுள்ளது. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பக்கம் P 91/13 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**

**இலங்கை வங்கி**
**தலைநகரக் கிளை**
**திகதி: 05/04/2022**

**திரு. எஸ்.எஸ்.பி ஏக்கநாயக்க**
**முகாமையாளர்**
**(அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை)**

உலக நீர் தினம்;

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் விசேட நிகழ்வு







பேருவளை விசேட நிருபர்

உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஏற்பாடு செய்த நிகழ்வு அண்மையில் இரத்மலானை தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் தொடர்ந்து 25 வருடங்களாக பணியாற்றும் 87 ஊழியர்கள் தங்க நாணயம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட நாடகம், ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் சபையில் நீண்டகாலம் பணியாற்றும் சிரேஷ்ட ஊழியர் ஒருவரும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நாடக போட்டியில் முதலாமிடம் பெற்ற கிரிபத்கொட விகாரமகாதேவி பாலிகா வித்தியாலய மாணவிகளது நாடகமும் சபையின் கலை, கலாசார சங்கத்தின் கலாசார நிகழ்ச்சிகளும் இதன்போது மேடையேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உப தலைவர் நிமல் ஆர். ரணவக்க, பொது முகாமையாளர் திலின விஜயதுங்க, மேலதிக பொது முகாமையாளர்களான எஸ்.ஏ. ரஷீத், எஸ்.எஸ்.ஜி. ராஜ்குமார், எல்.வி.டபிள்யூ. எதிரிவீர, ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன, சி.எச். எஸ். நிசாந்த பிரணாந்து, வசந்தா இலங்கசிங்க, கே.பி. ஆர்.எஸ். சமரசிங்க உட்பட சபையின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 ஏப்ரல் 11ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 87,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122G156 | LKA18222J140 | LKA36423D145 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 27,500 | 25,000 | 87,500 |

ஏல விற்பனைத் திகதி : 2022 ஏப்ரல் 11
தீர்ப்பனவுத் திகதி : 2022 ஏப்ரல் 18
வழங்கப்படும் திகதி : 2022 ஏப்ரல் 15
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 ஏப்ரல் 11, திங்கட்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

## கேள்வி கோரல் அழைப்பு

### பெருந்தோட்ட அமைச்சு

**தெங்கு, கித்துல், பனைப் பயிர் மேம்பாடு மற்றும் சார்ந்த கைத்தொழிற் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

**தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை**

**பல்நோக்கு துண்டாக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்தல்**

**பெறுகை இல. E/7/G/MG & NU/MC/2022**

01. தென்னைப் பயிர்ச் செய்கைக் குழுவின் தலைவரால் 2022 ஆண்டில் பல்நோக்கு துண்டாக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி | அளவு |
|---|---|
| பல்நோக்கு துண்டாக்கும் இயந்திரங்கள் (Multi chopper) | 27 |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB) மூலம் இடம் பெறும்
03. ஆர்வம்காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் வழங்கல்கள் அதிகாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் அத்துடன் கீழே குறிப்பிடப்படும் முகவரியில் வாரத்தின் வேலை நாட்களில் 2022.04.08 முதல் 2022.05.04 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் கேள்வி வைத்தலுக்காக தகைமை பெறுவதுடன் மேலதிக விபரங்களை கேள்வி கோரல் ஆவணத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
05. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றுடன் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத ரூ. 2,000.00 தொகையை தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைமையகத்தின் காசாளரிடம் காசாக செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் ஆவணத் தொகுதியை 2022.05.04ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை கீழக்காணும் முகவரிக்கு 2022.05.05 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கப் பெறல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2022.05.05 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். சகல கேள்வியுடனும் கேள்வியின் பெறுமதியில் 1% பெறுமதிக்குக் குறையாத இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்த வர்த்தக வங்கியிலில் இருந்தாவது பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற 'பொதுமுகாமையாளர், தென்னைப் பயிர்ச் செய்கை சபை' என்ற பெயரில் பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 2022.05.05 பி.ப. 2.00 இற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது அம்முகவரியில் உள்ள தலைமையகத்தின் தரைமாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு.**
**தென்னைப் பயிர்ச் செய்கை சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.**
**தொ.பே. 011-2193457, பெக்ஸ்: 011-2861332**

---

## கேள்வி அறிவித்தல்

### மாவட்ட செயலகம், கிளிநொச்சி

➢ கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பொருளைப் பெற்றுக்கொள்வதற்கான விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

➢ விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படுகின்றது.

➢ பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்கள் இதற்கான கேள்வி ஆவணங்களை 05.04.2022ஆம் திகதியிலிருந்து 26.04.2022ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை அலுவலக நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத தொகையாக குறிப்பிடப்பட்ட தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். (மேலதிக தகவல்களுக்கு தொ. இல.0212285663, தொலைநகல் இல.0212283966)

➢ கேள்வி ஆவணங்கள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு 27.04.2022ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக்கிளையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விதாரர்கள் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் (KN/EB/....) உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும் என்பதோடு பிந்திக்கடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

➢ கேள்வி திறத்தலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 18.04.2022ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

| இல. | கேள்வி இலக்கம் | விபரம் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணைப் பணம் மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப் படாத பணம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/ D012/P.Pla/617 | சேதனப்பசளை உற்பத்தி இயந்திரம் | 3 மாதம் | ரூபா 54,000.00 23.08.2022 | 2000.00 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்**
**கிளிநொச்சி மாவட்டம்**

---

## மக்கள் வங்கி

### கல்கிஸ்ஸ கிளை

**பெறுமதியான ஆதனத்தை ஏலத்தில் விற்பனை செய்தல்**

**1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளேயின் பள்ளேபத்துவ, மஹரகம பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் 496E இலக்க லியனகொட கிராம சேவையாளர் பிரிவினுள் கொட்டாவையில் அமைந்துள்ள ''நுககஹாவத்த மற்றும் வனாதேவத்த'' எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் மேர்வின் சேனநாயக்க அவர்களால் 2010-12-05ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 11332ஆம் இலக்க வரைபடத்தில் 01ஆம் லொட் இலக்கத்தைக் கொண்ட

**முப்பத்தாறு தசம் ஒன்று ஆறு பேர்ச் (ஏ0 - றூ0 - பே 36.16)**

விஸ்தீரணமான காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரஞ், செடி கொடிகள், பழ மரங்கள், கட்டிடங்கள் போன்ற அனைத்துமாகும். இந்தக் காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் C 192/95ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்**
**2022 ஏப்ரல் 29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு** ஆதனம்
**அமைந்துள்ள இடத்தில்**
**பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

இந்த ஏலவிற்பனை COVID 19 செயற்பாடுகளுக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நடாத்தப்படும்.

**ஆதனத்திற்குப் பிரவேசிக்கும் வழி:**

நுகேகொடயிலிருந்து ஹைலெவல் வீதியில் பன்னிபிட்டிய வரை பயணித்து அவ்விடத்தில் இடதுபுறமாகவுள்ள கொட்டாவ வீதியில் பன்னிபிட்டிய நேர்சிங் ஹோம் அருகில் இடதுபுறமாகவுள்ள மாலபே வீதியில் 1 கி.மீ. வரையில் பயணிக்கும் போது வித்தியாலய சந்திக்கு முன் வலது பக்கமாகவுள்ள ரணவிரு மாவத்தையில் சுமார் 200 மீற்றர் வரை பயணிக்கும் போது வலதுபுறம் 36/24ஆம் ஆதன மதிப்பீட்டு இலக்கத்தில் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 2018-10-26ஆம் திகதிய அரசாங்க வர்த்தமாணி மற்றும் 2018-10-26ஆம் திகதிய தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரமான ஏலவிற்பனை பிரேரணைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை:**

ஏலவிற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளரால் பின்வரும் வகையில் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

01. கொள்வனவு விலையில் 10%
02. உள்ளூராட்சி அதிகாரசபைக்கான வரியாக உள்ளூராட்சிக்கு 1%
03. ஏலதாரரின் தரகுத் தொகையாக விற்பனை விலையின் 2 ½ %
04. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக 2000.00 ரூபா
05. விற்பனைச் செலவுகளுடன் ஏனைய கட்டணங்கள் இருந்தால் அத்தொகை
06. விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்

கொள்வனவு விலையின் மிகுதி 90% தொகையை விற்பனை நாள் முதல் 30 நாட்களுக்குள் நுகேகொட, ஹைலெவல் வீதியில் 177ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகம், பிரதேச முகாமையாளருக்கு (கொழும்பு வெளி) செலுத்துதல் வேண்டும். தொலைபேசி இலக்கம்: 2768018,2812260, 4305863 தொலைநகல் இலக்கம்: 2817737, 2813969.

உரித்து உறுதிகள் மற்றும் இயைபுடைய ஏனைய விபரங்களை மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிடப்பட்ட வகையில் குறிப்பிட்ட தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் ஏற்கனவே செலுத்திய 10% தொகையை மீண்டும் செலுத்தாமலும் விடவும் ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**''கிங்ஸ்விவ் ரெசிடன்ஸ்''**
**282/3, 5ஆம் மாடி,**
**கோட்டே வீதி, நுகேகொட.**
**தொலைபேசி: 071-8021206**

**ஏர்வின் பெரேரா,**
**(சமாதான நீதவான், ஏலதாரர்,**
**நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,**
**சத்தியபிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்**

---

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டப்படி காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது இல.:- DSO/HOM/LAC/91**
**காணி அமைச்சின் குறிப்பு**
**இல. :- 4-3/6/2017/HW/01**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 16.03.2022ஆம் திகதிய 2271/32 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ஹோமாகம |
| கிராமத்தின் பெயர் | : கஹத்துடுவ |
| கிராம நிலதாரி பிரிவு | : இல. 602C, கஹவத்துடுவ கிழக்கு |
| வரைபட இலக்கம் | : கடத்திரள் வரைபட இல. 520037, தொகுதி இல. 25, தாள் இல. 2 |
| துண்டு இலக்கம் | : 11 (1-11) |
| விஸ்தீரணம் | : 1.0506 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**ஹோமாகம.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**ஹோமாகம.**
2022.04.07

---

சீட்டிலுக்கப்பட்ட திகதி 06.04.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4727
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,804,810.00
அச்சிடப்பட்ட திகதி 04.04.2022
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 5 3 5 1 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,880,230.00

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 06.04.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1233
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,970,400.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 9 9 1 1 5 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,904,763.20

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /04 /06
சீட்டிழுப்பு இலக்கம் : 759
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,049,160.00
S 08 43 56 73
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,603,212.80

கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1076
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.04.05
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,545,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,398,434.00
Q 21 01 06 32 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : infor@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

தெபோராள் சர்வதேச ஐக்கியம்

# நறுமணம் அற்றதை

# நறுமணமாக்கும் வார்த்தை










தெபோரா எமிலி அதிசயராஜ்

மனிதன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என மத்தேயு 4:4 லிலும், ஆபகூக் 2:4 ல் தன் விசுவாசத்தினாலே

நீதிமான் பிழைப்பான் என எழுதியிருக்கிறது. பிழைப்பதற்கு விசுவாசம் தேவை, விசுவாசம் வருவதற்கு வார்த்தை தேவை. வார்த்தை தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வருகிறது. வாயிலிருந்து புறப்படும் வார்த்தை சர்வசிருஷ்டிக் கர்த்தாவின் நினைவில் நிர்ணயம் பண்ணியிருக்கிறது. நிர்ணயம் பண்ணினதுதான் பதில். புதிலை தேவனுடைய பாதத்தில் அமர்ந்து தியானிக்கும் போது, கர்த்தருடைய வார்த்தை,தீர்க்கதரிசனம் மூலமாக அல்லது சொப்பணம் மூலமாக பெற்றுக்கொள்கிறோம். தியானத்தில் அமர்ந்திருக்கும் பொழுது பரலோகத்திலிருந்து வெளிப்படுவதுதான் பதில். பதிலை பேசும்படியாக ஏற்படுத்தப்பட்ட நாம் பூமியில் கண்களினால் காண்பதையும் காதுகளில் கேட்பதை, கண்டு கேட்டு அத்தோடு இன்னும் வார்த்தைகளை பேசுவதை மனிதன் வழக்கமாக கொண்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கோபத்தோடும், வியாபார விளம்பர நோக்கத்தோடும் எதிர்மறையான செய்திகளை பரப்பி நறுமணமாயிருக்க வேண்டியவைகள் நறுமணம் அற்றுப் போயிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதனின்

தவறான சிந்தனைகளால் தவறான திரவம் உற்பத்தியாகி உடலையே கெட்டுப்போகப் செய்கிறது.

தவறான பேச்சுவார்த்தைகள் சீர்கேடான சமுதாயத்தை உருவாக்குகின்றது.

அடுப்படியில் சமையல் செய்யும் போது, சமையலுக்காக கூடை நிறைய காய்கறிகளைக் கொண்டுவந்தும், துப்புரவு செய்து எடுக்கும்போது கொஞ்சமாகத்தான் இருக்கின்றது. அனைத்திற்கும் விலைகொடுத்து கொண்டுவந்தும், அதில் தோலும் துருத்தியுமாக வீசும் பொருள் இருக்கும்.

செவிக்குள் வார்த்தைகள் வரும்போது அதை அப்படியே மனதுக்குள் வைத்துவிடக்கூடாது. இருதயத்தில் வைத்து, சுத்தமாக்கி, வேறுபடுத்தி சரியானவைகளை மனதிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இருதயம் இரத்தத்தை எப்படி சுத்திகரித்து முழு உடலுக்கும் அனுப்புவதால் உடல் உறுப்புகள் சீராய் செயல்படுவதால் உடல் ஆரோக்கியமாயிருக்கின்றது.

அதுபோல தான் வாயிலிருந்து சரியான பதிலை பேசவேண்டும். இல்லை,சரிவராது, நடக்காது, தொலைந்துபோகும், இனிவிடிவு இல்லை என்று போகும்போது, பேசினபடி, சொன்னபடிதான் நடக்கும்.

ஒவ்வொரு பிரஜையும் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டியது எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை அவசியம். நம்பிக்கை எப்படிவரும்? ஆண்டவரிடமிருந்து வரும் வார்த்தை எனும் பதில். பதில் நிறைவேறும் அளவும் நம்பிக்கையோடு பேச வேண்டும்.பரிசுத்த வேதாகமத்தில் லாசரு என்ற ஒருவன் மரித்து நான்கு நாளான பின்பு இயேசு அந்த கிராமத்திற்கு வந்தார். லாசருவின் சகோதரிகள் நீர் எங்களுடன் இருந்திருந்தால், இவன் மரித்திருக்கமாட்டான் என்றனர். உயிருடன் எழும்புவான் என்று இயேசுகிறிஸ்து சொன்னதும், செத்து நான்கு நாளாகிவிட்டது இப்போது நாறுமே என்றனர்.

அதற்கு இயேசு, நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய் என்று சொல்லி அவனை உயிருடன் எழுப்பினார்.

கொட்டுப் போன சரீரத்தை இயேசு கிறிஸ்துவின் வார்த்தை போய் அவனை உயிருடன் எழும்பச் செய்ததே, அதே போல் வீணாகிப் போன தேசத்தின் நிலையைக் கர்த்தர் நிச்சயமாக மாற்றுவார் எசேக்கியேல் 37: 112 பிரேத குழிகளில் உலர்ந்த எழும்புகள் கிடக்கின்றது.

இவைகளை நோக்கிப் பார்த்து தீர்க்கத்தரிசனம் உரை என்றார்.

அவன் தீர்க்கதரிசனம் உரைக்கையில் பல ஆண்டுகளாக மரித்து உலர்ந்து போன எழும்புகள் ஒன்றோடு இணைந்து, நார், தசை, தோல் பின்பு உயிர் உண்டாகி ஒரு சேனையாய் நின்றது.

இது எப்படி சாத்தியமாகும் என யோசிக்கலாம். ஒருவனை ஒருவன் சபித்தால்

அது எத்தனை வேதமாக செயல்படுகிறதோ, அதைக்காட்டிலும் அதிகமாக கர்த்தரின் வார்த்தை செயல்படும்,இதை சிறுவயதிலிருந்து அனுபவப்பட்ட நான் என் சமையலறையில் நடைமுறைப்படுத்தினேன. அரிசி இல்லை, பருப்பு இல்லை, அது இல்லை, இது இல்லை என்று இல்லை இல்லை என புலம்பிய நான், கர்த்தரின் வார்த்தையால் வரும் பதிலையே பேச ஆரம்பித்தேன். கண்டேன் மாற்றத்தை. அதை நான் மட்டும் எழுதி வைக்காமல் பலரும் பெறும்படியாக கற்றுக்கொடுத்தேன். எனக்காக என் நண்பர்களுக்காக நான் சமையலறையில் கண்ட வெற்றியை அப்படியே நிறுத்திவிடாமல் தேசத்திற்காக, தேசங்களுக்காக,கர்த்தர் தந்த பதிலை பிரகடணம் பண்ண ஆரம்பித்தேன். இந்த பிரகடணத்தின் வல்லமையால் பெற்ற விடுதலை, நன்மைகள் ஏராளம், ஏராளம். நறுமணம் அற்றுப் போன என் சமையலறை, நறுமணம் அற்றுப் என் வாழ்க்கை நறுமணமாய் மாறினது எத்தனை உண்மை.வாருங்கள் நறுமணம் அற்றுப் நம் தேசத்தை நறுமணம் அடையச் செய்வோம். இது எங்களால் சாத்தியமல்ல. நமக்குள் வாசமாயிருக்கிற ஆவியானவரால் ஆகும். நம் தேசத்தை பார்த்து நன்மையானதை சிந்திப்போம்,சொல்லுவோம். மழையானது பூமியின் மேல் நனைந்து முளைக்கிளம்பி, விளையச் செய்வது எப்படியோ,

(ஏசாயா 55:10,11) அப்படியே நம்முடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தை, பதில் போய் இந்த தேசத்தை மறுபடியும் கட்டியெழுப்பி வாசனை வீசச் செய்யும். நான் நம்புகிறேன் ஆண்டவரின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் வீணாகாது. பதிலாகிய வார்த்தை மட்டுமே வாழ்வடையச் செய்யும். வாழைப்பழத்தை சாப்பிட்டு தோலை வீசுவோம். சரியான நேர்த்தியான வார்த்தைகளை பிரகடணப்படுத்துவோம், விதைப்போம், நீர் ஊற்றுவோம். விளையச் செய்கிறவர் விளையச் செய்வார்.

நறுமணம் அற்றுப் போன காலம் முடிந்து, நறுமணம் வீசும் நாள் வந்துவிட்டது. நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய். கர்த்தர் தாமே நம் தேசத்தை ஆசீர்வாதமாகும்படி செய்வாராக.



தகவல், படங்கள்:
**சவரிமுத்து தேவதாஸ்**
























# சர்வதேச செய்திகள்

## பிளிங்கன் – ஜெய்சங்கர் இடையே பேச்சுவார்த்தை



2 + 2 பேச்சுவார்த்தையை முன்னிட்டு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இடையே பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளது.

இரு தரப்பு விவகாரங்கள் மற்றும் உக்ரைன் தொடர்பில் தாம் உரையாடவுள்ளதாக ஜெய்சங்கர் ட்விட்டரில் தெரிவித்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான 2 + 2 பேச்சுவார்த்தை வரும் ஏப்ரல் 11 ஆம் திகதி வொசிங்டனில் நடைபெறவுள்ளது. இதன் போது ஜெய்சங்கர் மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்னாத் சிங் இருவரும் பிளிங்கன் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் ஆகியோரை சந்திக்கவுள்ளனர்.

வேறு சந்திப்புகளிலும் இந்திய அமைச்சர்கள் ஈடுபடவுள்ளனர்.

### ரஷ்ய தாக்குதல் அச்சம்

## கிழக்கு உக்ரைனிலிருந்து வெளியேறும் பொதுமக்கள்



ரஷ்யாவின் தாக்குதல் பற்றிய எச்சரிக்கையை அடுத்து கிழக்கு உக்ரைனிய மக்கள் அங்கிருந்து வெளியேறுவதில் முண்டியடித்து வருகின்றனர். தலைநகர் கியேவைச் சூழ இடம்பெற்றதாகக் கூறப்படும் படுகொலைகளை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய படைகள் தலைநகர் கியேவை சூழ உள்ள பகுதிகள் மற்றும் வடக்கில் இருந்து பின்வாங்கிய நிலையில் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் தாக்குதல் தொடுக்க தயாராகி வருவதாக கூறப்பட்டுள்ளது.

விரைவில் வெளியேறும்படி டோன்பாஸிலுள்ள லுஹான்ஸ்க், டோனட்ஸ்க் பகுதிகளில் இருக்கும் மக்களை அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். எதிரிப் படைகள் எல்லா இடங்களையும் முற்றிலும் அழித்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. உக்ரைனிய படைகளும் இந்தத் தாக்குதலுக்கு தயாராகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புட்டினின் மகள்மார் மீது அமெரிக்கா புதிய தடை







ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் மகள்மார் உட்பட அவரது நெருங்கிய வட்டத்தை சேர்ந்தோரைஇலக்குவைத்துஅமெரிக்கா புதிய தடைகளை விதித்துள்ளது.

இந்தப் பட்டியலில் வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவின் குடும்பத்தினர் மற்றும் பிரதான வங்கிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தலைநகர் கியேவுக்கு அருகில் புச்சா நகர வீதிகளில் சிதறிக் காணப்படும் பொதுமக்களின் சடலங்கள் உட்பட ரஷ்ய துருப்புகள் செய்ததாகக் குற்றம்சாட்டப்படும் அட்டூழியங்கள் பற்றி புதிய ஆதாரங்கள் வெளியானதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆதாரமற்ற இந்தப் புகைப்படங்கள் உக்ரைன் அதிகாரிகளால் இட்டுக்கட்டப்பட்டவை என்று ரஷ்யா கூறியது. புச்சா நகர் ரஷ்ய கட்டுப்பாட்டில் இருந்தபோது பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றிய படங்கள் வெளியான நிலையிலும், இது "உக்ரைன் அரசின் கொடிய மற்றும் ஆத்திரமூட்டும்" ஒன்று என்று இந்த விடயம் பற்றி புட்டின் குறிப்பிட்டுள்ளார். புச்சா கொலைகள் பற்றி கடந்த புதன்கிழமை பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "பாரிய போர் குற்றங்களை விட குறைவாக எதுவும் நடக்கவில்லை" என்றார்.

"இந்த குற்றவாளிகளை பொறுப்புக்கூற செய்வதற்கு பொறுப்புடைய நாடுகள் ஒன்றிணைய வேண்டும்" என்று பைடன் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் புட்டினின் மகள்களான கடரினா விளாடிமிரோனா டிகொனோவா மற்றும் மரியா விளாடிமிரோனா வொரொன்சோவா ஆகியோர்தடைகளுக்குஉட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. புட்டினின் வயதுவந்த குழந்தைகளாக இருப்பதால் அவர்களின் சொத்து மற்றும் சொத்துகள் மீதான வருவாய் முடக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் டிகொனோவா, ரஷ்ய அரசு மற்றும் பாதுகாப்பு துறைக்கு உதவும் ஒரு தொழில்நுட்ப நிர்வாகியாக இருப்பதாக இந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அவரது சகோதரியான வொரொன்சோவா, அரச நிதியிலான திட்டம் ஒன்றுக்கு தலைமை வகிக்கிறார்.

புட்டினின் மகள்மார் இலக்கு வைக்கப்பட்டது பற்றி கேள்வி எழுப்பப்பட்டபோது, அவர்கள் தமது தந்தையின் சில சொத்துகளை கட்டுப்படுத்துவதாக அமெரிக்கா கருதுகிறது, என்று பைடன் நிர்வாகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் அரசில் செல்வாக்கு செலுத்தும் எட்டு செல்வந்தர்கள் மற்றும் ரஷ்ய வங்கிகளுக்கு எதிராக பிரிட்டன் மேலும் தடைகளை அறிவித்துள்ளது. போர் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் ரஷ்ய நிலக்கரி இறக்குமதிக்கு தடை விதிப்பது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் விவாதித்து வருகிறது.

அமெரிக்காவின் புதிய தடைகள் பற்றிய அறிவிப்பை அடுத்து, "எந்த ஓர் உறுதியற்ற நிலையையும் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை" என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## ஷங்காய் முடக்கம்: தீர்ந்துவரும் உணவு



சீனாவிலுள்ள ஷங்காயில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அறிவிக்கப்பட்ட முடக்கநிலை இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் சிரமம் கண்டுள்ளனர்.

வீட்டிலேயே இருக்க வேண்டிய குடியிருப்பாளர்கள் உணவு, குடிநீர் போன்றவற்றை எளிதில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உணவு, மளிகைப்பொருள் ஆகியவற்றை விநியோகம் செய்யும் நிறுவனங்கள் நெருக்குதலை எதிர்நோக்குகின்றன. இதற்கிடையே ஷங்ஹாயில் அரிசி, இறைச்சி போன்ற உணவுப்பொருட்கள் தேவையான அளவில் இருப்பதாக மாநிலத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் திடீரென விநியோகம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் நிறுவனங்கள் நெருக்கடியைச் சந்தித்துள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டது.

பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பது பற்றிக் கலந்துபேச மாநில அதிகாரிகள் இரவு வேளைகளில் சந்திப்புகளை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஆப்கான் தொடர்பில் இணைய வழி மாநாடு

தலிபான்களின் ஆட்சியின் கீழ் பயங்கரவாதத்தின் மையமாக ஆப்கானிஸ்தான் மாறும் அச்சுறுத்தல் குறித்து சுட்டிக்காட்டியுள்ள அனைத்து ஆப்கானியர்கள் குழு, அவர்கள் கல்வித் துறையில் மேற்கொள்ளும் மாற்றங்கள் தொடர்பிலும் தம் கவலைகளை வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் மனித உரிமைகள் நிலைமை என்ற தொனிப்பொருளில் தெற்காசிய கற்கைகளுக்கான ஐரோப்பிய மன்றம் ஒழுங்கு செய்திருந்த மெய்நிகர் கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொவிட் பாதித்தவர்களுக்கு இரத்தம் உறையும் அபாயம்



கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறு மாதம்வரை இரத்தம் உறையும் அபாயம் இருப்பதாகப் புதிய ஆய்வு சொல்கிறது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அந்தச் சிக்கலை முன்வைத்தன. ஆனால் பி.எம்.ஜி மருத்துவச் சஞ்சிகை நடத்திய புதிய ஆய்வு இரத்தம் உறையும் அபாயம் எவ்வளவு காலம் இருக்கும் என்று சோதித்தது.

ஆய்வாளர்கள் ஸ்வீடனில் கொவிட்–19 வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு மில்லியனுக்கும் அதிகமானோரை அந்த வைரஸால் பாதிக்கப்படாத நான்கு மில்லியன் பேருடன் ஒப்பிட்டுப் பார்த்தனர்.

கொவிட்–19 வைரஸ் தொற்றியவர்களுக்கு இரத்தம் உறையும் அபாயம் ஆறு மாதம்வரை நீடிப்பதாக அந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது. நுரையீரலுக்குச் செல்லும் இரத்தக் குழாயை அடைக்கும் அபாயத்தை ஆய்வு சுட்டிக்காட்டியது.

கால்களில் இரத்தம் உறையும் அபாயம் மூன்று மாதம்வரை நீடிப்பதாகவும் அந்த ஆய்வு காட்டுகிறது.

## சர்வதேச கொவிட் பாதிப்பு, பலி சரிவு



சர்வதேச அளவில் புதிய கொரோனா பாதிப்பு மற்றும் பலி எண்ணிக்கை முந்தைய வாரத்தை விட கடந்த வாரம் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள வாராந்திர அறிக்கையில் இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் கொரோனா தொற்று கண்டறியப்படுவோர் மற்றும் அந்த நோய்க்கு பலியாவோரின் வாராந்திர எண்ணிக்கை தொடர்ந்து சரிந்து வருகிறது.

கடந்த வாரத்தில் மட்டும் உலகம் முழுவதும் 90 இலட்சம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இது, முந்தைய வாரத்தில் உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட 16 சதம் குறைவாகும். அதேபோன்று, கடந்த வாரத்தில் 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாவுக்கு பலியாகினர். இந்த எண்ணிக்கை, முந்தைய வாரத்தைவிட குறைவாகும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் பலி மற்றும் பாதிப்பு எண்ணிக்கை முந்தைய வாரத்தைவிட பரவலாகக் குறைந்துள்ளது.

## ஆஸி. பழங்குடி எச்சங்களை மீள் அடக்கம் செய்ய முடிவு



அவுஸ்திரேலியாவில் சுமார் 42,000 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த 108 அபோரிஜினல் பழங்குடியினரின் எச்சங்கள் அவுஸ்திரேலியாவின் தொலைதூரப் பகுதிகளில் மீண்டும் அடக்கம் செய்யப்படவுள்ளன.


இந்த உடல்கள் எந்த அனுமதியும் இன்றி பல ஆண்டுகளுக்கு முன்னர் தோண்டி எடுக்கப்பட்டவையாகும். 1974 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட பிரபல முங்கோ மனிதனின் எச்சமும் உள்ளது. இது அவுஸ்திரேலிய வரலாற்றை திருப்பி எழுத உதவியது.

இந்த எச்சங்களை மீண்டும் அடக்கம் செய்வது பற்றி நான்கு ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுக்கு பின்னரே மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

1960 மற்றும் 1980களுக்கு இடையே பரபரப்பான தொல்பொருள் கண்டுபிடிப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் காலப்பகுதியிலேயே இந்தப் பழங்குடியினரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில் இந்த எச்சங்களை எதிர்வரும் மாதங்களில் தேசிய பூங்காக்களில் 26 அடையாளம் தெரியாத இடங்களில் அடக்கம் செய்ய அவுஸ்திரேலிய அரசு கடந்த புதன்கிழமை அறிவித்தது.

## பறக்கும் விலங்கின் எச்சம் சிலி நாட்டில் கண்டுபிடிப்பு



அடகாமா பாலைவனத்தில் சுற்றித்திரிந்த புராதன, அரிய வகை ஊரும் விலங்கின் பாதுகாக்கப்பட்ட எலும்புகளைக் கண்டுபிடித்திருப்பதாக சிலியின் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

அவை 100 மில்லியன் ஆண்டுகளுக்கும் பழைமையானவை என்று கூறப்படுகிறது. அவை டைனோசர்களுடன் வாழ்ந்த டெரோசர்ஸ் எனும் பறக்கும் விலங்கின் எலும்புகள் என்பதை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அவை டைனோசர்களைப் போன்று நீண்ட இறக்கைகளைக் கொண்டிருந்ததாகவும், நீண்ட மெல்லிய பற்களைக் கொண்டு தண்ணீரை உறிஞ்சிக் குடித்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய கண்டுபிடிப்பு மிக அரிது என்பதால் இது சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெறும் என்று நம்பப்படுகிறது.

கண்டுபிடிப்பால் டெரோசர்ஸின் உடற்கூற்றை மட்டுமின்றி, அதன் வழக்கங்களையும் ஆராய முடியும். இந்த எலும்புகள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட நிலையில் இருந்தன. பெரும்பாலும் இத்தகைய எலும்புகள் தட்டையாக, உடைந்த நிலையில் காணப்படும். ஆனால் இந்தக் கண்டுபிடிப்பில் முப்பரிமாண வடிவில் பாதுகாக்கப்பட்ட எலும்புகள் கூட கண்டெடுக்கப்பட்டதாய் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## யெமன் ஜனாதிபதி ஹாதி அதிகாரத்தை கையளிப்பு



புதிய ஜனாதிபதி தலைமைத்துவ சபை ஒன்றை அமைத்திருக்கும் யெமன் ஜனாதிபதி அப்த் ரப்பு மன்சூர் ஹாதி, தனது அதிகாரங்களையும் அந்த சபைக்கு வழங்கியுள்ளார்.

ஆட்சிமாற்ற செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு இந்த சபை அமைக்கப்பட்டிருப்பதாகவும் பல ஆண்டுகளாக நீடிக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுடனான பேச்சுவார்த்தைக்கு இந்த சபைக்கு அதிகாரம் அளிக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை அடுத்து போரால் பாதிக்கப்பட்ட யெமன் பொருளாதாரத்திற்கு 3 பில்லியன் டொலர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக சவூதி அரேபியா அறிவித்தது.

ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் 2014 ஆம் ஆண்டு தலைநகர் சனாவை கைப்பற்றியது தொடக்கம் யெமனில் போர் நீடித்து வருகிறது. 2012 ஆண்டு இரண்டு ஆண்டு நிலைமாற்றுக் காலத்திற்கு தேர்வு செய்யப்பட்ட ஹாதி நாட்டின் தென் பகுதிக்கு தப்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

# அல்லாஹ்வின் ரஹ்மத் நிறைந்த மாதம்

ஓர் இறை நம்பிக்கையாளனைப் பொறுத்த வரையில் அவனுடைய வாழ்வில் அல்லாஹ்வின் அருள் என்பது மிகவும் ஆளுமைக்குரிய ஒன்றாகும். இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் அருள் அவனைச் சூழ்ந்திருக்க வேண்டுமென அவன் ஆசிப்பதும், நேசிப்பதும் ஈமானுக்கு அடுத்தபடி மிக முக்கியமான விடயம்.

அந்த வகையில் இஸ்லாமிய அறிஞர்கள், 'ஓர் இறை நம்பிக்கையாளன் நேர்வழியில் நடப்பதற்கும், வெற்றிக்கான வாழ்க்கை வாழ்வதற்கும், சீதேவித்தனம் நிலைத்திருப்பதற்கும், நல் அமல்கள் செய்வதற்கும், அல்லாஹ்வின் ஏவல்களை ஏற்று நடப்பதற்கும், விலக்கல்களை தவிர்ந்து கொள்வதற்கும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், சுவனத்தில் நுழைவதற்கும், நரகில் இருந்து ஈடேற்றம் பெற்றுக்கொள்வதற்கும் அல்லாஹ்வின் அருள் மிகவும் இன்றியமையாதது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வின் அருளின்றி யாரும் சுவர்க்கம் நுழைய முடியாது' என்றார்கள். அதற்கு ஸஹாபாக்கள் 'நீங்களுமா?' என நபி (ஸல்) அவர்களிடம் வினவ, 'என்னையும் அல்லாஹ்வின் அருள் சூழ்ந்து கொள்ளவில்லை என்றால் சுவர்க்கம் நுழைய முடியாது' எனப் பதில் அளித்தார்கள்

இதன்படி, அல்லாஹ்வின் அருள் எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் மிக மிக அத்தியாவசியமானது தெளிவாகிறது.

இதனை அல் குர்ஆன் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது. அவற்றில்

**'அல்லாஹ்வின் அருள் இல்லை என்றால், 'உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும், கருணையும் இல்லாமல் போயிருந்தால், உங்களில் சிலரைத் தவிர அனைவரும் ஷைத்தானையே பின்பற்றி இருப்பீர்கள்.'**

**(அல் குர்ஆன்)**

என்பதும்,

**'உங்களின் மீது அல்லாஹ்வின் அருளும், கருணையும் இல்லாமல் போயிருந்தால், நீங்கள் நிச்சயம் எப்பொழுதோ பேரிழப்பிற்கு ஆளாகியிருப்பீர்கள்.' (அல் குர்ஆன்)**

என்பதும்

**'உங்களின் மீது அல்லாஹ்வின் அருளும், கருணையும் இல்லாமல் போயிருந்தால், நீங்கள் எந்த விஷயங்களில் மூழ்கியிருக்கின்றீர்களோ அதன் பயனாக இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து பெரும் வேதனை ஏற்பட்டுவிடும்.'**

**(அல் குர்ஆன்)**

என்பதும் குறிப்பிடத்தக்க வசனங்களாகும்.

அதேநேரம் அல்லாஹ், ரஹ்மான் என்கிற அருளாளனாகவும் ரஹீம் என்கிற நிகரற்ற அன்புடையோனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான். அல் குர்ஆனில் ரஹ்மான் அருளாளன் என்று சுமார் 54 இடங்களில் அவன் குறிப்பிட்டுள்ளான். அதேநேரம் ரஹீம் – நிகரற்ற அன்புடையோன் என்று அல்குர்ஆனில் சுமார் 95 இடங்களில் அவன் கூறியுள்ளான்.

ரஹ்மான், ரஹீம் ஆகிய இந்த இரண்டின் மூலச்சொற்களும் ரஹ்மத் என்பதைக் குறித்து நிற்பதாகும். ரஹ்மத் என்ற வார்த்தைக்கு ரிக்கத் - மென்மை, ஷஃபகத்-இரக்கம், தஅத்துஃப்-கிருபை, என்று பொருள்படும். ரஹ்மான், ரஹீம் என்ற இந்த வார்த்தைகளைத் தினமும் பர்ளான தொழுகையின் 17 ரக்அத்தில் 27 தடவை ஓதுகின்றோம்.

அல்லாஹ்வின் அருள் மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து கொள்வதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அதனால் இப்புனித ரமழானில் ரஹ்மத்தைக் கோருவோருக்கு அதனை வழங்குவதாக அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். இருந்தும் எம்மில் எத்தனை பேர் அதை சரியாக பெற்று கொள்கிறோம் என்பது எண்ணிப் பார்க்க வேண்டிய விடயமாகும். ஆனால் அல்லாஹ்விடத்தில் அவனது இறைத்தூதர்கள் அனைவரும் அவனது ரஹ்மத்தைக் கோரியுள்ளார்கள். அதனை அல் குர்ஆன் தெளிவாக எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் ஆதம் (அலை) அவர்கள்

**'அதற்கு அவர்கள், 'எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்' என்று கூறினார்கள்.**

**(அல் குர்ஆன் 7:23)**

என்றும், மூஸா (அலை) அவர்கள்,

**'என் இறைவனே! என்னையும் என் சகோதரரையும் மன்னிப்பாயாக! உன் ரஹ்மத்தில் (நற்கிருபையில்) பிரவேசிக்கச் செய்வாயாக! ஏனெனில், நீயே கிருபையாளர்களிலெல்லாம், மிக்க கிருபையாளன்' என்று (பிரார்த்தித்துக்) கூறினார். (அல் குர்ஆன் 7:151)**

என்றபடியும் அல்லாஹ்வின் ரஹ்மத்தைக் கோரியுள்ளார்கள். இவ்வாறு மகத்துவம் பெற்று விளங்கும் அல்லாஹ்வின் ரஹ்மத்தை அடைந்து கொள்வதற்காக இம்மாதத்தில் உச்சபட்ச முயற்சிகளில் ஈடுபடுவோம். அந்த வகையில் அவனது ரஹ்மத்தை அடைந்து கொள்வதற்காக சொந்த பந்தங்களோடு சேர்ந்து வாழ வேண்டும். நன்மையான காரியங்களில் ஈடுபட வேண்டும்.

அதேநேரம் அஸர் தொழுகைக்கு முன்னாள் நான்கு ரகாஅத் சுன்னத் தொழுபவருக்கும், அனாதை (எதீம்)களுக்காக உழைப்பவர்களுக்கும், பேசினால் உண்மை பேசுவதல் அல்லது மௌனமாக இருப்பவர்களுக்கும் ஹலாலான முறையில் வியாபாரம் செய்பவர்களுக்கும் வீண்விரயம், கஞ்சதனம் இன்றி செலவு செய்பவர்களுக்கும் தான தர்மங்கள் செய்பவருக்கும் தன் பிள்ளைகளை சீராக ஒழுக்கத்தோடு வளர்ப்பதற்காக வீட்டில் சாட்டையைத் தொங்க விடுபவருக்கும் இரவு நேரத்தில் எழுந்து தொழுபவர் தன் குடும்பத்தாரை தொழ எழுப்பி விடுபவருக்கும் அல்லாஹ்வின் ரஹ்மத் கிடைக்கப் பெறும்.

மேலும் அல் குர்ஆனை அதிகமதிகம் ஓதுவதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைந்து கொள்ளலாம். அத்தோடு வாங்கும் போதும் விற்கும் போதும் மிருதுவாக நடந்து கொள்வதன் மூலம் அல்லாஹ்வின் அருளையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு இப்புனித ரமழானில் அல்லாஹ்வின் ரஹ்மத்தை அடைந்து கொள்வதற்காக முயற்சிப்போம். அதற்குரிய நன்மக்களாக அல்லாஹ் எம்மை ஆக்கி அருள்பாளிக்கட்டும்.

அஷ்ஷெய்க்
ஏ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி (காஷிபி)...

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நரக விடுதலை பெற்றுத் தரும் நோன்பு

'ஸவ்ம்' என்ற சொல்லுக்கு, தடுத்துக்கொள்ளல், பாதுகாத்துக் கொள்ளல் என்பன பொருளாகும். அதாவது, கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கக் கூடிய காரியங்களை விட்டும் தவிர்த்திருத்தலை இது குறிக்கும். இஸ்லாத்தின் நான்காவது கடமையான நோன்பு, ஹிஜ்ரி இரண்டில் கடமையாக்கப்பட்டது. ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதை இறைவன் கடமையாக்கியுள்ளான்.

இது மகத்துவமிக்க சிறப்புக்குரிய மாதமாகும். இம்மாதத்தின் சிறப்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில், **'ரமழான் மாதம் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்பட்டு, நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன'** என்று கூறினார்கள்.

இம்மாதத்தில் அதிகமான மனிதர்கள் சுவர்க்கம் செல்லக்கூடிய வாய்ப்பை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். அதேபோன்று நரகம் செல்லக்கூடிய வாய்ப்பை தடுத்துள்ளான். இதன் மூலம் இம்மாதத்தின் சிறப்புக்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

இம்மாதத்தின் சிறப்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் மற்றொரு தடவை குறிப்பிடுகையில், **'யார் ஈமானுடனும் நன்மையை ஆதரவு வைத்தவராகவும் ரமழான் மாத இரவுகளில் நின்று வணங்குகிறாரோ, அவருடைய முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'** என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இதன் ஊடாக ரமழானில் நோன்பு நோற்பது, இரவு காலங்களில் நின்று வணங்குவது போன்றவற்றின் மூலம் மனிதன் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளன. அதனை இந்நபிமொழி எடுத்துக் காட்டுகிறது.

மேலும் நபி (ஸல்) அவர்கள் ஷஃபான் மாத இறுதியில் ஒரு நாள் மக்களுக்கு உபதேசமொன்றைச் செய்தார்கள். அந்த உபதேசத்தின் போது, **'மனிதர்களே! உங்களை மகத்துவமிக்க, அபிவிருத்தியுள்ள ஒரு மாதம் முன்னோக்கிக் கொண்டிருக்கின்றது. அம்மாதத்தில் ஆயிரம் (1000) மாதங்களைவிட சிறந்ததொரு இரவு உள்ளது. அம்மாதத்தில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கி உள்ளான். அத்தோடு இம்மாத இரவு காலங்களில் நின்று வணங்குவதை சுன்னத்துக்களில் நின்றும் ஆக்கியுள்ளான்.**

இம்மாதத்தில் சுன்னத்தான இறை வணக்கங்களில் ஈடுபடும் போது, ஏனைய மாதங்களில் ஒரு பர்ளை நிறைவேற்றியமைக்கான நன்மைகள் கிடைக்கப்பெறும். அதேநேரம் இம்மாதத்தில் ஒரு பர்ளை நிறைவேற்றினால், எழுபது (70) பர்ளுகளை நிறைவேற்றியமைக்கான நன்மைகள் கிடைக்கும்.

மேலும் இம்மாதத்தில் இறை விசுவாசியின் உணவு விருத்தியடையச் செய்யப்படுகிறது. யாராவது ஒருவர் ஒரு நோன்பாளியை நோன்பு திறக்க வைத்தால் அது அவருடைய பாவங்களை மன்னிப்பதற்கும் நரகத்திலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கும் உதவுகின்றது. மேலும், அந்நோன்பாளிக்குக் கிடைக்கின்ற நன்மைகளைப் போன்று அவருக்கும் கிடைக்கப்பெறும்.

அதனால் ஸஹாபாக்கள் ஒரு தடவை, **'அல்லாஹ்வின் தூதரே! எங்களில் அனைவரும் நோன்பாளியை நோன்பு திறக்கச் செய்பவராக இல்லையே?' என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ஒரு மிடர் பாலைக் கொண்டோ அல்லது ஒரு மிடர் நீரைக் கொண்டோ நோன்பு திறக்கச் செய்தாலும் அந்நன்மையை அல்லாஹ் அவருக்கு வழங்குவான்' எனப் பதிலளித்தார்கள். (அல் ஹதீஸ்)**

அதேநேரம், **யார் ஒரு நோன்பாளிக்கு வயிறு நிறைய உணவளிப்பாரோ, அவருக்கு எனது 'ஹவ்லுல் கவ்தர்' எனும் நீர்த்தடாகத்திலிருந்து அல்லாஹ் நீர் புகட்டுவான். அதனால், சுவர்க்கம் செல்லும்வரை அவருக்கு தாகம் ஏற்படமாட்டாது** என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் இம்மாதத்தின் ஆரம்பப்பகுதி 'றஹ்மத்' எனும் அருட்கொடையாகவும், நடுப்பகுதி 'மஃபிரத்' எனும் மன்னிப்பு வழங்குவதாகவும், இறுதிப்பகுதி 'இத்கும் மினன்னார்' எனும் நரக விடுதலை வழங்குவதாகவும் அமைந்திருக்கின்றது.

அதனால் **யார் இம்மாதத்தில் தனது அடிமையின் வேலைப்பழுவை குறைத்துக் கொள்வாரோ அவருடைய பாவங்களை அல்லாஹ் மன்னித்து நரகத்தைவிட்டும் விடுதலை செய்வான்'** என்ற கருத்துப்படவும் நபி (ஸல்) அவர்கள் நீண்ட ஒரு உபதேசமொன்றைச் செய்துள்ளார்கள். இவ்வுபதேசத்தின் ஊடாகவும் ரமழானின் சிறப்பு மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதனால் இம்மாதத்தின் சிறப்புக்களை அடைந்துகொள்ளவென அதனை ஒழுங்குமுறையாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

நாவின்ன பைஸல்...

# பொருளாதார நெருக்கடி வேளையில் உலமா சபையின் வழிகாட்டல்கள்

**(தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழலில் நடந்து கொள்வதற்கான வழிகாட்டல்களை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித், ஃபத்வாக் குழு செயலாளர் அஷ்ஷைக் எம்.எல்.எம். இல்யாஸ் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ளனர். அவ்வழிகாட்டல்களின் தொகுப்பு)**

எமது நாட்டில் நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதுடன் பொருளாதார நெருக்கடிக்கும் நாடு முகங்கொடுத்துள்ளது. அத்துடன் மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதில் பெரிதும் சிரமப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நெருக்கடி மிக்க சோதனைகள் ஏற்படும்போது அல்லாஹ்வின் அடியார்களாகிய நாம் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும். இச்சோதனைகள் நீங்குவதற்காக தொழுகை, நோன்பு, சதகா, திக்ர், இஸ்திஃபார், துஆ போன்ற நல்லமல்கள் மூலம் அல்லாஹ்வின் பக்கம் நாம் நெருங்க வேண்டும்.

அந்த வகையில் தற்போது பொருளாதார ரீதியில் ஒவ்வொருவரும் எதிர் நோக்கக்கூடிய சவாலை எதிர்கொள்வதற்காக இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்கள் இன்றைய காலகட்டத்தில் பெரிதும் பயன்மிக்கவையாகும். அவ்வழிகாட்டல்கள் நெருக்கடியான நிலையிருந்து மீள்வதற்கும் பொருளாதாரத்தில் வலிமை அடைந்திடுவதற்கும் பெரிதும் உதவியாக அமையக்கூடியவை.

அதனால் இவ்வுலகில் அனைத்து விடயங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன என்பதை ஒவ்வொரு முஃமினும் நம்புவதுடன் அவன் பக்கம் திரும்பவும் வேண்டும்.

**'ஒருபோதும் அல்லாஹ் விதித்ததைத் தவிர (வேறு ஒன்றும்) எங்களை அணுகாது. அவன் தான் எங்களுடைய பாதுகாவலன்' என்று (நபியே!) நீர் கூறும். முஃமின்கள் அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை வைப்பார்களாக! (09:51)**

என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது. அதேநேரம் எமது சகல காரியங்களையும் அல்லாஹ்விடமே பாரம் சாட்ட வேண்டும். இது தொடர்பில் அல் குர்ஆன்,

**'எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிறாரோ, அவருக்கு அவன் போதுமானவன்'. (65:03)**

என்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றது.

இவை இவ்வாறிருக்க, ஒவ்வொருவரும் எல்லா நிலைமைகளிலும் அல்லாஹ்வை அஞ்சி, அவனது கட்டளைகளைப் பின்பற்றி வாழ்வதுடன், அவன் தடுத்த விடயங்களிலிருந்து முற்றாக விலகி நடக்கவும் தவறக்கூடாது.

அது தொடர்பில் அல்லாஹ் தன் அருள் மறையில்,

**'நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால் நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் (பரகத்துகளை) பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம் (7:96)**

என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

அத்தோடு,

**எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கிறாரோ அவருக்கு (ஒவ்வொரு சங்கடத்திலிருந்தும்) வெளியேறும் வழியை அவன் ஆக்குவான். மேலும், அவர் எண்ணிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை அவன் வழங்குவான். (65:2), (65:3)**

என்றும் அவன் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

குறிப்பாக, பாவங்களிலிருந்து மீண்டு தௌபா, இஸ்திஃபார் செய்ய வேண்டும்.

**'நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள். நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்' (71:10). '(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான். (71:11) 'அன்றியும் அவன் உங்களுக்குப் பொருட்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான். இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான். (71:12)**

என்றும் அல்லாஹ் அவனது அருள் மறையில் சுட்டிக்காட்டியுள்ளான்.

மேலும் **இறைவனிடம் பாவமன்னிப்பு வேண்டுதல், சிக்கல் நிறைந்த வாழ்விலிருந்து ஈடேற்றத்தைப் பெற்றுத் தரும் என நபி (ஸல்) அவர்கள் எடுத்துக்கூறியுள்ளார்கள்.**

'நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள். நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன். (அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான். அன்றியும் அவன் உங்களுக்குப் பொருட்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான். இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான். (71:10), (71:11), (71:12)

**'யார் இறைவனிடம் பாவமன்னிப்பு (இஸ்திஃபார்) வேண்டுவதை வழமையாகக் கடைப்பிடித்து வருகிறாரோ, இறைவன் அவருக்கு எல்லா விதமான நெருக்கடிகளிலிருந்தும் நீங்கிக் கொள்வதற்கான வழிகளையும், துயர்களிலிருந்து நிவாரணத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பான். மேலும், அவர் நினையாப் புறத்திலிருந்து அவருக்கு ஆகாரமும் அளிப்பான் என இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

**(ஆதாரம்: அபூ தாவூத், இப்னு மாஜாஹ், அஹ்மத்)**

அதேநேரம் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் அல்லாஹுத ஆலாவிடம் உதவி தேட வேண்டும்.

**'நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்.**

**(அல் குர்ஆன் 2:153)**

வசதிபடைத்தோர்கள், சமூக நலன் விரும்பிகள் நெருக்கடியான இந்நிலையில் சிரமத்திலுள்ளோர், பாதிக்கப்பட்டோர் என தேவையுடையோர்களை இனங்கண்டு உதவி செய்வது அவசியம். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் **'யார் ஒரு சகோதரனின் ஒரு துன்பத்தை நீக்குகிறாரோ அதற்குப் பகரமாக அவரை விட்டு அல்லாஹ் மறுமை நாளில் அவருடைய துன்பங்களில் ஒன்றை நீக்குகிறான்.'**

**(ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)**

என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அதனால் தற்போதைய சூழலில் உணவு, உடை போன்றவற்றிற்கென பணத்தை அளவு மீறி செலவிடுவதைத் தவிர்த்து முடிந்தளவு மிக அத்தியாவசியமான செலவுகளுடன் போதுமாக்கிக் கொள்வது இன்றியமையாததாகும்.

**'உண்ணுங்கள், பருகுங்கள். எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (அல் குர்அன் 7:31)**

என்று அல்லாஹ் வலியுறுத்தியுள்ளான். அத்தோடு வீணான பயணங்களையும் தேவையற்ற பொழுதுபோக்குகளையும் முற்றாக தவிர்த்துக்கொள்ள வேண்டும். வியாபாரிகள் வாங்கும் போதும் விற்கும் போதும் நம்பிக்கையுடனும் வாய்மையுடனும் நடந்து கொள்வது அவசியம். மோசடி செய்தல், பொய்ச் சத்தியம் செய்தல், ஏமாற்றுதல், குறைகளை மறைத்து விற்பனை செய்தல், கலப்படம் செய்தல் போன்ற மோசமான செயற்பாடுகளை விட்டும் கட்டாயமாகத் தவிர்ந்து கொள்ளத் தவறக்கூடாது.

**'நம்பிக்கையும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் நபிமார்களுடனும், உண்மையாளர்களுடனும், ஷஹீதுகளுடனும் இருப்பார்' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஸஈத் ( ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**

**(ஆதாரம்: ஸுனன் அத்திர்மிதீ)**

ஆகவே, இவ் வழிகாட்டல்களைக் கவனத்திற் கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழலில் செயற்படுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டுகோள் விடுத்துள்ளது.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும்.**

**I. கீழே கொடுக்கப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.**

நான் வானத்தில் பறப்பேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்க முடியும். நான் பறக்கும் போது சத்தம் உண்டாவதனால் கீழே உள்ளவர்கள் நான் பறப்பதை அறிந்து கொள்வார்கள். விஷேடமாக சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைவதை நான் அறிவேன். விசேடமான இடங்களில் மட்டுமே நான் தரை இறங்குவேன்.

1. மேலே உள்ள பந்தியில் விபரிக்கப்பட்டது எது?

……………………………………………………………………………...

2. அதன் பயன் என்ன?

……………………………………………………………………………...

3. இறங்குவேன் என்பதனை பன்மையாக்கி எழுதுக.

……………………………………………………………………………...

4. பறப்பேன் என்பதன் இறந்தகால சொல் எது?

……………………………………………………………………………...

5. சத்தம், மகிழ்ச்சி என்பனவற்றுக்கு ஒத்த பதம் தருக.

……………………………………………………………………………...

6. வானத்தில் என்பதன் எதிர்சொல் யாது?

……………………………………………………………………………...

**II. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

7. இருக்கின்றேன் / பசி / நான் / உணவு / தீர / சாப்பிட்டுவிட்டு / நிம்மதியாக

……………………………………………………………………………

**III. பின்வரும் தொடர்மொழிகளுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

8. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் ……………………………………

9. அரண்மனையில் பெண்கள் வசிக்குமிடம் ……………………………………...

**IV.**

10. சேர்த்தெழுதுக.

i) பொன் + குடம் = …………………………………………………

ii) மீன் + இனம் = …………………………………………………

iii) வெள்ளி + ஓடம் = …………………………………………………..

**V. இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

11. நான் ………………….. (அலரி / அலறி) மலர்களைப் பறித்தேன்.

12. பறவைகள் ………………. (இரை / இறை) தேடிப் பறந்தன.

**VI.**

13. இளமைப் பெயர்களை எழுதுக.

i) பாம்பு - ……………………………………………………………

ii) தென்னை- ……………………………………………………………

**VII. கீழே தரப்பட்ட வாக்கியங்களை இறந்தகால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

14. நான் தினமும் பாடங்களை படிப்பேன்.

……………………………………………………………………………

15. தங்கை அழகிய ஓவியத்தை வரைகின்றாள்.

……………………………………………………………………………...

**VIII.**

16. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

i) பொத்த - ……………………………………………………………..

ii) வம்பட்டு - ……………………………………………………………

17. பின்வரும் படங்களின் ஆங்கில பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.





**IX. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.**


18. 19870, 17970, 24670, 19780

……………………………………………………………………………...

19. கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களில் நான்கினால் மீதியின்றி வகுபடும் எண்கள் யாவை?

| 360, 720, 550, 210 |
|---|

…………………………………………………..

20. 

i) இவ்வுருவின் பெயர் என்ன?


…………………………………………………..

ii) இதிலுள்ள விளிம்புகளின் எத்தனை?

…………………………………………………..


21. இவ்வெண் சட்டத்தினால் குறிக்கப்படும் எண்ணுடன் 8ஐ கூட்டி பெறப்படும் எண்ணை எழுதுக.

…………………………………………




22. $1l$ 500ml நீரை சம அளவான 4 குவளைகளில் இடும் போது ஒரு குவளையிலுள்ள நீரின் அளவு யாது?

……………………………………………………………………………...


23. 

இவ்வுருவிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?

…………………………………………………

24. i. இந்த தளவடிவங்கள் மூன்றுக்கும் பொதுவான எண் எது?

………………………………………




ii. செவ்வகத்திற்கும் வட்டத்திற்கும் மட்டும் பொதுவான எண்கள் எவை?


………………………………………..

iii. முக்கோணத்திற்கு மட்டும் உரிய பொதுவான எண்கள் எவை?

……………………………………………………………………….

25. சமபக்க முக்கோணம் ஒன்றிலுள்ள சமச்சீர் எண்ணிக்கைகள் எத்தனை?

……………………………………………………………………………...

26. 

இவ்வொழுங்கில் மாறி மாறி கொடிகள் நடப்பட்டால் 15ஆவது கொடி என்ன நிறம்?

…………………………………………………

27. இக் கடிகாரம் காட்டுவது பிற்பகலாயின் இதனை 24 மணித்தியால நேரமாக தருக.

……………………………………………..



28. 70432 இவ்வெண்ணை சொற்களில் எழுதுக.

……………………………………………………………………………

(13ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

12 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

29. 1 ½ kg ஐ gல் தருக.

……………………………………………………………………………..

**X. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. பின்வருவனவற்றுள் சிறந்த தலைமைத்துவப் பண்பு அல்லாதது எது?
i. தாம் விரும்பியவாறு முடிவெடுத்தல்
ii. பணியை பொறுப்புடன் நிறைவேற்றல்
iii. கூட்டாக வேலை செய்தல்

31. தியான படிமுறையில் மனவுறுதியை இவ்வாறு கூறுவர்
i. தியானம் ii. திடசித்தம் iii. மலர்வு

32. 
இவ்வுபகரணத்தின் பிரதான தொழில் யாது?
i. இரும்பு ஆணி அறைவதற்கு
ii. கம்பி வெட்டுவதற்கு
iii. தகட்டை துளைப்பதற்கு

33. இலங்கை அரச இலச்சினையில் சூரியனையும் சந்திரனையும் அடையாளப்படுத்துவது
i. சௌபாக்கியம் ii. தன்னிறைவு iii. உலக நிலைப்பாடு

34. வயல் நிலத்தில் பயன்படாத ஓர் உபகரணம்
i. நுகத்தடி ii. வேலைக்காரன் கம்பு iii. கரப்பு

35. சமுதாயத்திற்குப் பொருத்தமானவரிடம் இருக்கக் கூடாத குணவியல்பு
i. கடமையுணர்வு ii. சுயநலம் iii. பொதுநலம்

36. ஆணி வேர்த் தாவரமல்லாதது
i. பலா ii. வேம்பு iii. தென்னை

37. இலைகள் அற்ற தாவரமொன்று
i. தாளை ii. நாகதாளி iii. மூங்கில்

38. இரவில் சஞ்சரிக்காத பறவை
i. ஆந்தை ii. வௌவால் iii. மீன்கொத்தி

39. புத்தாண்டு காலத்தில் மருத்து நீரைப் பயன்படுத்துபவர்கள்
i. இந்துக்கள் ii. இஸ்லாமியர்கள் iii. கிறிஸ்தவர்கள்

40. சிக்கன்குனியா நோயைப் பரப்புவது
i. நுளம்பு ii. எலி iii. இலையான்

41. படத்தில் காட்டப்பட்ட உபகரணத்தின் பயனானது
i. காற்றின் வேகத்தை அளத்தல்
ii. காற்றின் திசையை அறிதல்
iii. காற்றின் வேகத்தையும் திசையையும் அறிதல்




42. பின்வரும் மலர்களில் நறுமணம் வீசாத மலர்
i. மல்லிகை ii. முல்லை iii. செவ்வரத்தை

43. மின்னல்தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் கூடுதலாக இருப்பது
i. வாகனத்தில் செல்லும் போது
ii. வீட்டுக்குள் இருக்கும் போது
iii. திறந்த வெளியில் நிற்கும் போது

44. இலங்கையில் வெப்பநிலை குறைவான நகரமானது
i. நுவரெலியா ii. அம்பாந்தோட்டை iii. கொழும்பு

45. பௌத்த சமயத்தின் புனித மரம்
i. வேம்பு ii. பலா iii. வெள்ளரசு

46. மரங்களின் தண்டுகளில் துளையிட்டு கூடு அமைக்கும் பறவையானது
i. தூக்கணாங் குருவி ii. செண்பகம் iii. மரங்கொத்தி

47. இலங்கையில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையம் எது?
i. பதுளை ii. ஹட்டன் iii. நுவரெலியா

48. திசையறி கருவியை அதிகம் பயன்படுத்துபவர்கள்
i. வைத்தியர்கள் ii. விவசாயிகள் iii. மாலுமிகள்

49. இரத்தத்தில் சிவப்பு நிறம் அற்ற பிராணி
i. எலி ii. கரப்பான் iii. காகம்

50. தொல்பொருள் அதிகளவு காணப்படும் மாவட்டம்
i. சிலாபம் ii. அநுராதபுரம் iii. யாழ்ப்பாணம்

51. பூக்களின் உட்பகுதிகளை நிரப்ப பயன்படுத்தப்படும் தையல் வகையானது?
i. மீன் முள்ளுத் தையல் ii. சங்கிலித் தையல்
iii. அடைப்புத் தையல்

52. ஒலி அலைகளை எழுப்பி அதன் மூலம் தனக்கு தேவையான உணவினை பெற்றுக்கொள்ளும் பிராணி
i. காகம் ii. ஆந்தை iii. வௌவால்

53. இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்த ஆண்டு
i. 1938 ii. 1948 iii. 1942

54. உப்புத்தூள் விரைவாகக் கரைவது
i. வெந்நீரில் ii. தண்ணீரில் iii. குளிர்நீரில்

55. நடுவதற்கு உகந்த வித்தின் பண்பானது
i. வித்து நிறம் மாறியிருத்தல்
ii. முதிர்ந்திருத்தல்
iii. தோலுரிந்திருத்தல்

56. உடலில் கல்சியம் பற்றாக்குறையினால் ஏற்படும் பாதிப்பானது
i. பல், எலும்பு வலுவிழத்தல்
ii. சோர்வடைதல்
iii. நோய் எதிர்ப்பு திறன் குறைதல்

57. தாதுசேன மன்னன் கட்டுவித்த குளம் எது?
i. அபயவாவி ii. மின்னேரியா iii. கலாவாவி

58. வாகனத்தில் தடுப்பு பிரயோகிக்கப்படுகின்ற போது ஒளிரும் விளக்கின் நிறமானது
i. சிவப்பு ii. மஞ்சள் iii. வெள்ளை

59. காந்தமொன்றில் விசை அதிகமான பகுதி
i. ஓரங்கள் ii. முனைகள் iii. நடுப்பகுதி

60. "ஒரு நாள் மாலைப்பொழுதில் கடற்கரையில் நான் கண்டு வியந்த காட்சிகள்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் 5 சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

……………………………………………………………………………...

……………………………………………………………………………...

……………………………………………………………………………...

## கடந்த வார (01.04.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 1 | 21 | 1 | 31 | 3 |
| 02 | 1 | 12 | 2 | 22 | 2 | 32 | 1 |
| 03 | 2 | 13 | 2 | 23 | 1 | 33 | 3 |
| 04 | 1 | 14 | 3 | 24 | 2 | 34 | 1 |
| 05 | 1 | 15 | 3 | 25 | 1 | 35 | 1 |
| 06 | 2 | 16 | 1 | 26 | 2 | 36 | 3 |
| 07 | 3 | 17 | 1 | 27 | 1 | 37 | 2 |
| 08 | 2 | 18 | 2 | 28 | 2 | 38 | 1 |
| 09 | 1 | 19 | 1 | 29 | 3 | 39 | 2 |
| 10 | 3 | 20 | 3 | 30 | 1 | 40 | 3 |

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஏப்ரல் 8
வெள்ளிக்கிழமை

# சேதனப்பசளையை ஊக்குவிக்கும் விவசாய செய்கைக்கு சகலரும் தயாராக வேண்டும்

**பரந்தன் குறூப் நிருபர்**

நோயின்றிய சமூகமொன்றை உருவாக்குவதற்கு சேதனப்பசளையைப் பயன்படுத்திய விவசாயச் செய்கைக்கு, சகலரும் முன்வர வேண்டுமென மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீர்பாசனத்திணைக்களத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்செய்கை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக ஏற்பாட்டில், (06) வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இக்கூட்டம் நடந்தது.மாவட்ட அரசாங்க அதிபர் திரு . க.விமலநாதன் இதற்கு தலைமை தாங்கினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மாவட்டச் அரசாங்க அதிபர் :

நோயற்ற வாழ்வுடைய சமூகமொன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம்.

இந்த கொள்கைக்கு அமைய சேதனப்பசளையைப் பயன்படுத்திய விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. இதற்கு சகலரும் முன்வர வேண்டும். சிறுபோக நெற்செய்கைக்காக இவ்வருடம் வவுனிக்குளத்தின் கீழ் 2142 ஏக்கர் இடதுகரையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் விநாயகர்புரம் 700 ஏக்கர், பொன்னகர் 44 ஏக்கர், பூவரசங்குளம் 650 ஏக்கர், கரும்புள்ளியான் 270 ஏக்கர், பாண்டியன்குளம் 478 ஏக்கர் என,விவசாயம் செய்கை பண்ணப்படவுள்ளது.

மேலும், இச்செய்கைகளுக்கான நீர் விநியோகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதனைவிட முக்கிய தீர்மானமாக இனி வருங் காலங்களில் கண்டமுறையிலும், வாய்க்கால்கள் அடிப்படையிலும் சிறுபோகம் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில், துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர்கள், மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கமநல காப்புறுதி சபையின் உதவிப்பணிப்பாளர், மாவட்ட நீர்வாழ் உயிரின வள விரிவாக்கல் உத்தியோகத்தர், மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களம், மாவட்ட வனத்துறை உத்தியோகத்தர், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

# பருத்தித்துறை வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்



**நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பொறுப்புக்கூறி ஆட்சியாளர்கள் விலக வேண்டுமெனக் கோரியே நேற்று வியாழக்கிழமை (07) இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில், வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் எனப் பல தரத்திலானோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, பேரணியாக சென்றவர்கள் வைத்தியசாலை வீதி பிரதான வீதி ஊடாக சிலையடி சந்திக்குச் சென்று, அங்கிருந்து சாவகச்சேரி வீதி வழியாக மந்திகை சந்தியை வந்தடைந்ததும் பேரணி நிறைவடைந்தது.

பேரணியில் பங்கேற்றோர், இலவச மருத்துவம் அடிப்படை உரிமை, வைத்தியசாலையில் மருந்து இல்லை, வீட்டில் உணவில்லை ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு, பதாதைகளையும் தாங்கி நின்றனர்.

# சமூக நல்லிணக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதி அனுசரணையுடன், சமூக நல்லிணக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது.

மாவட்ட செயலக கிராமிய நிர்வாகக் கிளையினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, (05) பாரதி சிறுவர் இல்ல மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் முள்ளியவளை பாரதி சிறுவர் இல்லத்தினை சேர்ந்த கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மற்றும் தோற்றவுள்ள முப்பது மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் வளவாளர்களாக மாவட்ட செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ந. இளங்கீரன் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் தெ.துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆதிவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா ஆரம்பம்

**வவுனியா விஷேட நிருபர்**



வவுனியா, வைரவபுளியங்குளம், ஆதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் முதல் நாளான கொடியேற்றம் புதன் கிழமை (06) ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு, சிவசிறி ஜெ. மயூரக் குருக்கள் தலைமையில் அந்தணச் சிவாச்சாரியர்கள் புடைசூழ விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. பக்தர்களின் அரோகரோ கோசத்திற்கு மத்தியில் மேள தாள வாத்தியங்கள் முழங்க ஆதி விநாயகர் திருக்கோவில் கொடியேற்றம் சிறப்பாக இடம்பெற்றது.

இதனைத் தொர்ந்து மேள, தாள வாத்தியங்கள், தேவார பாராயணம் என்பன ஆலயத்தில் ஒலிக்க விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று ஆதிவிநாயகர் பெருமான், உள் வீதி, வெளி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார். அடியார்களுக்கான பசி தீர்க்கும் அன்னதானமும் இங்கு இடம்பெற்றது.

இதேவேளை, தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும் மகோற்சவப் பெரு விழாவில், எதிர்வரும் 13ம் திகதி சப்பரத் திருவிழாவும், மறுநாள் சித்திரைப் புத்தாண்டு நன்நாளான 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூர் மாநில ஆளுநருடன் சந்திப்பு



**கோப்பாய் குறூப் நிருபர்**

இலங்கை சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு க,சச்சிதானந்தன் நேற்று முன்தினம் (06) மணிப்பூர் மாநில ஆளுநர் இல. கணேசனை சந்தித்தார்.

மாநிலத்தின் தலைநகர் இம்பாலாவில் இச்சந்திப்பு நடைபெற்றது.

# பெண்ணின் தங்க சங்கிலி அபகரிப்பு

**யாழ்.விஷேட நிருபர்**

பெண் ஒருவரிடம், சாத்திரம் சொல்லும் இடத்திற்கு வழி கேட்பது போல் பாசாங்கு செய்த இருவர், அவரிடமிருந்த தங்க சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியில், நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்மணி அவ்விடத்தில் நின்ற போது , மோட்டார் சைக்கிள் ஒன்றில் வாழை இலைகள் சிலவற்றுடன் வந்த இருவர், அப்பகுதியில் சாத்திரம் சொல்பவர் எவரேனும் உண்டோ என கேட்டுள்ளனர். அதற்கு அப்பெண்மணி விலாசம் சொல்ல முற்பட்டார். இதன்போது, மோட்டார் சைக்கிளின் பின் பகுதியில் இருந்தவர் அப்பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்து எடுத்ததும் இருவரும் தப்பியோடியுள்ளனர். இரண்டு பவுண் தங்கத்தை அவர்கள் பறித்துச் சென்றதாக பாதிக்கப்பட்ட பெண், பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# எரிபொருள் விநியோகத்தில் முறையான பொறிமுறை

**யாழ். விஷேட நிருபர்**



நாட்டில் உருவாகியுள்ள எரிபொருள் தட்டுப்பாடுகளை நிவர்த்திக்க முறையான விநியோகத்தை ஏற்பாடு செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல், மாவட்ட செயலர் க. மகேசன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.இதில், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர்,யாழ்பாண பிரதேச செயலாளர், உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

எரிவாயு விநியோகம் தொடர்பான பொறிமுறையை ஏற்படுத்துவது பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

# வடமாகாண ஆளுநரின் அனுமதி கோரி கடிதம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

தாய்சேய் நலன், வறுமை ஒழிப்பு மற்றும் கல்வி ஊக்குவிப்பு உள்ளிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த வடமாகாண ஆளுநரின் அனுமதியை சாவகச்சேரி பிரதேச சபையினர் கோரியுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் 2022 ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில், தாய்சேய் நலன் (போஷாக்கு), வறுமை ஒழிப்பு மற்றும் கல்வி ஊக்குவிப்பு ஆகிய திட்டங்களுக்கு ஒதுக்கிய நிதியை செலவிடுவதற்கான அனுமதியையே,இவர்கள் கோரி உள்ளனர்.

இது தொடர்பாக, ஆளுநருக்கு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதால், எதிர்காலத்தில் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடுகள், வறுமை ஒழிப்பு, வாழ்வாதார திட்டங்களை முன்னெடுத்தல், உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளதையும் சபை உறுப்பினர்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தோன்றியுள்ள சூழ்நிலையை தமிழ் கட்சிகள் சரியாக பயன்படுத்த வேண்டும்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடக்குகிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதுதான், தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்குமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டிதுறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி கோரிக்கை விடுத்த காபந்து அரசாங்கத்தை பிரதான எதிர்க்கட்சிகள் உட்பட பல கட்சிகள் நிராகரித்துள்ளன. இந்தச் சூழலின் பின்னணியில்தான் தமிழ் மக்கள் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களைப் பொறுத்தவரை, ஒரு உறுதியான இறுக்கமான தீர்மானத்துக்கு வரவேண்டியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி,

வடக்குகிழக்கு தமிழர் தாயகத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் கோரிக்கையை தமிழ் தரப்பு முன்வைக்கவேண்டும். இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும்போதுதான் எமக்கான நிரந்தர தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாக பரிசீலிக்க வேண்டும்என்றார்.

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஏற்பாட்டில் 'தெய்வீகத் திருக்கூட்டம் - தொடர் நிகழ்வு'

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் 'தெய்வீகத் திருக்கூட்டம் – தொடர் நிகழ்வு' நல்லை ஆதீன கர்த்தாவும் முதலாவது குருமஹா சந்நிதானமுமாகிய, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் குருபூஜை நன்னாளில் ஆரம்பமாகவுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு, குரு பூஜை நிகழ்வோடு இத்தெய்வீக நிகழ்வின் தொடக்க வைபவம் நடைபெறும். குருபூஜை நிகழ்வுகளை அடுத்து, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம் நோக்கி ஊர்வலமாகச் சென்று, அங்கு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம், வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் திருமுன்னிலையில் அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீன குருதேவர், சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விலே, இலங்கை, சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தெல்லிப்பளை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது.

இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெறவுள்ளன. வெள்ளிக்கிழமை தோறும் மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ள இத்தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்விற்குரிய அனுசரணை மற்றும் ஏற்பாட்டினை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொள்கின்றது. இணை அனுசரணையை அகில இலங்கை இந்துமாமன்றம் வழங்கவுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் (ரொறன்ரோ, கனடா) அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே 14 ஆவது. சொற்பொழிவு மல்லாகம் சாளம்பையான் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில், இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கிரியா பத்மராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலரின் கல்வி மரபே இன்றைய தேவை' எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் சிறப்புச் சொற்பொழிவு வழங்குவார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

**(அ.கனகசூரியர்)**

# கிழக்கின் குரல்



# நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த சேவைகளை வழங்க வேண்டும்

### நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**





உலகின் பல நாடுகளில் இலவசக் கல்வி வழங்கப்படுவதில்லை. எமது நாட்டில் வழங்கப்படுகின்ற இலவசக் கல்வியின் மூலம் கிடைக்கின்ற நியமனங்களை ஒரு வேலையாக மட்டும் கருதக்கூடாது. அதன் மூலம் நாட்டுக்கும், மக்களுக்கும் சிறந்த சேவைகளை வழங்கக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

தாதியர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக உயிரியல் மருத்துவ பொறியியலாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (06) ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் வரிப்பணத்தில் நியமிக்கப்பட்டுள்ள நீங்கள், தன்னிடம் வருகின்ற நோயாளிகளை தாய், தந்தை, சகோதரன், சகோதரி மற்றும் உறவினர்கள் போன்று நல்லமுறையில் நடந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக கடமைகளை பாரமெடுக்கின்றபோது தங்களால் கூறப்படுகின்ற கடமை உறுதிமொழிகளுக்கேற்ப தங்களின் கடமைகளிலும் அதேபோல் இருக்க வேண்டும் என்றார்.

இதன்போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்க, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், மாகாண கல்வி செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ ஜி.திஸாநாயக்க, மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் எம்.கோபாலரட்ணம், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கணக்காளரின் சேவையை பாராட்டி கௌரவிப்பு



**மண்டூர் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் கணக்காளராக கடமையாற்றி, யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் என்.பாலநந்தனின் சேவைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, சுதேச மருத்துவ திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி இ.ஸ்ரீதர் தலைமையிலான இந்நிகழ்வில், கணக்காளர் என்.பாலநந்தன் ஞாபகச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபிலினாலும் ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

திருகோணமலை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளர் வைத்தியர் எஸ்.சிவச்செல்வன், திருக்கோவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் ஐ.எல்.அப்துல் ஹை, சுதேச மருத்துவ திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி என்.நவேந்திர ராஜா மற்றும் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்துகொண்டு கணக்காளரின் சேவைகளைப் பாராட்டிக் கௌரவித்து உரையாற்றினர்.

# வரிப்பத்தான்சேனை லீடர் ஜூனியர் பாடசாலையின் அகமகிழ் விழா

**வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்**



வரிப்பத்தான்சேனை லீடர் ஜூனியர் பாடசாலையின் தசாப்தம் தடம்பதி நிகழ்வை முன்னிட்டு நடைபெற்ற அகமகிழ் விழா கடந்த வியாழக்கிழமை பாடசாலை வளாகத்தில் அதிபர் யூ.கே.நிஹால் தலைமையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் கலந்து கொண்டார்.

இறக்காமம் கோட்டத்திலுள்ள இப்பாடசாலையானது கடந்த 2012.01.01 ம் திகதி அல் அமீன் மகாவித்தியாலய பாடசாலையிலிருந்து பிரிந்து ஆரம்ப பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அதிபராக யூ.கே.நிஹால் நியமிக்கப்பட்டார். சிறந்த கற்றல் பௌதீக சூழல் காணப்படும் இப்பாடசாலையானது பல தடைகளையும், சவால்களையும் தாண்டி பத்தாண்டு நிறைவுடன் சிறந்த அடைவு மட்டத்தை பெற்றுள்ளது.

கடந்த 2021ம் வருடம் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஆறு மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுபேறுகளை பெற்று லீடர் ஜூனியர் பாடசாலை சாதனை படைத்துள்ளது.

கல்விக்கு மாத்திரமன்றி ஆரோக்கியமான மாணவ சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் மாணவர் பற்சிகிச்சை நிலையமும் அதற்கென பிரத்தியேக பல் வைத்தியமும் இப்பாடசாலை கட்டடத்தில் அமையப் பெற்றிருப்பது அதன் தசாப்த நிறைவின் வெற்றியாகும். இவ்வெற்றிக்கு அரும் பணியாற்றிய அதிபர் யூ.கே.நிஹால் வலயக் கல்விப் பணிப்பாளரால் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன், புலமைப் பரிசில் சித்தியெய்திய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அபிவிருத்திக்கு ஒத்துழைப்பும்,காத்திரமான ஆலோசனைகளையும் வழங்கி வரும் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் பாடசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# ஆக்கத்திறன் போட்டியில் ஓவிய பிரிவில் இரண்டாமிடம்

**கே.எம்.எம்.சபீக்**



அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டித்தொடர், 2021 புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சு அனுசரணையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 23 நடைபெற்றது.

இவ் விருது வழங்கும் விழாவில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஓவியர் அம்ஜாத் அகமது, ஓவியப் பிரிவில் இரண்டாமிடத்தை அகில இலங்கை ரீதியில் பெற்றுக் கொண்டதோடு, அதற்கான விருதினையும் பணப் பரிசினையும் பெற்றுக் கொண்டார்.

இவர் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புலம் தொழில்நுட்பவியல் துறையில் பட்டம் பெற்று, முதல் நிலை மாணவராக சித்தி அடைந்தவர் ஆவார்.

இவர் நில அளவையாளர் முகம்மது தஸ்லீம், சித்தி மறுசா தம்பதியரின் புதல்வர் ஆவார். இவர் தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தரம் ஐந்து புலமை பரீட்சையில் சித்தி



அக்கரைப்பற்று அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி மாணவி அபா,தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.இப்றாலெப்பை றிஸ்வான் மற்றும் செயின்சகாப் நிலுபா ஆகியோரின் புதல்வியான இவர், இப்புள்ளிகளின் பிரகாரம் பாடசாலையில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

தேசிய வீட்டுத் தோட்டப்புரட்சி அங்குரார்ப்பண நிகழ்வு அட்டாளைச்சேனை சம்புநகர் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் விவசாய அமைச்சரின் அபிவிருத்தி உத்தியோகத்தரின் வழி நடத்தலின் கீழ், அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் சாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயன் தரும் மரக்கன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்மினா வித்தியாலயம், சம்பு நகர் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகிய இடங்களில் இதன் போது பலன் தரும் தென்னை மரக்கன்றுகள் அன்றைய தினம் கலந்து கொண்ட அதிதிகளினால் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி எப்.நஜிஹா முஷாபீர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல். ஹுசைனுடின், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் ஏ.எல். ஜௌபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சேதன பசளை, பீடைநாசினிகள் தொடர்பான செயல்முறை பயிற்சி

**மணல்சேனை நிருபர்**



இயற்கை முறை விவசாயத்திற்கான சேதன பசளை உற்பத்தி, இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான செயல்முறை பயிற்சி, மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் புதன்கிழமை (06) நடைபெற்றது .

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை பசளையினை நடைமுறைப்படுத்தும் வகையில் விவசாய விரிவாக்கல் பிரிவினால் சேதன விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ், சேதன பசளை உற்பத்தி, இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான பயிற்சி செயலமர்வுகள் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் போதனாசிரியர் தெய்வமனோகரி ரமேசன் தலைமையில் சேதன பசளை உற்பத்தி மற்றும் இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான செய்முறை பயிற்சி முன்னெடுக்கப்பட்டது. சத்துருக்கொண்டான் கும்பிளாமடு பகுதியில் உள்ள விவசாயின் தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சேதன பசளை உற்பத்தி மற்றும் இயற்கை பீடைநாசினிகள் தயாரிப்பு மற்றும் பாவனை தொடர்பான நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வி.பேரின்பராஜா, வலயம் மத்தி உதவி விவசாய பணிப்பாளர் என். கணேசமூர்த்தி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறிதரன், பாடவிதான உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவ பயிலுனர்கள், சத்துருக்கொண்டான் கும்பிளாமடு விவசாய போதனாசிரியர் பிரிவில் தெரிவு செய்யப்பட பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொதுமக்கள் பாவனைக்காக வைத்தியசாலை கையளிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை மீண்டும் பொது மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 தொற்றாளர்கள் அதிகரித்து காணப்பட்ட காலப்பகுதியில், கொவிட்19 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை கொவிட் 19 தொற்று சிகிச்சை நிலையமாக கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் திகதி மாற்றப்பட்டு கொவிட்19 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் குறைவடைந்துள்ளதால் இவ் வைத்தியசாலையை மக்களின் பாவனைக்காக வைத்தியசாலை கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலையில் வழமைபோன்று வெளிநோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி, கிளினிக் சிகிச்சைகள் வழமை போன்று நடைபெறுமென தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை ஆயுர்வேத தள வைத்தியசாலை தற்காலிகமாக நிருவாக கட்டடத்தில் இயங்கி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டம்

**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட விவசாயம் செய்யும் பயனாளிகளுக்கு நீர் பாய்ச்சும் குழாய்கள், நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றுடன் வாழ்வாதார உதவிகளும் கிண்ணியா பிரதேச செயலகத்தில் புதன் கிழமை (6) வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். முஹம்மது கனியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ரெக்டொ நிறுவனத்தின் தலைவர் எம். அஸார் கலந்து கொண்டார். இவ்வுதவித் திட்டத்திற்கு ரெக்டோ நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை (06) அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில், அரசின் பிழையான நிதி முகாமைத்துவத்தால் சுகாதாரத்துறைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பாதிப்புக்களைக் கண்டித்து இடம்பெற்ற கண்டனப் பேரணியின் போது. (படம்; அக்கரைப்பற்று வடக்கு நிருபர்)

# நகர்வலம்



## ஒரு வருடத்திற்கு எம்.பி சம்பளம் வேண்டாம்

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)



இந்த நெருக்கடி நிலையில் ஒரு வருடத்திற்கு தனது எம்.பி சம்பளம் வேண்டாம் என்றும் பாராளுமன்றத்தினால் வழங்கும் உணவு தேவையில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்ப இருப்பதாக தெரிவித்த அவர், பிரச்சினைக்கு தீர்வு காண பல மாற்றுவழிகள் உள்ளன. மக்கள் கஷ்டப்படுகையில் எமக்கு இரண்டரை இலட்சத்தினால் பயனில்லை.

எமது பதவிகளை பாராது மக்களுடன் இணைந்து கஷ்டப்பட முடியுமாக இருந்தால் கிராமத்திற்கு செல்ல முடியும். அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. ஆளும் தரப்பில் ஜனாதிபதி பொறுப்பை ஏற்க தகுதியானவர் யாரும் இல்லையாயின் ஹர்சவை நியமியுங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின்

## ஜனநாயக ரீதியான கோரிக்கைக்கு அரசாங்கம் செவிமடுக்க வேண்டும்

### அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

நாட்டு மக்களுக்கு தங்களது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதால் இன, மத பேதமின்றி நாட்டு மக்கள் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி ஜனநாயக ரீதியாக போராடி வருகின்றனர். மக்கள் தமது கருத்துக்களையும் தேவைகளையும் ஜனநாயக ரீதியாக முன்வைப்பது அவர்களது உரிமையாகும்.

எனினும், ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் போது உயிர் மற்றும் உடைமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும், வன்முறையில் ஈடுபடாமலும், பொது மக்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தாமலும், இது தொடர்பான நாட்டு சட்டங்களை பேணியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று நாம் அன்பாகக் கேட்டுக் கொள்வதாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பதில் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸீம் அறிக்கையொன்றை வெ ளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, எரிபொருள் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மின் துண்டிப்பு போன்ற பல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்ளும் இத்தருணத்தில் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குமாறும், ஜனநாயக ரீதியில் போராடிவரும் மக்களின் உணர்வுகளை மதித்து அவர்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்நிலை அவசரமாக நீங்கி, நம் தாய்நாடு சுபீட்சம் பெற புனித ரமழான் மாதத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தில் கைதான 12 பேரும் முன்பிணையில் விடுதலை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

தங்காலை கால்டன் இல்லத்திற்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 12 சந்தேக நபர்களும் தங்காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது சகலரும் முன்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிர்ப்பினை தெரிவித்து தங்காலை நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்காலை நகரிலுள்ள கால்டன் இல்லத்திற்கு செல்ல முற்பட்டபோது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. இதன் போது கலவரம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த 12 பேரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை நீதவான் முன்பிணையில் விடுதலை செய்தனர்.

மறைந்த ஷாதுலிய்யா தரீக்கா

## ஆன்மிக தலைவருக்கு ஜனாஸா தொழுகை நடாத்த கோரிக்கை

### உம்மு ஸாவிய்யா வேண்டுகோள்

பேருவளை விசேட நிருபர்

மறைந்த இஸ்லாமிய அறிஞரும் அகில உலக ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மிகத் தலைவருமான சங்கைக்குரிய நஜ்முல் உலமா அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அன்னவர்களுக்காக ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் ஊர்களில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் ஸாவியாக்களில் காயிபான ஜனாஸா தொழுகை நடாத்தி துஆப் பிராத்தனை புரியுமாறு ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கை தலைமை பீடமான கொழும்பு உம்மு ஸாவியாவில் நிர்வாக சபை தலைவர் தேசபந்து அல்ஹாஜ் மக்கி ஹாஷிம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு உம்மு ஸாவியாவில் நேற்று 7 ஆம் திகதி தராவிஹ் தொழுகையின் பின்னர் அன்னாருக்காக காயிபான ஜனாஸா தொழுகையும் துஆப் பிராத்தனையும் நடாத்தப்பட்டதாக மேற்படி ஸாவிய்யா நிர்வாக சபை சமய விவகார குழுத் தலைவரும் பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கை தூதுவருமான அல் ஹாஜ் பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

ஆன்மீகத் தலைவரின் திடீர் மறைவு குறித்து தேசபந்து அல் ஹாஜ் மக்கி ஹாஷிம் மற்றும் பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கைத்தூதுவர் பௌஸான் அன்வர் ஆகியோர் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

பேருவளை சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் கீழ் உள்ள மஸ்ஜிதுகள் மற்றும் ஷாதுலிய்யா ஸாவியாக்களில் இன்று 8 ஆம் திகதி ஜும்ஆ தொழுகையின் பின் காயிபான ஜனாஸா தொழுகையும் துஆப் பிராத்தனையும் நடைபெறும்.

## பொரளை அஹதிய்யாவின் இப்தார் நிகழ்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

கொழும்பு பொரளை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிய கல்வி நிலையத்தின் 34 வது வருட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வுகள் இம்மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு தெமட்டகொடை வை.எம். எம்.ஏ பேரவையின் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பொரளை அஹதிய்யா ஸ்தாபக தலைவர் ஷிப்லி ஹாசிம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## உலக சாதுலிய்யா தரீக்கா ஆன்மிக தலைவர் மறைவு



### மர்ஜான் பளீல் எம்.பி அனுதாபம்



உலக சாதுலிய்யா தரீக்காவின் ஆன்மிகத் தலைவர் நஜ்முல் உலமா சங்கைக்குரிய அஷ்ஷெய்கு அஜ்வாத் அல்பாஸி அல்மக்கி அஷ் ஷாதுலியின் திடீர் மறைவுச் செய்தி கேள்விப்பட்டு தான் மிகவும் கவலையடைந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சாதுலிய்யா தரீக்காவை நூறுவீதம் பின்பற்றுகின்ற சாதுலிய்யா கோட்டையில் வாழ்கின்ற நான், தரீக்காவின் செயற்பாடுகளை என்றும் மதிக்கின்றேன். சங்கைக்குரிய சேகு நாயகம் தரீக்காவின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி அதன் பணிகளை உலகளாவிய ரீதியில் பல நாடுகளுக்கும் முன்னெடுத்துச் செல்வதில் ஆற்றிய பணிகளை நன்றியுணர்வோடு இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்கிறேன். அதேபோல், புனித மக்கமா நகரை தலைமையகமாக கொண்டு சாதுலிய்யா தரீக்காவின் பணிகள் பல நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது நாட்டிலும் சாதுலிய்யா தரீக்காவின் கொள்கையை பின்பற்றி வருபவர்கள் பல ஊர்களிலும் விசேடமாக பேருவளை, பாணந்துறை, கொழும்பு மற்றும் கிழக்கு, தென் மாகாணங்களிலும் பரவலாக வாழ்ந்து வருகின்றமை விசேட அம்சமாகும்.

அன்னார் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரை சந்திக்கும் பாக்கியம் தனக்கும் கிடைத்ததாக தெரிவித்துள்ள மர்ஜான் பளீல், அன்னாரின் தஃவா பணிகளை வல்ல நாயன் கபூல் செய்ய வேண்டும் என பிரார்த்திப்பதாகவும் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் சாதுலிய்யா தரீக்காவின் இஹ்வான்கள், முஹிப்பீன்கள் அனைவருக்கும் எனது ஆழமான அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் மர்ஜான் பளீல் எம்.பி தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

### இம்தியாஸ் எம்.பி அனுதாபம்



அகில உலக ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய நஜ்முல் உலமா அஷ் ஷெய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) அவர்களின் திடீர் மறைவு ஷாதுலிய்யா தரீக்காவிற்கு ஈடு செய்ய முடியாத மாபெரும் பேரிழப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, ஷாதுலிய்யா தரீக்காவின் இஹ்வான் என்ற வகையில் இறையடி சேர்ந்த ஷேஹ் நாயகம் என்னோடு மிகவும் நெருக்கமாகவும் அன்பாகவும் பழகினார். 2004 ஆம் ஆண்டு அன்னார் இலங்கைக்கு விஜயம் செய்து பல ஊர்களுக்குச் சென்று இஹ்வான்களை சந்தித்தார். அந்த வகையில் அராபியர் முதல் முதலில் காலடி எடுத்துவைத்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளைக்கும் விஜயம் மேற்கொண்டார். நான் மக்கள் தொடர்பாடல் அமைச்சுப் பதவியை அப்போது வகித்தேன். ஷாதுலிய்யா தரீக்காவின் ஞாபகர்த்தமாக ஷாதுலிய்யா கோட்டை என வர்ணிக்கப்படும் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் ஞாபகார்த்த முத்திரையொன்று அன்னாரின் கரங்களினால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தலைசிறந்த ஆளுமை கொண்ட அன்னார் சவுதி அரேபியாவில் புகழ் பெற்றவராக திகழ்ந்தார். சிறந்த அறிவும் ஆன்மிக பரிபக்குவமும் சிறந்த தலைமைத்துவ பண்புகளும் நிறைந்த அன்னாரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பெரும் கவலையடைந்தேன்.

புனித இஸ்லாத்திற்காகவும், ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காகவும் அன்னார் ஆற்றிய தியாக மிகு பணிகள் என்றும் மறக்கமுடியாதது என தெரிவித்துள்ளார்.

## மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் வாண்மை விருத்தி செயலமர்வு







பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி வேலைத்திட்ட முக்கிய நிகழ்வுகள் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. களுத்துறை எலதுவ தமிழ் வித்தியாலய அதிபர் கே. நிக்கல் எலோசியஸ் தலைமையிலான ஆசிரியர் குழாத்தினர் மேற்படி பாடசாலைக்கு களப்பயணமொன்றை மேற்கொண்டனர். இவர்களை அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையிலான ஆசிரியர் குழாத்தினர் வரவேற்றனர்.

இருபாடசாலைகளினதும் அதிபர்கள் உள்ளடங்கலான ஆசிரியர் குழாத்தினர் இணைந்து இவ்விசேட செயற்றிட்டத்தினை முன்னெடுத்தனர். இத்திட்டத்தில் உற்பத்தித்திறன் செயற்பாடுகள், சுகாதார மேம்பாடு, மாணவர்களின் விசேட நடைமுறைகளுக்கான பிரவேசம், பொலித்தீன் பாவனையற்ற பாடசாலையாக மாற்றுவதன் மூலம் டெங்கு நுளம்பற்ற சுற்றுச் சூழலை உருவாக்குதல் மற்றும் பாடசாலை பண்புத்தர விருத்தி தொடர்பான ஆசிரியர் வாண்மைத்துவ செயற்பாடுகளை இவர்கள் இக்கள பயணத்தின்போது முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மலரவுள்ள புத்தாண்டையொட்டி

## தென் மாகாண மக்கள் பொருட்கள் கொள்வனவு செய்வதில் ஆர்வம்

(வெலிகம தினகரன் நிருபர்)

இன்னும் ஓரிரு தினங்களில் மலரவுள்ள தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி தென் மாகாண மக்கள் அத்தியாவசிய பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எளிமையான முறையிலாவது புத்தாண்டை கொண்டாட வேண்டும் என ஆர்வத்துடன் மக்கள் புதுவருடத்திற்கு தயாராகி வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்கள் கொரோனா தொற்று நாட்டில் பரவி இருந்ததால் சிறப்பாக கொண்டாட முடியாத நிலையிலிருந்தது. எனினும் இம்முறை பொருளாதார நெருக்கடி, பொருட்கள் தட்டுப்பாடு, பொருட்களின் விலை உயர்வு என பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டிருந்தும் புத்தாண்டை சிறப்பாக வரவேற்க மக்கள் காத்திருக்கின்றனர்.

தற்போது நாடு எதிர்கொள்கின்ற இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்சிபெற்று சுபிட்சமான நாடாக மாற வேண்டுமென கருத்திற்கொண்டு இப்புத்தாண்டை மதவழிபாட்டுகளில் ஈடுபடுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெலிகம நகரசபையும் இம்முறை புத்தாண்டையொட்டி நடைபாதை வியாபாரத்துக்காக வெலிகம கடலோர வீதியை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலாகல மலைப்பகுதியில் புதையல் தோண்டிய ஆறுபேர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

புலாகல மலைப்பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஆறு பேரை மடாட்டுகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய மடாட்டுகம புலாகல பகுதியில் நடாத்திய சுற்றிவளைப்பின்போதே புதையல் தோண்டிக் கொண்டிருந்த சந்தேக நபர்கள் ஆறு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் மடாட்டுகம பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 42 வயதுக்கும் 54 வயதுக்கும் இடைப்பட்ட அநுராதபுரம், தம்புள்ள மற்றும் மரதன்கடவல, கெகிராவ கித்துள்ஹிட்டியாவ பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



கொழும்பு 12 வாழைத்தோட்டம் அல் ஹிக்மா தேசிய கல்லூரி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவ மாணவிகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் எம்.எம்.மஹ்ஹூர் தலைமையில் நடைபெற்றது. கொழும்பு வலய உதவிப் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு) ஜி.ஏ.எஸ்.கே. பெரேரா பிரதம அதிதியாகவும், கொழும்பு வலய கல்வி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மும்தாஸ்பேகம், கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் எம்.டீ.எம். இக்பால் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். முக்கியஸ்தர்கள் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைத்தனர்.

சுகாதார வழி முறையை பேணி

## ஹம்பாந்தோட்டையில் ரமழான் கால நிகழ்வுகள்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

புனித ரமழானினை முன்னிட்டு ஹம்பாந்தோட்டை நகரை சூழவுள்ள பள்ளிவாசல்களில் சுகாதார வழிமுறைகளைப் பேணி ரமழான் மாத விசேட நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

விசேட இரவு நேர தராவீஹ் தொழுகையில் பெருமளவான பெண்களும் கலந்துகொள்வதோடு பெண்களுக்காக பள்ளிவாசல்களில் தனியாக விசேட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை சீராகவேண்டும் என்று கோரி விசேட துஆப் பிரார்தனைகளும் இடம் பெற்று வருகின்றன. இவற்றில் பெரும்பாலோனோர் கலந்துசிறப்பித்து வருகின்றனர்.

இவற்றோடு மார்க்க உரைகள், விசேட துஆ பிரார்த்தனைகள் மற்றும் கஞ்சி வழங்குதல் என்பனவும் நடைபெற்று வருகின்றன. கொவிட் 19 கொரோனா தொற்று காரணமாக கடந்த வருடங்களில் பள்ளிவாசல்களில் கூட்டாக தொழுகைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஸீனத் சமா 159 புள்ளிகள்



அண்மையில் வெளியிடப்பட்ட தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏறாவூர் அல் ஜுப்ரியா வித்தியாலய மாணவி பி. ஸீனத் சமா 159 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் பைத்துல்லாஹ் (ஆசிரியர்) மற்றும் பாத்திமா ஹஸ்னா (ஆசிரியை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - மேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

1. கொழும்பு-10, மாளிகாவத்தை செயலகக் கட்டிடம், மாகாண சுகாதார சேவைகள் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார் என்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022-04-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

| விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூபா) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| WP/PD/PRO/02/6/2022 | மேல் மாகாணத்திற்கான பல் மருத்துவ உபகரணங்களின் பெறுகை - 2022 | 1200.00 | 22-04-2022 மு.ப. 10.00 - மு.ப. 10.30 |
| WP/PD/PRO/02/7/2022 | மேல் மாகாணத்திற்கான கதிரியக்க உபகரணங்களின் பெறுகை - 2022 | 3500.00 | 22-04-2022 மு.ப. 10.30 - மு.ப. 11.00 |
| WP/PD/PRO/02/8/2022 | மேல் மாகாணத்திற்கான வாட்டு மற்றும் அதிதீவிர சிகிச்சை உபகரணங்களின் பெறுகை - 2022 | 2800.00 | 22-04-2022 மு.ப. 11.00 - மு.ப. 11.30 |

2. கொழும்பு-10, த.பெ. இல. 876, மாளிகாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து 2022-04-08ஆம் திகதி முதல் 2022-04-28ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளும் படிவங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. 2022-04-29ஆம் திகதி விலைமனுக்கோரல்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் கொழும்பு-10, த.பெ. இல. 876, மாளிகாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் (மே.மா) உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.
4. உபகரணங்களின் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் / ஏக விற்பனைப் பிரதிநிதிகளுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் இதற்கான ஆதார ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும். தொடர்பிலக்கம்: 011-2434852 / 011-2437154
6. மேலதிக தகவல்களுக்கு எமது இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும். http://www.healthdept.wp.gov.lk
7. எல்லா பெறுகைச் செயற்பாடுகளையும் அல்லது ஒரு பகுதி பெறுகை செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**மருத்துவர் தம்மிக ஜயலத்,**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மே.மா),**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு 10.**

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# விலைமனுக்கோரல்

## மாதாந்த வாடகை அடிப்படையில் மூன்று (03) கார் வண்டிகளைப் பெற்றுக் கொள்ளல்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பெறுகைக் குழுவின் தலைவரினால் மாதாந்த அடிப்படையில் மூன்று கார் வண்டிகளை (03) பெற்றுக் கொள்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பதிக்கப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் :**

01. **வாகன வகைகள்** :- என்ஜின் கொள்ளளவு 1800 CC மற்றும் 2000 CC இடைப்பட்ட 03 கார் வண்டிகள்.
02. **வாகன தரம் : -** வாகனம் சிறந்த மட்டத்தில் அல்லது வாடகைக்குப் பெற்றுக் கொள்ளும் போது வாகனத்தின் ஓட்ட அளவு 100,000 கிலோமீற்றரை விடக் குறைவான வாகனமாக இருக்க வேண்டும்..
03. **ஒப்பந்த காலம்** :- இருபத்து நான்கு மாதங்கள் (24)
04. தகைமை கொண்ட விநியோகஸ்தர்கள், மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்கும் சேவைகளை முன்னெடுக்கும் நிறுவனம் அல்லது நபராக இருக்க வேண்டும்.
05. **வழங்க வேண்டிய சேவைகள் :-** திடீர் விபத்து பழுதுபார்ப்பு செலவினம் விநியோகஸ்தரினால் மேற்கொள்ள வேண்டும். புனரமைப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளுக்காக 24 மணித்தியாலங்களை விட கூடுதலான காலம் கடப்பதாயின் அல்லது நிறுவனத்தின் தேவைகளுக்கு அமைய அதனை விடக் குறைந்த காலம் கடப்ப-தாயின் வாடகையாளரினால் அவ்வாகனத்திற்கு சமமான தரத்தின் வாகனத்தை வழங்க வேண்டும்:

மேலதிக விபரங்களை 2022/04/29 வரை வாராந்த நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 இடைப்பட்ட நேரத்தில் இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை ஆணைக்குழுவின் கணக்காளர் (பெறுகை) தொலைபேசி இலக்கம் 011 – 2588004 மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆங்கில மொழி மூலம் தயாரிக்கப்பட்ட உரிய விலைமனு 2022/04/11 ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 2022/04/26 ஆம் திகதி பி.ப. 2.00 வரை மீள செலுத்தப்படாத ரூபா 3000.00 வைப்பு பணத்தினை செலுத்தி இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கணக்காளருக்கு எழுத்து மூல கோரிக்கை விடுப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

மீள செலுத்தப்படாத வைப்பு நிதியை கொழும்பு-07, மலலசேகர மாவத்தை, இலக்கம் 36 இல் அமைந்துள்ள இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் புதிய கட்டடத்தின் 03 ஆவது மாடியில் உள்ள காசாளருக்கு பணத்தை செலுத்த வேண்டும்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலை மனுவினை தலைவர், பெறுகைக் குழு, இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு இலக்கம் 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு-07 முகவரிக்கு 2022/04/29 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப அல்லது இவ் ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலை மனுப்பெட்டியில் இட முடியும். விலை மனுக்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வாடகை அடிப்படையில் 03 கார் வண்டிகளை பெற்றுக் கொள்ளல்'' எனக் குறிப்பிட வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலை மனுக்களை பொறுப்பேற்காது நிராகரிக்கப்படும்.

விலை மனுக்களை பொறுப்பேற்கும் செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் விலை மனுக்கள் திறக்கப்படுவதுடன் அச் சந்தர்ப்பத்தில் தங்களுக்கு அல்லது தங்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும்.


**தலைவர் - பெறுகை குழு**
**இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு**
**இலக்கம் 36, மலலசேகர மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி- 0112582864, 0112596365 பக்ஸ் - 0112058346**


BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT




Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE


2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு முகவரி | கூட்டிணைக் கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| பரடைஸ் ரோட் த எஸ்கேப் (பீவீடீ) எல்டீடி | PV 00209080 | 138, காலி வீதி, கொழும்பு -03 | 2019 பெப்ரவரி 21 |
| களம்பு ஷிப்பிங் சொலூஷன்ஸ் (பீவீடீ) எல்டீடி | PV 00211490 | # 7-1/4A, ஓர்ச்சர்ட் கொம்பிளெகஸ் காலி வீதி, கொழும்பு-06 | 2019 மே 06 |
| லெசீல் டிரேடிங் என்ட் கன்ட்ரக்டிங் (பீவீடீ) எல்டீடி | PV 00216346 | இலக்கம் 54, ∴பெஸ்ட் டெம்ப் ளர்ஸ் மாவத்தை,'லேடி லவினியா' கல்கிஸ்சை | 2019 ஒக்டோபர் 09 |
| கே ஆர்எஸ் ஒட்டோ (பீவீடீ) எல்டீடி | PV 00216847 | 161/1/N, தஹம் மாவத்தை, அதுருகிரிய, கொட்டாவ | 2019 ஒக்டோபர் 23 |
| ஷிப்பிங் ஏஜென்சி சொலூஷன்ஸ் (பீவீடீ) எல்டீடி | PV 00218992 | 7- 2/7, காலி வீதி, கொழும்பு-06 | 2020 ஜனவரி 01 |
| ஹெர்பலின்ஸ் லங்கா (பீவீடீ) எல்டீடி | PV 00236963 | இல. 54, ∴பெஸ்ட் டெம்ப்ளர்ஸ் மாவத்தை, லேடி லவினியா, கல்கிஸ்சை | 2021 மார்ச் 22 |
| சேனக்க ரெடி மிக்ஸ் (பீவீடீ) எல்டீடி | PV 00245151 | 212/12, நெலும் பிளேஸ், களபலுவாவ, ராஜகிரிய | 2021 செப்டம்பர் 14 |
| டெக்னோ டிசைன் எச்கே லிமிட்டட் | FC 00222414 | இல. 616, நீர்கொழும்பு வீதி, மாபோல - வத்தளை | 2020 ஜூன் 02 |

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 8(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனிகளின் பெயர்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

| பதிவு இலக்கம் | முன்னைய பெயர் | தற்போதைய பெயர் | மாற்றி அமைக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| PV 6372 | சின்க்வாட் கனிஸ்ட் ரக்ஷன் (பிரைவட்) லிமிட்டட் | சின்க்வாட் டிசைன் அன்ட் பில்ட் (பிரைவட்) லிமிட்டட் | 2021 டிசம்பர் 28 |
| PV 00216346 | லெசீல் டிரேடிங் என்ட் கன்ட்ரக்ட்டிங் (பீவீடீ) எல்டீடி | அவ்வான்தே கே. சீ. ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி | 2022 பெப்ரவரி 15 |

### பெயர் மாற்றம்

மாவட்டம் - முல்லைத்தீவு பிரதேச செயலகப் பிரிவு - புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவு, கோம்பாவில் MUL 42, முகவரி - 2ம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவில் வசிக்கும் நாகமணி விஸ்வலிங்கம் ஆகிய நான் இன்றிலிருந்து நாகமணி விஜயலிங்கம் என எனது பெயரை மாற்றிக் கொள்கின்றேன்.


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

TRC

## பொது அறிவித்தல்

### ஹட்சிசன் டெலிகொமியுனிகேசன் லங்கா (பிரைவட்) லிமிடடின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதி வெளியிட்ட 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க **டிஜிடல் கையடக்க தொலைபேசிச் சேவை** வழங்குவதற்கு தொலைத்தொடர்புத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு **ஹட்சிசன் டெலிகொமியுனிகேசன் லங்கா (பிரைவட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க மேலொமொரு பத்து வருட காலப் பகுதிக்காக **ஹட்சிசன் டெலிகொமியுனிகேசன் லங்கா (பிரைவட்) லிமிடடிற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப்** புதுப்பிப்பதற்கு, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பது சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஹட்சிசன் டெலிகொமியுனிகேசன் லங்கா (பிரைவட்) லிமிடடிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2022.05.07** ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணைய தளமான **www.trc.gov.lk**. இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

பணிப்பாளர் நாயகம்
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
இல. 276, எல்விடிகல மாவத்தை
கொழும்பு 08.
தொலைபேசி : 011-2689345 பெக்ஸ் : 011-2689341
மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

TRC

## பொது அறிவித்தல்

### டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (பிரைவட்) லிமிடடிற்கு வழங்கப்பட்ட தொலைத்தொடர்பு முறைமையின் நிபந்தனைகளை திருத்தம் செய்தல்.

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கு வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

அனுமதிப்பத்திரத்தின் 2 அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சேவைகளை வழங்கும் நோக்கங்களுக்காக தொலைத்தொடர்பு முறைமைகளை செயற்படுத்துவதற்கு டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (பிரைவட்) லிமிடடிற்கு சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை அமைச்சர் வழங்கியுள்ளார்.

சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க ஆணைக்குழு டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (பிரைவட்) லிமிடடிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்கு திருத்தங்களை செய்வதற்கு கருதுகின்றது.

பிரதிநிதித்துவங்கள் / பொதுமக்களின் எதிர்ப்புக்கள் / கைத்தொழில்களின் கருதப்பாடுகளின் படி டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (பிரைவட்) லிமிடடின் அனுமதிப்பத்திரத்தை திருத்தம் செய்வதற்கு தொழில்நுட்ப அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதிக்கு இத்தால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்பதை சட்டத்தின் 18 (2) பிரிவின் கீழ் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (பிரைவட்) லிமிடடின் முன்மொழியப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை திருத்தம் செய்வதற்கான பிரதிநிதித்துவங்கள் அல்லது எதிர்ப்புக்களை 2022.05.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும் என இத்தால் பொது மக்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திர திருத்தங்களின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணைய தளமான **www.trc.gov.lk.** இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இல. 276, எல்விடிகல மாவத்தை
கொழும்பு 08.
தொலைபேசி : 011 2689345 பெக்ஸ் : 011 2689341
மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு** 122

WP BHW-7702 Yamaha Ray ZR, 2019, Motor Cy cle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 025090

WP Q S -0 174 Bajaj - 2008, WP AAX-9724 Bajaj, 2015, Thre e wh e eler கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 025088

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு** 119

62-4490 Isuzu Bus, 1987, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 025091

**ஐகென் லங்கா (பிறைவட்) லிமிட்டட்**
**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**
**320(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

கம்பனியின் பங்குதாரர்களினால் 2022 பெப்ருவரி 02 ஆம் திகதியன்று பின்வரும் விஷேட தீர்மானமானது நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் தற்போதுள்ள 5(டி) என்ற இலக்கமுடைய உட்கூறானது நீக்கப்பட்டு பின்வரும் உட்கூறுகள் 5(டி) என இலக்கத்துடன் பதிலீடு செய்யப்படும்.

முதலீடு, அபிவிருத்தி, ஆதன முகாமைத்துவம், உள்ளக வடிவமைப்பு தீர்வுகள் மற்றும் ரியல் எஸ்டேட்டுக்கள் தரகு முகவர் ஆகியவற்றிற்காக 5(டி) ஆனது ஆலோசனை சேவைகளை செயற்படுத்தும்.

**கம்பனியின் பெயர்: ஐகென் லங்கா (பிறைவட்) லிமிட்டட்**
**கம்பனியின் இலக்கம்: PV 15525**
**பதிவு அலுவலகம்: இல. 19-சி, அஸ்டோரியா அபாட்மெண்ட் டவர் 4, டீல் பிரதேசம், கொழும்பு-03.**
**பணிப்பாளர்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

The Housewives' companion
Classifieds on
Daily News

# கொழும்பு மாநகர சபை

**கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.09.17ஆம் திகதிய 2245/30ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது.**

**(1952ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தரப்படுத்தப்பட்ட துணை விதிச் சட்டம்) 1989.01.20ஆம் திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி 541/17ஆம் இலக்க துணை விதிச் சட்டத்தின்**
**Vஆம் பாகத்தின் பிரகாரமான கேள்வி அறிவித்தல்**

## விலைக்கோரல் / கேள்விகளுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர் / கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ ML/38/2022 | பொது தனியார் பங்குடைமை (PPP) திட்டம் மீதான விளம்பரம் மற்றும் கொழும்பு நகரங்களிலுள்ள 250 பில் போர்டுகளை (Bill Boards) பராமரித்தல் | 5,400.00 | வரிகள் இன்றி விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | தனி வியாபாரம், பங்குடைமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |
| 2 | ME/ME/ ML/39/2022 | பொது தனியார் பங்குடைமை (PPP) திட்டம் மீதான விளம்பரம் மற்றும் கொழும்பு நகரங்களிலுள்ள பஸ் ஷெல்டர்களைப் (Bus Shelters) பராமரித்தல் | 5,400.00 | வரிகள் இன்றி விலைக்கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | தனி வியாபாரம், பங்குடைமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |
| 3 | ME/CP/ BN/248/2021 | பொரளையிலுள்ள எரிபொருள் நிரம்பும் நிலையத்திற்கு தரைக்குக் கீழான டீசல் தாங்கியை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல் | 5,400.00 | 162,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | இதனையொத்த வேலைகளில் குறிப்பிடத்தக்க அனுபவத்தை வெற்றிகரமான விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும். | பொறியியல் பணிப்பாளர் (செயற்றிட்டங்கள்) தொலைபேசி: 011-2692403 |
| 4 | ME/ME/ DR/17/2022 | மாதம்பிட்டிய பம்பி நிலையத்திலுள்ள 05 பம்பித் தொகுதிகளின் சேர்விஸ் மற்றும் திருத்தவேலைகள் | 5,400.00 | 940,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | கனரக உருக்குக் கட்டமைப்பு/ குழாய்வேலைகள் மற்றும் வடிகாலமைப்பு / மின்சார நிறுவல்களுக்கான EM 1 தரம் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425** எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04,**
இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-04-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2) விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் **2022-04-28ஆம்** திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

3) நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான **விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2022.11.26ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.10.26ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.** ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4) உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் **கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி** அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

5) **2022-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும்** என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

6) கேள்விகள்/ விலைமனுக்களின் விபரங்களுடன் கேள்விகள்/ விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# கேள்வி கோரல்
## மினுவங்கொட நகர சபை

கீழே அட்டவணை 01இல் குறிப்பிடப்படும் மினுவங்கொட நகர சபைக்கு சொந்தமான கடை அறைகளை மூன்று வருடத்திற்கு ஒரு முறை ஒப்பந்த காலத்தைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2022.04.21 பிற்பகல் 2.00 வரை என்னால் ஏற்கப்படும்.

கேள்விகள் திறத்தல் 2022.04.21 கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் இடம்பெறும். கீழே அட்டவணை மூலம் தரப்பட்டுள்ள கட்டணங்களை காசாக செலுத்தி ஒவ்வொரு கேள்விக்கும் குறித்த கேள்விப்படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளை 2022.04.21 முற்பகல் 10.00 வரை நகர சபையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 02 பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுவதுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு குறித்த கேள்வி இலக்கம் மற்றும் கோரப்படும் கேள்வியின் பெயரை உறையின் இடது பக்கம் குறிப்பிட்டு தலைவர், மினுவங்கொட நகர சபையின் பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நகர சபையில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க அனுமதியுண்டு.

குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் மற்றும் பூர்த்தியற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களை தொ. பே. இல. 011-2295275 இற்கு சபையின் செயலாளரை அழைத்து அறிந்து கொள்ளலாம்.

எந்த கேள்விப் பத்திரத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மினுவங்கொட நகர சபைக்கு உரியது.

**அட்டவணை இல. 01**

மூன்று வருடத்திற்கு ஒருமுறை உடன்படிக்கையை புதுப்பிக்கும் அடிப்படையில் மினுவங்கொட நகர சபைக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களை குத்தகைக்கு வழங்குதல்.

| தொடர் இல. | குத்தகை உரிமையை ஒப்படைத்தல்/ வர்த்தக உரிமையை ஒப்படைத்தல் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூ. | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் ரூ. | வருடாந்த குறைந்தபட்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பொதுச் சந்தை வளாகத்தின் சில்லறை விற்பனை நிலையம் | 5000.00 | 1000.00 | 42000.00 |

✷ குறைந்த பட்ச மாதாந்த வாடகை ரூ. 3500.00 ஆவதுடன் மாதாந்த வாடகை போன்று 12 மடங்கான ரூ. 42,000.00 தொகையை வருடாந்த குறைந்தபட்ச தொகையாகத் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும் ஒருமுறை மாதாந்த கடை வாடகை அரச மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தப்படும்.

✷✷ மாதாந்த வாடகை போன்று 36 மடங்கு தொகையை கேள்விகளை வழங்கும்போது சபையில் வைப்புச் செய்ய வேண்டும் என்பதை தயவு கூர்ந்து கவனிக்கவும்.

2022.04.05
**மினுவங்கொட நகர சபையில்**

**எச். கே. என். நீல் ஜயசேக்கர,**
**தலைவர்,**
**மினுவங்கொட நகர சபை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கேள்வி அறிவித்தல்
**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)- 2022**
**உள்ளூராட்சி திணைக்களம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை**


1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது,
5. குறித்த பெறுகை 03/2020, 03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிகளின் பொதுநிதி சுற்று நிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-2050037, தொலைநகல் 021-2050036, E-Mail: pallaipsa@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 08.04.2022 ஆம் திகதியிலிருந்து 28.04.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 08.04.2022.ஆம் திகதியிலிருந்து 28.04.2022 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 28.04.2022 திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் எழுபத்தேழு நாட்கள்- 13.07.2022 வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs.) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/ PSDG/w/1/2022 | Construction of Thannadchi road | 8.33 Mn | 60 நாட்கள் | C7 and C6 (வீதி) | 90,000.00 | 11.08.2022 |

11. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 20.04.2022 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை**

**08.04.2022**




AVAILABLE AT

BE BETTER INFORMED!
தினமின Dinamina
Daily News
தினகரன் Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE




# நுவரெலியா வசந்த கால கொண்டாட்டங்கள் திட்டமிட்டப்படி நடைபெறும்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா கிரகரி வாவி கரையில் நடைபெற்ற நுவரெலியா ஏப்ரல் வசந்த கால ஆரம்ப வைபவத்தில் பலாத்காரமாக நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தி இடையூறு செய்த குழுவினருக்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன தெரிவித்தார்.

நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன தலைமையில் மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஏப்ரல் மாதத்திற்கான மாதாந்த பொதுக் கூட்டத்திலேயே கடுமையாக எச்சரித்தார்.

இதுதொடர்பில் நுவரெலியா மாநகர சபை பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால் நுவரெலியா மாநகரசபை உறுப்பினர்கள் மாநகரசபை ஊழியர்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவோம் என அவர் தெரிவித்தார்.

தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலந்துக்கொண்ட பிரதி முதல்வர் யதர்சனா புத்திரசிகாமணி, தற்கால ஆரம்ப நிகழ்வை குழப்பிய குழுவினருக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்கள்.

அங்கு மாநகர முதல்வர் தொடர்ந்து உரையாற்றுகையில், நுவரெலியா நகரம் ஒரு சுற்றுலா நகரம்.

இங்கு அதிகமானோர் சுற்றுலாத் துறையை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர். அதிலும் வருடம் தோறும் ஏப்ரல் மாதம் அதிக வருமானம் தேடும் காலமாகும்.

ஏப்ரல் மாதத்தில் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தரும் பொழுது இங்குள்ள சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் உரிமையாளர்கள், வியாபாரிகள், வாடகை வாகன உரிமையாளர்கள் மற்றும் நகர வர்த்தகர்கள் ஒரு வருமானம் தேடும் மாதமாகும்.

இவ்வாறு நுவரெலியாவுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்காக பொழுபோக்கிற்காக இங்கு பல கலை, கலாச்சார விளையாட்டு போட்டிகள், குதிரைப்பந்தய போட்டி, காரோட்டப்போட்டி, மலர் கண்காட்சி போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நுவரெலியா மாநகரசபையினர் செய்துள்ளனர். இதனை குழப்பியது நுவரெலியா சுற்றுலாத்துறையினரின் வயிற்றில் அடிக்கும் மிலேச்சதனமான செயலாகும்.

அதேவேளை ஆரம்ப நிகழ்வு ரூபவாஹினி தொலைகாட்சியில் நேரடியாக ஒளிபரப்பும் செய்யப்பட்டது. இந்த நேரடி ஒளிபரப்பின் போது பாடசாலைகள் சிறுவர்களின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு தொலைகாட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டதை பெற்றோர்கள் பார்ப்பதற்காக ஆவலுடன் காத்திருந்த வேளை குழப்பக்கார குழுவினரால் தடையேற்படுத்தப்பட்டது.

அத்துடன் திடீரென குழப்பகார குழுவினர் வைபவம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்து கூச்சலிட்டவுடன் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை கூட்டிக்கொண்டு ஓடினார்கள் அதனை பார்ப்பதற்கே கஷ்டமாகவிருந்தது.

எனவே இதுவரையிலும் இவ்வா



றான சம்பவம் நடைபெறவில்லை. ஆகையால் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது நுவரெலியா பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் பாதையில் இறங்கி போராட வேண்டிவரும். யார் என்ன குழப்பமும் எதிர்ப்பு தெரிவித்தாலும் ஏற்கனவே திட்டமிட்டப்படி வசந்தகால நிகழ்வுகள் நடைபெறும் என தெரிவித்தார்.



பாடசாலை ஆசிரியைகள் ஒன்றிணைந்து சுமார் ஒரு மணித்தியாலம் நுவரெலியா பிரதான தபால் நிலையத்துக்கருகில் அத்தியாவாசிய பொருட்களின் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

படம் தலவாக்கலை குறூப் நிருபர்

## மண்சரிவு அவதான காணிகளில் இரத்தினக்கல் அகழ்வு முயற்சி

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிரல்கம கிராமத்தில் மண்சரிவு அவதானத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சில வியாபாரிகள் இரத்தினக்கல் அகழ்வு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவர்கள் இப்பிரதேசத்தில் இரத்தினக்கல் அதிகார சபையின் அனுமதிப்பத்திரங்களை பெறவும் சிலர் முயற்சித்து வருவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்நிலைமையால் இப்பகுதியில் பாரிய மண்சரிவு இடம்பெறலாம் எனவும் இம்முயற்சிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டாம் எனவும் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

எனினும் இந்த எதிர்ப்புகளை அலட்சியம் செய்து வெளிப் பிரதேச இரத்தினக்கல் வியாபாரிகள் இரத்தினக்கல் அகழ்வுக்கு அனுமதி கோரி அதிகாரசபையிடம் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் இதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் முறையிடுகின்றனர்.

இப்பிரதேசத்தில் மண்சரிவுகள் இடம்பெறலாம் என புவிச்சரிதவியல் திணைக்களம், கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன எச்சரித்துள்ளன. பொதுமக்கள் மற்றும் சுற்றாடலின் பாதுகாப்பினை கருத்திற் கொள்ளாது இம்முயற்சிகளை மேற்கொண்டு வருவதனால் பொதுமக்கள் இவ்வாறு எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றனர்.

## இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பரவும் அவதானம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தின் பல பிரதான நகரங்கள் உட்பட அண்மித்த பிரதேசங்களில் டெங்கு நோய் அவதானம் அதிகரித்து வருவதாக அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

பிரதேச அரச தனியார் வைத்தியசாலைகள், சுகாதார மேம்பாட்டு நிலையங்கள் உட்பட பல பொது இடங்களிலும் சுகாதார நிலையங்களின் தகவல் குறிப்புகளிலும் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தின் இரத்தினபுரி, பலாங்கொடை, எம்பிலிப்பிட்டிய, குருவிட்ட, எலபாத்த சுகாதார பிரிவுகளின் நகர மற்றும் சுற்றுப் பிரதேசங்களில் இந்நிலைமை அதிகமாக காணப்படுகிறது. பொது மக்கள் இவ்விடயத்தில் சுகாதாரப் பொறுப்புக்களை நிறைவேற்றி கடைப்பிடித்தால் மட்டுமே இதனை கட்டுப்படுத்த முடியும். கடந்த ஐந்து மாதங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் 568 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் இரத்தினபுரி எலபாத்த சுகாதாரப் பிரிவில் மாத்திரம் 66 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று (07.04.2022) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" வங்குரோத்தடைந்த சில அரசியல்வாதிகள், தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்காக மீண்டும் இனவாதத்தையும், மதவாதத்தையும் கையில் எடுத்துள்ளனர். இனம், மதம், அரசியல் பேதங்களை மறந்துதான் மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். எனினும், மக்களின் போராட்டத்துக்கு முத்திரை குத்தப்படுகின்றது.

எனவே, தேசிய சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காத வகையிலேயே போராட்டங்கள் இடம்பெற வேண்டும். மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள், சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள். பயிரிடப்படாத நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும். சிறு தேயிலை தோட்டங்கள் அதிகரிக்கும் பட்சத்தில்,



ஏற்றுமதி அதிகரிக்கும், ஏற்றுமதி அவ்வாறு அதிகரித்தால் வருமானம் கூடும். அந்த வழிமுறையை நாம் கையாள்வோம். அதேபோல லயன் யுகத்துக்கும் முடிவு கட்டப்படும். மலையக மக்களின் எழுச்சிக்காக தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்து காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை நாம் முன்வைத்துள்ளோம். தனி நபரிடம் அதிகாரம் இருக்ககூடாது. சர்வாதிகார ஆட்சியும் வேண்டாம். எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இல்லாதொழிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

## பொருளாதாரத்தை தோளில் சுமந்து மீட்டெடுத்தவர்கள் தோட்டத்தொழிலாளர்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் எம்.பி

**ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்து மீட்டெடுத்தவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று (07.04.2022) நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பழனி திகாம்பரம் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இந்த அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கி போராடிவருகின்றனர். மலையகத்திலும் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்து மீட்டெடுத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களும், இந்த அராஜக ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காக வீதியில் இறங்கிவிட்டனர்.

நாட்டில் எல்லா பகுதிகளிலும் அரச எதிர்ப்பு அலையே வீசுகின்றது. கோட்டாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு பெரும்பாடு பட்டவர்களும், அணிதிரண்டு வாக்களித்தவர்களும், 'கோட்டா வீட்டுக்கு செல்ல வேண்டும்' என்பதை திட்டவட்டமாக இடித்துரைத்துவருகின்றனர். ஆனால் மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் ஜனாதிபதியும், ஆட்சியாளர்களும் அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். மக்கள் கொந்தளிப்புக்கு அஞ்சி மலையகத்தில் உள்ள, கொள்கையற்ற அரசியல்வாதிகள்கூட இன்று அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றுள்ளனர் என்றார்.

## சமய பாட ஆசிரியர்கள் பற்றாக்குறை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் சிறுபான்மையின மாணவர்களுக்கு சமய பாடங்களை போதிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தமிழ்ப்பாடசாலைகளில் கல்வி கற்கும் முஸ்லிம், கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர்கள் இந்நிலைமையால் பெரிதும் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர் .

இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாற்று இனங்களை சேர்ந்த மாணவர்களில் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற போதிலும் மாணவர்கள் சமய பாடங்களை கற்கும் உரிமை தொடர்பில் பாடசாலை நிர்வாகங்கள் அக்கறை செலுத்த வேண்டுமென பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை எழுதும் போது மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.



பசறை நகரில் நேற்று வீதிமறியல் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

படம் லுணுகல நிருபர்

## பேராசிரியருக்கு நினைவஞ்சலி

பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் க.திருலோகசங்கர் தலைமையில் அமரர் பேராசிரியர் சோ. சந்திரசேகரமுக்கான மலர் அஞ்சலியும், நினைவாஞ்சலியும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் மா. ரூபவதனன், கல்லூரி அதிபர் க. திருலோகசங்கர், பதுளை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். கார்த்தீபன், கல்லூரி பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளாத அரசாங்கத்திற்கு எதிராக தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாடு செய்த கண்டன பேரணி தலவாக்கலை நகரில் இடம்பெற்றது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கண்டன பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(ஹற்றன் விசேட
மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)






நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும்
சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கள் மூடலின் நீடிப்பு**

**காலியில் பொலிஸ் மற்றும் அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றிற்கான இடமாற்றத்திற்கான உத்தேசிக்கப்பட்ட பொறியியல் வடிவமைப்பு மற்றும் கட்டிட நிர்மாணம்**

மேலேயுள்ள செயற்றிட்டத்திற்கான விலைமனுக்களை மூடும் திகதியானது 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, 2022 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'சுஹுருபாய', 18 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் தொழில்நுட்பத்திற்கான மேலதிக செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இரு பிரதிகளில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள மேலதிக செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பத்தரமுல்ல, 'சுஹுருபாய', 17 ஆம் மாடி, அமைச்சு கேட்போர் கூடத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மூடிய பின்னர், திறக்கப்படும்.

உரித்தான உட்கூறுகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன இதற்கமைவாக திருத்தப்படல் வேண்டும்.

மேலதிக தகவலை பின்வரும் வழிகளின் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர் (கட்டிடக்கலை உசாத்துணை)
செயற்றிட்ட முகாமைத்துவ வடிவமைப்பு மற்றும்
உசாத்துணை பிரிவு
நகர அபிவிருத்தி அதிகாரசபை, 7 ஆம் மாடி,
''செத்சிரிபாய'', I ஆம் கட்டம், பத்தரமுல்ல.
(தொலைபேசி: 011-2862722. தொலைநகல்: 011-2876298)

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல்
பெறுகைக் குழு
நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும்
சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு,
18 ஆம் மாடி, 'சுஹுருபாய', பத்தரமுல்ல.

# நெதர்லாந்து அணியை ஒருநாள் தொடரில் வைட் வோஷ் செய்தது நியூஸிலாந்து அணி



நெதர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில், நியூஸிலாந்து அணி 115 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை நியூஸிலாந்து அணி முழுமையாகக் கைப்பற்றி, நெதர்லாந்து அணியை வைட் வோஷ் செய்தது.

ஹமில்டனில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 333 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வில் யங் 120 ஓட்டங்களையும் மார்டின் கப்டில் 106 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நெதர்லாந்து அணியின் பந்துவீச்சில், ப்ரெட் க்ளாசென், வென் பீக், க்ளேடொன் ப்ளோயிட் மற்றும் ஆர்யன் டுத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 334 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நெதர்லாந்து அணி, 42.3 ஓவர்கள் நிறைவில் 218 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், நியூஸிலாந்து அணி 115 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்டீபன் மைபர்க் 64 ஓட்டங்களையும் லோகன் வன் பீக் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சில், மெட் ஹென்ரி 4 விக்கெட்டுகளையும் டொக் பிரஸ்வெல் 2 விக்கெட்டுகளையும் கெய்ல் ஜேமீஸன், மைக்கேல் பிரேஸ்வெல், கொலின் டி கிராண்ட்ஹோம் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் நியூஸிலாந்தின் வில் யங் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியுடன் நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் மூத்த வீரரான ரோஸ் டெய்லர் ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ............
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ............
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ............
வாக்களித்தவர் பெயர் : ............
முகவரி : ............
மொபைல் இல. : ............

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 09-04-2022 இல. 02




# பட் கம்மின்ஸ் அதிரடி: மும்பை அணியை பந்தாடியது கொல்கத்தா அணி



ஐ.பி.எல். ரி20 தொடரின் 14ஆவது லீக் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

புனே மைதானத்தில் (புதன்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 161 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சூர்யகுமார் யாதவ் 52 ஓட்டங்களையும் திலக் வர்மா ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், பட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 162 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 16 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பட் கம்மின்ஸ் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்து வீச்சில், டைமல் மில்ஸ் மற்றும் முருகன் அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டேனியல் சேம்ஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 15 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த பட் கம்மின்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

# பொத்துவில் றபா விளையாட்டுக் கழகம் வெற்றி

(பாலமுனை விசேட நிருபர்)



பொத்துவில் யங் கொமைனி விளையாட்டுக் கழகத்தின் 43வது வருட ஞாபகார்த்தக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் றபா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக்கொண்டது.

யங்கொமைனி விளையாட்டுக் கழகத்தின் 43வது வருட நிறைவையொட்டி, அக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் (02) பசறிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அணிக்கு 11பேர் 8ஓவர்கள் கொண்ட இக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பொத்துவில் சதாம் மற்றும் பொத்துவில் றபா ஆகிய விளையாட்டுக் கழக அணிகள் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சதாம் விளையாட்டுக் கழக அணியினர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தனர். இதற்கிணங்க, முதலில் துடுப்பெடுத்தாடிய றபா விளையாட்டுக் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8ஓவர்கள் முடிவில் 5விக்கெட்டுக்களை இழந்து 65ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

66ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சதாம் விளையாட்டுக் கழக அணியினர் 7.2ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியினை தழுவிக்கொண்டனர். இதற்கிணங்க, இறுதிப் போட்டியில் 23ஓட்டங்களினால் றபா விளையாட்டுக் கழக அணியினர் வெற்றிபெற்றனர்.

றபா விளையாட்டுக் கழக வீரர் அர்ஷாத் இறுதிப்போட்டி மற்றும் இச்சுற்றுப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் யங் கொமைனி விளையாட்டுக் கழகத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட கழகத்தின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு இறுதிப்போட்டியில் முதலாமிடம் மற்றும் இரண்டாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட அணிகளுக்கும், கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

# மண்முனைப்பற்றின் 2022 ஆம் ஆண்டிற்கான பிரதேச மட்ட விளையாட்டு விழா கோலாகலமாக ஆரம்பம்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



மண்முனைப்பற்று பிரதேச செயலகமும், கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களமும் இணைந்து நடாத்திய மண்முனைப்பற்றின் 2022 ஆம் ஆண்டிற்கான பிரதேச மட்ட விளையாட்டு விழா கோலாகலமாக இடம் பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட விளையாட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜனி முகுந்தன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்பரன் மண்முனைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி த.பிரபாசங்கர் மற்றும் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.ஏ.ஆதாம்லெவ்வை ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இவ் பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டியில்

மரதன் ஓட்டம்,கயிறு இழுத்தல் உட்பட சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றது.

குறித்த விளையாட்டு விழாவில் புள்ளிகளின் அடிப்படையில் சுடர் விளையாட்டு கழகம் 14 தங்கப்பதக்கங்களையும், 9 வெள்ளிப்பதக்கங்களையும், 8 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாம் இடத்தினையும், விஸ்வகலா விளையாட்டுக்கழகம் 12 தங்கப்பதக்கங்களையும் 7 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று இரண்டாம் இடத்தினையும், 6 தங்கப்பதக்கங்களையும் 10 வெள்ளிப்பதக்கங்களையும் 12 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று டெல்பின் விளையாட்டு கழகம் மூன்றாம் இடத்தினையும் சுவீகரித்திருந்தது.

இதன்போது அலுவலக உத்தியோகத்தர்களுக்கான போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன், மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆண் மற்றும் பெண் வீரர்களுக்கான சிறப்பு விருதுகளும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி.வி.லோகினி, பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் திவாகரன், விளையாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேச செயலக பதவி நிலை உத்யோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச விளையாட்டு கழகங்களின் வீரர்கள் அடங்கலாக கிராம மக்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# புத்தளத்தில் 47வது தேசிய விளையாட்டு விழா

(புத்தளம் தினகரன் நிருபர்)

47 வது தேசிய விளையாட்டு விழாவையொட்டி புத்தளம் பிரதேச செயலக மட்டத்திலான போட்டிகள் இம்மாதம் 23 ஆம் திகதி புத்தளம் சாந்த அன்றூஸ் தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர், 5000 மீற்றர்,10000 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், ஈட்டி எறிதல், குண்டெறிதல், தட்டெறிதல் மற்றும் முப்பாய்ச்சல் போன்ற விளையாட்டுகள் இடம்பெற உள்ளன.

போட்டிகளில் பங்கேற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்படும். போட்டியாளர்கள் குறித்த தினத்தில் காலை 9 மணிக்கு முன்னதாக வருகை தருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சுமித் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏனைய தொடர்புகளுக்கு 0702288988 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## நீதிச்சேவை ஆணைக்குழு

### வயோதிபர் உரிமைகளை பாதுகாப்பதற்கான பராமரிப்புச் சபையின் அங்கத்தவர்களை நியமித்தல் – 2022

2011ஆம் ஆண்டில் 05ஆம் இலக்க முதியோரின் உரிமைகளை பாதுகாக்கும் (திருத்த) சட்டத்தின் 8ஆம் பிரிவினால் திருத்தப்பட்டுள்ள 2000ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க முதியோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 24ஆம் பிரிவிற்கு அமைவாக, 03 வருட காலப்பகுதிக்கு பராமரிப்புச் சபையொன்றை ஸ்தாபிப்பதற்காக கீழ்வரும் துறைகளில் அறிவும் அனுபவமும் கொண்ட தேர்ச்சியுடைய, நம்பிக்கையுள்ள, நன்னடத்தை மற்றும் சிறந்த தேக ஆரோக்கியமுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

1. சட்டம்
2. முகாமைத்துவம்
3. மனித உரிமைகள்
4. சமூக சேவைகள்
5. மருத்துவம் அல்லது ஆலோசனை செய்தல்

சகல விண்ணப்பப்படிவங்களும் 2022.05.06ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு-12 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பராமரிப்புச் சபைக்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்களுக்கு கீழ்வருமாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

1. தலைவர்
   சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்கிய மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 35,000/-
2. அங்கத்தவர்களுக்கு
   அதிகபட்சமாக 05 நாட்களுக்கு உட்பட்டு நாளொன்றுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவு - ரூ. 5,000/-

**எச்.எஸ். சோமரத்ன**
**செயலாளர்**
**நீதிச்சேவை ஆணைக்குழு**

**2022 மார்ச் மாதம் 31ஆம் திகதி**
**கொழும்பு 12,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தில்.**

---

**1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பொது ஏலத்தில் பெறுமதியான சொத்துக்கள் ஏலம் விடப்படுகின்றன ஆம் பிரிவின் கீழ் விற்பனையானது 1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது.**

## மக்கள் வங்கி

### மொனராகலை கிளை பொது ஏலத்தில் பெறுமதியான சொத்துக்கள் ஏலம் விடப்படுகின்றன

ஊவா மாகாணத்தில், மொனராகலை பிரதேச செயலாளர் பிரிவில், மொனராகலை பிரதேச செயலகம், புத்தல வெடிரத்த கோரளை, மொனராகலை கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மொனராகலை (முப்பானை) கிராமத்தில் உள்ள பக்கினிகோவயா என்ற காணிக்கு பொறுப்பான மொனராகலை மாவட்ட நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பான பாவனையாளர் 172 லாட் எண். 2383 மறு அங்கீகாரம் பெற்ற சர்வேயர் 20.09.2008 அன்று திரு. ஜி.பி.இளங்கசிங்கவினால் தயாரிக்கப்பட்ட Mo/7668 திட்டத்தின் படி, இது 2383 இல் காட்டப்பட்டுள்ள

நிலத்தின் அளவு:
A: 00 R: 00 P: 21.4 ஏக்கர் அல்லது 0.054 ஹெக்டேர் நிலம் மற்றும் அதற்கான அணுகல் பாதை உட்பட அதன் அனைத்து உள்ளடக்கங்களும் மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்

**ஏப்ரல் 29, 2022 வெள்ளிக்கிழமை காலை 10:30 மணிக்கு சொத்து இருக்கும் இடத்தில் நான் பொது ஏலத்தில் விற்கிறேன்**
**இந்த காணி மொனராகலையில் உள்ள காணி பதிவு அலுவலகத்தில் LDO/A18/13 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**முடிவு பற்றி அறிவிப்பு:**
10.08.2018 அரசாங்க வர்த்தமானி, 09.08.2018 அன்று தினமின, தினமணி மற்றும் தினகரன் நாளிதழ் விளம்பரங்களைப் பார்க்கவும்.

**சொத்துக்கான அணுகல்:**
மொனராகல-மாகந்தமுள்ள பராக்கிரம வீதியில் 200 மீட்டர் தூரத்துக்கு சென்றதும் அந்த பாதையின் கடைசியில் மகாநாம கல்லூரி எல்லையில் இந்த ஆதனம் அமைந்துள்ளது

**பணம் செலுத்தும் முறை:**
விலை முடிவு செய்யப்பட்டவுடன், வெற்றிகரமான வாங்குபவர் ஏலத்தின் முடிவில் பின்வரும் முழுத் தொகையையும் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்முதல் விலையில் 10% (பத்து சதவீதம்)
2. மாகாண அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய 1% (ஒரு சதவீதம்) விற்பனை வரி
3. ஏலதாரர் கமிஷன் 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அந்த கமிஷன் தொடர்பான அனைத்து வரிகளும்
4. 1500 ரூபா எழுது வினைஞர் மற்றும் வெளியிடட் கட்டணம் விற்பனை செலவு ஏதேனும் இருந்தால், மற்றும் பிற கொடுப்பனவுகள் அடங்கும்
6. விற்பனை சான்றிதழின் முத்திரை வரி

கொள்முதல் விலையில் மீதியான 90% தொகையை ஏலம் விடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி, மொனராகலைக்கு செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, 30 நாட்களுக்குள் மேற்கண்ட தொகை செலுத்தப்படா விட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட விற்பனை விலையில் 10% ஐ பறிமுதல் செய்து மீண்டும் ஏலம் விட வங்கிக்கு உரிமை உள்ளது.

**உரிமைப் பத்திரங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை முகாமையாளர், மக்கள் வங்கி, மொனராகலை கிளையில் பெறலாம்.**
**தொலைபேசி எண் 055-2277105/055-2255347**

**பிரேமசிறி வடுகே சமாதான நீதவான் (அனைத்து தீவுகளும்)**
**ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற பதிவாளர்**
**அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர், நீதிமன்ற ஆணையாளர்**
**"உத்பலா" சண்டகிரிவத்த, கம்பஹா**
**தொலைபேசி:- 0777003939, 0716172804, 0711659616**

---

## பெறுகை அறிவித்தல்

### வலயக் கல்விப் பணிமனை களுத்துறை

01. மேல் மாகாணத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின் வரும் உபகரணங்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. கணனி, கணனி துணைப்பாகங்கள் மற்றும் இயந்திராதிகள்

| | |
|---|---|
| ✷ Desktop Computers (Normal) | 16 |
| ✷ Desktop Computers (For Payroll System) | 08 |
| ✷ Laser Printers | 06 |
| ✷ Laser Printers (Colour) | 02 |
| ✷ Multimedia Projectors | 04 |
| ✷ Photocopy Machines | 10 |
| ✷ Duplo Machines | 03 |

02. மீளளிக்கப்படாத படிவக்கட்டணமான 1000.00 ரூபாவைச் செலுத்தி 2022.04.11 முதல் 2022.05.04 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் 2022.05.04 அன்று பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு 2022.05.04 அன்று பி.ப. 2.30 இற்கு விலைமனுத் திறக்கப்படும்.

03. இவ்வழங்கல் தொடர்பான அனைத்து விபரங்களையும் அலுவலக நேரங்களில் 034 2222007 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் நிறுவனத்தின் நிருவாகப் பிரிவை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

04. இவ்விலைமனுக் கோரலை இரத்துச் செய்யும் அல்லது வேறு ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்ளும் அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு உரித்தாகும்.

**ஏ. யூ. விக்ரம ஆரச்சி,**
**பெறுகைக்குழுத் தலைவர்,**
**வலயக்கல்விப் பணிமனை,**
**களுத்துறை.**

---

## மக்கள் வங்கி

### குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையின் 255ஆம் பிரிவுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்ற பிஸ்கால் மூலம் ஏலவிற்பனை

### பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில்

இல.75, சேர். சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு 02, என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள மக்கள் வங்கி

**வழக்கிலக்கம்** : **585/DR/18**
**தன்மை** : பணம் **வழக்காளி**
**எழுத்தாணை இலக்கம்** : 376/20

**எதிர்**

கரலிஞ்ஞவாஸ் ஐயசூரிய படபெதிகே பிரசாத் ஹேமந்த அல்லது பிரசாத் ஹேமந்த ஜயசூரிய (சிஹல ரைஸ் புரொடக்ட் (பிரைவேட்) லிமிடெட், பணிப்பாளர்), இல. 99/1, கனன்கொல்ல, பராக்கிரம சமுத்திரம், பொலன்னறுவை.

**எதிராளி**

பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில் 585/DR/18, என்ற இலக்க வழக்கில் 2019.05.17ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்வுக்கு ஏற்ப, எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனத்தை தடை ஏற்படுத்தி விற்பனை செய்தல் எழுத்தாணையின் அடிப்படையில் வழக்காளிக்கு வருமதியான ரூபாய் 1,904,943.69 தொகையையும் மற்றும் அத்தகைய தொகையை அறவிடுவதற்காக வழக்காளிக்கு ஏற்படுகின்ற செலவினங்களையும் எதிராளியிடமிருந்து மீட்டுக் கொள்வதற்காக 2020.10.14ஆம் திகதி பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் மூலம் தடையேற்படுத்தப்பட்ட அத்தகைய வழக்கின் எதிராளிக்கு சொந்தமான கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனங்களை,

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி காலை 11.30 மணிக்கு அத்தகைய ஆதனங்கள் அமைந்துள்ள இல. 99/1, கனன்கொல்ல, பராக்கிரம சமுத்திரம், பொலன்னறுவை என்ற முகவரியில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

**தடையேற்படுத்தப்பட்டுள்ள ஆதனங்கள்**

1. தொஷிபா 32 அங்குல தொலைக்காட்சிப் பெட்டி 01
2. இனோவெக்ஸ் வானொலி 01
3. தொலைக்காட்சி வைக்கும் ஸ்டேண்ட் 01
4. மஞ்சள் நிற பிளாஸ்டிக் கதிரைகள் 03
5. நாற்காலியுடன் 06 துண்டுகளைக் கொண்ட பலகைக் கதிரைத் தொகுதி
6. கதிரையொன்றுடன் எழுதும் மேசை 01
7. 06 கதிரைகளுடன் கண்ணாடி உணவு மேசை 01
8. 05 துண்டுகளைக் கொண்ட தேக்கு கதிரைத் தொகுதி 01
9. எஸ்ஜீ ஒற்றைக் கதவு குளிர் சாதனப் பெட்டி 01
10. சிங்கர் தையல் இயந்திரம் 01
11. செம்சுங் 40 அங்குல தொலைக்காட்சி டிவீடீ பிளேயர்
12. கணனித் திரையுடன் கூடிய சீசீடீவி கெமரா முறைமை
13. 4 x 4 தொலைக்காட்சி ஸ்டேன்ட் 01
14. MIRA தரை மின்விசிறி 01
15. 06 அடி இரட்டைக் கதவு பலகை அலுமாரி
16. JAC கொதி நீர் ஷவர் 01
17. ரிச் பவர் தரை மின் விசிறி 01
18. 06 அடி பலகை கண்ணாடி அலுமாரி 01
19. 06 அடி இரட்டை கதவு உருக்கு அலுமாரி 01
20. அலுமாரியுடன் கூடிய இஸ்திரிக்கை பலகை 01
21. SL 3901 - AAG தரைத் தராசு
22. Royal தரைத் தராசு 01
23. IDEN - FAN கல் மண் அகற்றுகின்ற இயந்திரம் 01
24. FAN - DE SPNIER SEAKER சல்லடை
25. நவீன உதிரிப்பாகங்களுடன் கூடிய நெல் அரைக்கும் இயந்திரம் 1
26. மாவு அரைக்கும் இயந்திரம் 01
27. சிறிய மின் தராசு 01

**கையொப்பம்**

**பதிவாளர்**

**ஏ.எஸ். திசாகே**
**பிரதிப் பதிவாளர்**
**பிரதி பிஸ்கால்/ மரணசாசன அலுவலர்**
**மாவட்ட நீதவான் நீதிமன்றம்,**
**பொலன்னறுவை.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

---

## மக்கள் வங்கி

### 1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 24.01.2020 திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ.எஸ். லோரன்ஸ் அவர்களால் 24.10.2017 ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11665 மற்றும் 16.05.2019ம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இலக்கம் 13054 கொண்ட முறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் 2007ம் ஆண்டு இலக்கம் 07 கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் PV 70552ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான மட்டுப்படுத்தப்பட்ட சன்சார இன்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் (தனியார்) நிறுவனம் கடன்பாடு கொண்டவர் என்ற வகையிலும் செல்லஹேவாகே துமிந்த சந்தன செல்லஹேவா ஈட்டாளர் என்ற வகையிலும் தவணை தவறியுள்ளமையாலும் இலக்கம் 11665 மற்றும் இலக்கம் 13054 கொண்ட முறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் குறிப்பிட்ட முறிகளின் கீழ் தற்போது பதினான்கு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து அறுநூறு ரூபாய் (ரூபா 1,476,600/-) மற்றும் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஐயாயிரத்து ஐந்நூற்றி அறுபது ரூபாய் (ரூபா 4,225,560/-) மற்றும் நாற்பத்தி மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாநூறு ரூபாய் (ரூபா 4,319,400/-) மற்றும் இருபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து - ஐநூற்றி இருபது ரூபாய் (ரூபா 2,483,520/-) பணத்தொகைகள் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் பதினான்கு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து அறுநூறு ரூபாய் (ரூபா 1,476,600/-) பணத்தொகைக்கு 26.06.2019ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 19% வட்டியுடன் மற்றும் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஐயாயிரத்து ஐந்நூற்றி அறுபது ரூபாய் (ரூபா 4,225,560/-) பணத்தொகைக்கு 26.02.2019ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 19% வட்டியுடன் மற்றும் நாற்பத்தி மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாநூறு ரூபாய் (ரூபா 4,319,400/-) பணத்தொகைக்கு 26.06.2019ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 19% வட்டியுடன் மற்றும் இருபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து ஐந்நூற்றி இருபது ரூபாய் (ரூபா 2,483,520/-) பணத்தொகைக்கு 23.06.2019ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 19% வட்டியுடன் பணத்தொகைகள் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L" பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட பதினான்கு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து அறுநூறு ரூபாய் (ரூபா 1,476,600/-) மற்றும் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஐயாயிரத்து ஐந்நூ ற்றி அறுபது ரூபாய் (ரூபா 4,225,560/-) மற்றும் நாற்பத்தி மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாநூறு ஷரூபாய் (ரூபா 4,319,400/-) மற்றும் இருபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து ஐந்நூற்றி இருபது ரூபாய் (ரூபா 2,483,520/-) பணத்தொகைகள் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது.

மேலும் பதினான்கு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து அறுநூறு ரூபாய் (ரூபா 1,476,600/-) பணத்தொகைகளை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் சமரவிக்ரம என்பவர்களினால் குறிப்பிட்ட இலக்கம் 11665 மற்றும் 13054 கொண்ட முறிகளின் பிரகாரம் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

01. மேல் மாகாணம் , கம்பஹா மாவட்டம் சியனே கோரளை அதிகாரிபத்துவ களனிய பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட களனிய பிரதேச சபை எல்லையில் இலக்கம் 264, களனிய கிராம சேவைப் பிரிவில் களனிய கிராமத்தில் அவுபன் எஸ்டேட் எனப்படும் காணிக்கு உத்தரவு "பெற்ற நில அளவையாளர் யூ ஹெட்டி ஆரச்சி அவர்களால் 18.03.2010ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 29/2010 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் X எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கில்** யூ அமரசிங்க மற்றும் எஸ்.காந்தி என்பவர்களின் காணியும் **கிழக்கில்** பொல்ஹேன பாதையின் 2ம் ஒழுங்கையும் **தெற்கில்** எல்.எஸ்.குமாரவின் காணியும் மற்றும் **மேற்கில்** பீ.பரணகம் என்பவரின் வாரிசுகளின் காணியும் எல்லைகளாக அமைந்த பன்னிரண்டு தசம் ஆறு (ஏ.00. றூ.00 பே.12.6) விசாலமான காணியும் அதற்குறப்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும் இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் இலக்கம் G 63/119ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

02. மேல் மாகாணம் , கம்பஹா மாவட்டம் சியனே கோரளை அதிகாரி பத்துவ களனிய பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட களனிய பிரதேச சபை எல்லையில் இலக்கம் 264, களனிய கிராம சேவைப் பிரிவில் களனிய கிராமத்தில் கொரக்கஹ கும்புர கெபெல்ல எனப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். டப்ளியூ.டீ.எஸ்.டீ.சில்வா அவர்களால் 26.08.2000ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 5124 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் A1 எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கில்** ஐ.வீரசேகர் என்பவரின் காணியும் **கிழக்கில்** லியோ மாவத்தையும் **தெற்கில்** ஏஇஸட் எனும் காணியும் மற்றும் **மேற்கில்** கே.எம். சோமரத்ன என்பவரின் காணியும் எல்லைகளாக அமைந்த பதினான்கு தசம் ஐந்து (ஏ.00. றூ.00 பே. 14.5) விசாலமான காணியும் அதற்குறப்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் இலக்கம் G 63/140ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

03. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் சியனே கோரளை அதிகாரிபத்துவ களனிய பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட களனிய பிரதேச சபை எல்லையில் இலக்கம் 264, களனிய கிராம சேவைப் பிரிவில் களனிய கிராமத்தில் மில்லகஹவத்தை மற்றும் நாகஹஹேன எனப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பீ.விஜேவீர அவர்களால் 23.05.2007ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2775 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் A எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கில்** இலக்கம் 1561 கொண்ட வரைபடத்தில் காணப்படும் D எனும் காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் **கிழக்கில்** எஸ். அல்விஸ் மற்றும் ஏனையவர்களின் காணியும் **தெற்கில்** பாதையும் மற்றும் **மேற்கில்** இலக்கம் 1561A எனும் வரைபடத்தில் காணப்படும் E1 எனப்படும் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த பதினொன்று தசம் ஒன்று இரண்டு (ஏ.00. றூ.00 பே.11.12) விசாலமான காணியும் அதற்குறப்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும் இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் இலக்கம் G 86/09ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட வரைபடத்தில் காணப்படும் மேலாகவும் நெடுகிலும் அமைந்துள்ள பாதை (பாதை ஒதுக்கீடு)


**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**மக்கள் வங்கி**
**பிரதேச தலைமை அலுவலகம்**
**இல: 131, கண்டி வீதி**
**பெலும்மஹர முதுன்கொடை**

**ஒப்பமிட்டவர்**
**பிரதேச முகாமையாளர்**
**கம்பஹா.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE



The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - நுவரெலியா

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணம் மற்றும் திருத்தவேலை திட்டங்களுக்காக நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | விலைக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் | 2022-04-08ஆம் திகதி முதல் 2022-04-28ஆம் திகதி வரையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹாவாஎலிய, நுவரெலியாவில். |
| 2 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2022-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் விலைமனுக்களை பெற்றுக்கொண்ட நிறுவனங்களுக்கு பதிவுத் தபாலில் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் விலைமனுக்களை உள்ளிடலாம். |
| 3 | விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் | 2022-04-29ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து |
| 4 | விலைக்கோரல் பிணை முறி | இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண காப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியிலான விலைக் கோரல் பிணை முறியொன்றை சகல விலைமனுக்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பிணை முறியின் செல்லுபடிக் காலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் வரையிலாக இருத்தல் வேண்டும். |
| 5 | விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் | விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். |
| 6. | விலைக்கோரலுக்கு இயைபான விபரங்களைக் பெற்றுக்கொள்வதற்கு | நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம்: 052-2234482<br>சகல வேலை விடயங்களுக்கும் மாவட்டப் பொறியியலாளர் - சுகாதாரக் கட்டிடங்கள், நுவரெலியா. தொலைபேசி இல. 052-2235865 |

| | நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் | பதிவு (CIDA Grade) | பொறியியலாளர் அளவுப் பத்திர தொகை (வெட் இன்றி) ரூபா | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி: ரொக்கப் பணமாக (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி: ரொக்கப் பணமாக அல்லாவிடில் (ரூபா) | பிணை முறியின் செல்லு படிக்காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **ஆரம்ப சுகாதார சேவையை வலுவூட்டும் திட்டம் (PSSP)** | | | | | | |
| 01 | அம்பேவெல ஆரம்ப மருத்துவ பிரிவில் தரை நிலைத்தன்மையை அமைத்தல் | C-8,C-9 | 1,149,625.00 | 2000.00 | 11,497.00 | 22,993.00 | 2022/07/15 |
| 02 | லக்ஷபான பிரதேச வைத்தியசாலையில் குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளின் திருத்தவேலைகள் | C-8,C-9 | 1,163,430.10 | 2000.00 | 11,635.00 | 23,269.00 | 2022/07/15 |
